REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2024 ஒக்டோபர் 7 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 92 இல. 239 | Monday 07, October, 2024 | 16பக்கங்கள் | 50/-

## கிழங்கு, பெ.வெங்காயம் விசேட இறக்குமதி வரிகள் அதிகரிப்பு



ஒரு கிலோ உருளைக் கிழங்குக்கான விசேட இறக்குமதி வரியை பத்து ரூபாவால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், ஒரு கிலோ பெரிய வெங்காயத்துக்கான வரியை 20 ரூபாவால் அதிகரிப்பதற்கும் நிதி அமைச்சு

06

# ஈஸ்டர் தின தாக்குதல்; பாதிக்கப்பட்டோருக்கு விரைவில் நீதி, நியாயம்





## விசாரணைகள் துரிதப்படுத்தப்படும்

### மீண்டும் அவ்வாறானதொரு அழிவுக்கு இடமில்லை; நீர்கொழும்பு கட்டுவாபிட்டியில் ஜனாதிபதி அநுர உறுதி

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான விசாரணைகளை துரிதப்படுத்துவதோடு, மீண்டும் இவ்வாறானதொரு அழிவுக்கு இடமளிக்காத வகையில், பாதிக்கப்பட்டவர்களுக்காக நீதியும் நியாயமும் நிலைநாட்டப்படுமென ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உறுதியளித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் காயமடைந்தவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களுடன் நேற்று (06) நீர்க்கொழும்பு, கட்டுவாபிட்டி சென். செபஸ்தியன் தேவாலயத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இவ்வாறு உறுதியளித்தார்.

நேற்றுக் காலை கட்டுவாபிட்டி தேவாலயத்துக்கு சென்றிருந்த ஜனாதிபதி, உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கும் நினைவுத் தூபிக்கும் மலர் அஞ்சலி செலுத்தினார்.

ஜனாதிபதியின் வருகையை நினைவூட்டும் வகையில், நினைவுச் சின்னம் ஒன்றும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது.

06

## வெளிநாட்டு தூதரகங்களில் பணிபுரிபவர்களின் விபரங்கள்

### விரைவில் அறிக்கை வெளியாகும்



வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள இலங்கை அரசியல்வாதிகளின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் தொடர்பில், முழுமையான அறிக்கையை தயாரிக்குமாறு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அமைச்சுக்கு அறிவித்துள்ளார்.

இதற்கமைவாக இந்த அறிக்கை தற்போது வெளிவிவகார அமைச்சினால் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த அறிக்கை கிடைத்ததும் வெளியுறவுத்துறை அமைச்சர், நியமனங்கள் குறித்து நடவடிக்கை எடுப்பாரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 80 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு உள்ளதாக தகவல்

Ministry of Health

நாட்டில், சுமார் 80 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த வருடம் நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் சுமார் 300 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவியது. இருந்த போதிலும் இதுவரையில் அவை விநியோகிக்கப்பட்டு விட்டது.

அத்தியாவசிய சேவைகள் இடையூறு இல்லாமல் தொடர்ந்து முன்னெடுப்பதை உறுதி செய்யும் வகையில், பலதரப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன .

06

## கிழக்கு பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா



2,340 பேருக்கு பட்டமளித்து கௌரவம்

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2023ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழா, நேற்று முன்தினம் முதல் நடைபெற்று வருகிறது. இப்பல்கலைக்கழகத்தின் 28 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவான இது, நேற்றும் நேற்று முன்தினமும் (05 மற்றும் 06 திகதிகளில்) கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கத்தின் ஒருங்கிணைப்பில் நல்லையா ஞாபகார்த்த மண்டபத்தில் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வேந்தர்,

06

## 56 பாகிஸ்தான் கைதிகள் நாட்டுக்கு அனுப்பிவைப்பு

### குற்றவாளிகளைப் பரிமாறும் சட்டத்தின் கீழ் ஏற்பாடு

சிறைக்கைதிகளை பரிமாற்றிக்கொள்வதற்கான ஒப்பந்தத்திற்கு அமைவாக 1995 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க குற்றவாளிகள் பரிமாறும் சட்டத்தின் கீழ், நாட்டில் போதைப்பொருள் குற்றச்சாட்டில் சிறை தண்டனை அனுபவித்து வந்த 56 பாகிஸ்தான் கைதிகள் நேற்று (06) பாகிஸ்தானுக்கு மாற்றப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக சிறைச்சாலை ஆணையாளரும் ஊடக பேச்சாளருமான காமினி பீ. திசாநாயக்க தெரிவித்தார்.

நாட்டின் சிறையிலிருந்த 51 பாகிஸ்தான் ஆண் கைதிகள் மற்றும் 05 பெண் கைதிகள் அடங்கலாக

06

### தரம் 5 பரீட்சை குறித்து புதிய அறிவிப்பு

## அதிகளவு வினாக்கள் கசிந்திருப்பின் உடன் பொலிஸாருக்கு அறிவிக்கவும்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் 03 வினாக்கள் கசிந்துள்ளதாக கூறப்படுவதைப்போன்று, ஏனைய வினாக்கள் கசிந்துள்ளமைக்கான ஆதாரம் இருப்பின், அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பான தகவல்களை இன்று (07)அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டுமென பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

06

## இலங்கை தொடர்பான தீர்மானம் ஓராண்டு காலத்துக்கு நீடிக்கப்படும்

### புதனன்று பிரேரணை, வாக்கெடுப்பின்றி நிறவேற்ற முடிவு

இல ங்கை தொடர்பில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்தை மேலும் ஓராண்டு காலம் நீடிப்பதற்கு பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால், தயாரிக்கப்பட்டிருக்கும் பிரேரணை எதிர்வரும் புதன்கிழமை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படுமென நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகிறது.

ஜெனிவாவில் கடந்த செப்டெம்பர் (09) ஆரம்பமான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடர்,

06

## யாழ், மட்டு. மாவட்டங்களில் புதுமுகங்களுடன் களமிறங்கும்

### அம்பாறையில் தமிழரசுக் கட்சி தனித்து போட்டி



**வவுனியா விசேட நிருபர்**

இலங்கை தமிழரசுக் கட்சி யாழ். மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் புது முகங்களுடன் களமிறங்குவதுடன், அம்பாறையில் தனித்து போட்டியிடவுள்ளதாக தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். வவுனியா விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று (06) நடைபெற்ற

06

### இஸ்ரேலிய விமான தாக்குதலால்

## ஹிஸ்புல்லாவின் அடுத்த தலைவரும் உயிரிழப்பு



லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய விமானத் தாக்குதலில், ஹிஸ்புல்லாவின் அடுத்த தலைவராக கருதப்பட்ட ஹசீம் சபிதீன் என்பவரும் கொல்லப்பட்டதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் கடந்த மாதம் (28) ஹிஸ்புல்லா அமைப்பின் தலைமையிடத்தை குறிவைத்து இஸ்ரேல் குண்டுமழை பொழிந்தது. இந்த அதிரடி தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் நஸ்ரல்லா கொல்லப்பட்டார் இதனை தொடர்ந்து லெபனான் மீதான தாக்குதலை இஸ்ரேல் தீவிரப்படுத்தி

06

## லண்டன்–கொழும்பு சேவை விமான பாதையில் மாற்றம்

### இஸ்ரேல் மீதான தாக்குதல் எதிரொலி



லண்டன், கொழும்பு க்கிடையிலான விமானப் பாதையை மாற்றம் செய்துள்ளதாக ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதையடுத்து, ஈராக் வான் வெளியைத் தவிர்ப்பதற்காக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ்

06

## இறக்குமதி தேங்காய் எண்ணெயில் கலப்படம் எனப் போலித்தகவல்கள்

### அச்சம் தேவையில்லை, PHI சங்கம் அறிவிப்பு

இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் தொடர்பில் நுகர்வோர் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாமென, பொதுச் சுகாதார பரிசோதகர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் குறித்து சமூகத்தில் எழுந்துள்ள சந்தேகங்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே, சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டுக்குள் தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்யும் போது, சுங்கச்சாவடியிலுள்ள உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவின் உணவு பரிசோதகர்களால் விசேட பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

06

## அம்பாறையில் தனித்துப் போட்டி ஏனைய இடங்களுக்காக பேச்சு



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அம்பாறையில் தனித்து போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளதோடு, ஏனைய இடங்களில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் போட்டியிடுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாக கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இம்முறையும் தனியாகவும் கூட்டாகவும் இணைந்து போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளது. அந்த வகையில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான

06

## ஐ.தே.க தலைமையிலான புதிய கூட்டணிக்கு ரணில் தலைமை

### முன்னாள் எம்.பி.சமன் ரத்னபிரிய!



ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய கூட்டணிக்கு ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்குவாரென, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

தற்போது புதிய கூட்டணியை உருவாக்கும் நோக்கில் எதிர்க் கட்சிகள் பலவும் கலந்துரையாடல்களை

06

# நகர்வலம்



## எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில்;
# களுத்துறை மாவட்டத்திலிருந்து 11 உறுப்பினர்கள் தெரிவாவர்
## மாவட்ட செயலாளர் ஜனக கே குணவர்தன

(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் ஆரம்பம் முதல் 10 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவான களுத்துறை மாவட்டத்திலிருந்து, இந்த வருடம் முதல் 11 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாக மாவட்ட செயலாளர் ஜனக கே. குணவர்தன தெரிவித்தார்.

களுத்துறை மாவட்டத்தின் வாக்காளர் தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக எட்டு தேர்தல் தொகுதிகளைக் கொண்ட களுத்துறை மாவட்டத்திலிருந்து தெரிவாகும் பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகை இம்முறை ஒன்றால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் வாக்காளர் தொகை அதிகரிப்பு மற்றும் விகிதாசார அடிப்படையில் மாவட்டத்திலிருந்து தெரிவாகும் உறுப்பினர்களின் தொகையும் 10லிருந்து 11ஆக உயர்ந்துள்ளது. களுத்துறை மாவட்டத்தில் 10 இலட்சத்து 24 ஆயிரத்து 244 பேர் இம்முறை பாராளுமன்ற தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் பதிவு அட்டவணையின் அடிப்படையில் பாராளுமன்ற தேர்தல் நடத்தப்படவுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தல் பிரகாரம் 735 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படுவதுடன் பாராளுமன்ற தேர்தலில் பரவலான விருப்பு வாக்குகள் எண்ணும் பணி இடம்பெறுவதால் 97 ஆக விருந்த வாக்கெண்ணும் நிலையங்களின் தொகை 125 ஆக அதிகரிக்கப்படவுள்ளதாகவும் மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி ஜய ஸ்ரீமா போதியை தரிசித்து ஆசி பெற்றார்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்



வரலாற்று சிறப்புமிக்க அநுராதபுரம் ஜய ஸ்ரீமா போதியை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தரிசித்து ஆசி பெற்றுக் கொண்டார்.

நேற்று முன்தினம் (05) அநுராதபுரத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி முதலில் அட்டமஸ்தானாதிபதி பல்லேகம ஹேமரதன நாயக்க தேரரை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டதோடு அவரிடம் நலம் விசாரித்தார்.

அதனையடுத்து உடமலுவ விகாரைக்குச் சென்றிருந்த ஜனாதிபதி வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் அட்டமஸ்தானாதிபதி தலைமையிலான மகா சங்கத்தினரால் செத் பிரித் பாராயணம் செய்து ஆசி வழங்கப்பட்டது.

அங்கு அநுராதபுரம் லங்காராம விகாராதிபதி ரலபனாவே தம்மஜோதி நாயக்க தேரர், ருவன்வெலி, ஜேதனாராம அதிபதி வண ஈதலவெட்டுனுவெவே குணதிலக தேரர், தூபாராமய விகாராதிபதி வண கவுகல்லே ஞானித தேரர், மிரிசவெட்டிய விகாராதிபதி வெலிஹேனே சோபித தேரர், அபயகிரி விகாராதிபதி கலாநிதி வண கலஞ்சியே ரத்னசிறி தேரர், வரலாற்று சிறப்பு மிக்க இசுறுமுனி விகாராதிபதி வண மாதவ சமவசல தேரர் அனுராதபுரம் ஶ்ரீ சம்புத்த ஜெயந்தி விகாரையின் வண நூகேதென்னே பஞ்ஞாணந்த தேரர் தலைமையிலான மகா சங்கத்தினர் கலந்து கொண்டனர்.

இதன்போது வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச, மாவட்ட செயலாளர் ரஞ்சித் விமலசூரிய உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# கலாவெவ முஸ்லிம் ம. கல்லூரி சா/த பரீட்சையில் சிறந்த பெறுபேறு

( கல்நேவ தினகரன் விசேட நிருபர் )

வெளியான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளில் தமிழ்மொழி மூலம் கலாவெவ முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து தோற்றிய மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளதாக, பாடசாலை அதிபர் சதாத் ரசூல் தெரிவித்தார்.

சிறந்த பெறுபேறாக ஏம்.எம். நாதீஸ், எம்.அஹ்லா ,ஏ.டப்ளியூ.வபா ஆகிய மூன்று பேரும் '9ஏ' சித்திகளைப் பெற்றுள்ளதுடன், எம்.எம்.பாத்திமா சஹானி, எம்.ஏ.அப்சான் பேகம், வை.பாத்திமா நாதீயா ஆகிய மூன்று பேரும் 8ஏ, 1 பீ சித்தியினை பெற்றுள்ளனர். அத்தோடு பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 83% வீதமான மாணவர்கள் உயர் தரப் பிரிவுகளில் கல்வி கற்க தகுதி பெற்றுள்ளதாகவும் பாடசாலை அதிபர் மேலும் தெரிவித்தார்.

பலாகல கல்விக் கோட்ட நேகம முஸ்லிம் மகா வித்தியாலய மாணவன் எம்.எஸ். துபைல் அகமட் நெல்லியகம முஸ்லிம் மகா வித்தியாலய மாணவி எம்.ஐ.ரீஹா ஆகியோர் 9ஏ சித்திகளையும் பெற்றுள்ளனர்.

# ஸ்கை தமிழ் விருது விழாவுக்கு ஹாசிம் உமர் பௌண்டேசன் அனுசரணை




ஹாஷிம் உமர் பௌண்டேசனின் பிரதான அனுசரணையில் ஸ்கை தமிழ் விருது வழங்கும் மாபெரும் விழா எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி ஒலுவில், தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவுக்கு பிரதம அதிதியாக ஹாஷிம் உமர் பௌண்டேசனின் ஸ்தாபகரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகருமான புரவலர் ஹாஷிம் உமர் கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் இவ்விருது விழாவில் அகில இலங்கை ரீதியாக பல்வேறு துறைகளில் சாதித்த ஆளுமைகள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த விழாவுக்கு ஹாஷிம் உமர் பௌண்டேசனினால் வழங்கப்பட்ட காசோலையை ஸ்கை தமிழ் பணிப்பாளர் ஜே.எம். பாசித் இந்த நிகழ்விற்கு பிரதான ஊடக அனுசரணை வழங்கவுள்ள தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி ஆகிய பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் மற்றும் ஸ்கை தமிழ் உதவி செய்தி முகாமையாளர் அஸ்ரி ஆகியோர் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் நடைபெற்றுவரும் பாகிஸ்தான் உணவுக்கண்காட்சி



(அஷ்ரப் ஏ சமத்)

பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலய ஏற்பாட்டில் 'பாகிஸ்தான் உணவுக்கண்காட்சி' கொழும்பு மரியட் ஹோட்டலில் (03) நடைபெற்றது. இக் கண்காட்சிக்கு ஸ்ரீலங்கன் ஏயர்லைன் மற்றும் இஸ்லாமாபாத் மரியட் ஹோட்டல் அனுசரணை வழங்கும். இந் நிகழ்வு கடந்த 03ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரை நடைபெறுகின்றது. ஆரம்ப வைபவத்தில் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் ஓய்வு மேஜர் ஜெனரல் பஹீம் உல் அசீஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இந் நிகழ்வில் கொழும்பிலுள்ள ஏனைய வெளிநாட்டுத் தூதுவர்கள், தூதரக அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## சிறையிலுள்ள கணவனுக்கு;
# போதை கலந்த உணவு கொண்டு சென்ற பெண்ணொருவர் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கணவருக்கு மிகவும் சூட்சுமமான முறையில் போதைப்பொருள் கலந்த உணவை கொண்டு சென்ற பெண்ணொருவரை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கைது செய்துள்ளனர்.

அநுராதபுரம் சுச்சரித்தகம பகுதியைச் சேர்ந்த (25) வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் குற்றம் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது கணவரைப் பார்ப்பதற்கு குறித்த பெண் சிறைச்சாலைக்கு சென்றுள்ளார்.

இதன் போது சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது இந்த பெண் கொண்டு சென்ற உணவுப் பொதியில் இருந்த தேங்காய் சம்பலில் போதைப்பொருள் கலந்திருப்பதை உத்தியோகத்தர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இதனையடுத்து சந்தேக நபரான பெண் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணை அனுராதபுரம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மாவனல்லையில் இன்று இலவச பயிற்சி பட்டறை

புத்தளம் தினகரன் நிருபர்

ஆசிரியர்களுக்கான இலவச பயிற்சி பட்டறை இன்று (07) திங்கட் கிழமை மாவனெல்லை ராலியா வரவேற்பு மண்டபத்தில் பி.ப 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது. பாலர் பாடசாலை ஆசிரியர்கள், தன்னார்வ ஆசிரியர்கள், டிப்ளோமா மற்றும் இளங்கலை மாணவர்கள், கற்பித்தல் துறையில் ஆர்வம் உள்ளவர்கள் அத்துடன் பெற்றோர்களும் இதில் பங்கு கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

கலந்துகொள்ளும் அனைவருக்கும் இலவசமாக சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. முற்றிலும் இலவசமான முறையில் அமேசான் கல்லூரி மற்றும் அமேசான் கெம்பஸ் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

ஆங்கிலம், தமிழ் மற்றும் சிங்கள மொழியில் வளவாளர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளதுடன், அமேசான் கல்லூரியின் இயக்குனரும், சர்வதேச பயிற்றுவிப்பாளரும், உளவள ஆலோசகரும், மனோதத்துவியல் நிபுணரும், பேராதனை பல்கலைக்கழகத்தின் பகுதி நேர விரிவுரையாளருமான கலாநிதி இல்ஹாம் மரிக்கார் அமெரிக்க, குளோபல் முன்னோடிகள் மற்றும் இன்டர்நேஷனல் எடியூகேஷன் அமைப்பின் தலைவர் டாக்டர் கேரி கோல்ஸ்டன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# ஹம்பாந்தோட்டை இந்திய துணைத்தூதரக தூதுவர் தென் மாகாண ஆளுநருடன் சந்திப்பு

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்



ஹம்பாந்தோட்டை இந்திய துணைத்தூதரக துணைத்தூதுவர் ஹர்விந்தர் சிங் அண்மையில் புதிதாக நியமிக்கப்பட்ட தென் மாகாண ஆளுநர் பந்துல ஹரிஸ் சந்திரவை தென் மாகாண ஆளுநர் காரியாலயத்தில் மரியாதையின் நிமித்தம் சந்தித்து வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டார்.

இச்சந்திப்பில், இலங்கை இந்தியா இரு நாடுகளுக்கிடையிலான நீண்டகால நற்புறவு மற்றும் ஹம்பாந்தோட்டை இந்திய துணை தூதரகத்தினால் தென் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் ஹம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் இந்தியாவினால் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அறிவோர் ஒன்றுகூடல்

சிரேஷ்ட சட்டத்தரணி க. கபிலனின் தலைமையில் எதிர்வரும் 09ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் “தகவல் அறியும் உரிமை'' எனும் தலைப்பில் சட்டத்தரணி ம. யூட் டினேஸ் உரை நிகழ்த்தவுள்ளார்.

**இதேவேளை**, சமூக ஆய்வாளர் பூங்கோதை தங்கமயில் தலைமையில் எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இலக்கியக்களம் நிகழ்ச்சியில் “பெனியின் ‘பால்மரக்காடு’ எனும் நாவலை முன்வைத்து...!'' எனும் தலைப்பில் எழுத்தாளர் ரா. நித்தியானந்தன் உரை நிகழ்த்தவுள்ளார்.

அரநாயக்க வில்பொல யுனைட்டட் விளையாட்டுக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி திப்பிட்டிய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. எட்டு அணிகள் பங்கு பற்றிய இப் போட்டி நிகழ்வில் "வில்பொல கிரிக்கட்ஸ்" அணியினர் வெற்றி பெற்று தனக்குரிய சம்பியன் கின்னத்தை சுவீகரித்துக் கொண்டனர். இதில் இரண்டாம் இடத்தை "வில்பொல டைட்டன்ஸ்" அணியினர் பெற்றுக் கொண்டனர்.



# வெளிநாட்டு சிகரட்டுகளுடன் சந்தேக நபரொருவர் கைது

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்



புத்தளம் தப்போவ பஸ் நிலையத்திற்கு அருகில் வைத்து ஒருதொகை வெளிநாட்டு சிகரட்டுகளுடன் சந்தேக நபரொருவர் சனிக்கிழமை (5) விஷேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமேல் கடற்படை கட்டளையின் புத்தளம் தம்பபண்ணி கடற்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில், கடற்படையினரும், விஷேட அதிரடிப்படையினரும் இணைந்து மேற்கொண்ட விஷேட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டில் இருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதாக தெரிவிக்கப்படும் குறித்த சிகரட்கள், விற்பனை செய்ய தயாராக இருந்த போது, சந்தேக நபர் விஷேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடம் இருந்த வெளிநாட்டு சிகரட்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வவுனியா பகுதியைச் சேர்ந்த 54 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபரிடமிருந்து 101 வெளிநாட்டு சிகரட் பெட்டிகள் விஷேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இது விடயமாக புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 ஒக்டோபர் 7 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 04.42
ளுஹர் - 12.00
அஸர் - 03.16
மஃரிப் - 05.59
இஷா - 07.09

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் புரட்டாதி 21
ராகுகாலம் : காலை : 7.32 - 9.02வரை
சுபநேரம் : பகல் : 12.02 - 1.32வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# வரி நிலுவைகளைச் சேகரிக்க வீடுகளுக்கு அதிகாரிகள் வருகை

## இறைவரித் திணைக்களம் அறிவிப்பு

2023 /2024 வருமான வரி நிலுவைகளை கடந்த செப்டெம்பர் 30 க்கு முன்னர் செலுத்துமாறு இறைவரித் திணைக்களம் அறிவித்திருந்த நிலையில்,

குறிப்பிட்ட திகதிக்குள் நிலுவைத் தொகை செலுத்தாத நபர்களின் வீடுகளுக்குச் சென்று நிலுவைத் தொகையை பெற்றுக்கொள்ளும் புதிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

வரி செலுத்துவோர், நிலுவையில் உள்ள அனைத்து வரிகளையும் செப்டம்பர் 30 க்கு முன்னர், சுயமதிப்பீட்டுக் கட்டண முறையின் கீழ் செலுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதுவரை நிலுவைத் தொகையை செலுத்தாத மக்களிடம் சென்று வரி நிலுவைகளை வசூலிக்கும் வேலைத் திட்டத்தை தமது திணைக்களம் கடந்த வெள்ளிக்கிழமை (04) முதல் ஆரம்பித்துள்ளதாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் சேபாலிகா சந்திரசேக்கர தெரிவித்தார்.

இதுவரை செலுத்தப்படாத சுயமதிப்பீட்டுக் கொடுப்பனவு முறையின் கீழ், நிலுவை வரிகளை அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கைகளை உடனடியாக நிறைவு செய்யுமாறு தனது அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின்

இவ்வருடத்துக்கான வருமான இலக்கு 2024 பில்லியன் ரூபாவென நிதி அமைச்சு அறிவித்துள்ளது. இதற்கிணங்க

செப்டெம்பர் 30ஆம் திகதிக்குள் 1,417 பில்லியன் ரூபா அறவிடப்படுமெனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். இது, இந்த ஆண்டு கொடுக்கப்பட்ட வருமான இலக்கில் எழுபது சதவீதத்துக்கும் அதிகமாகும் என்று கூறினார்.




2024 ஆம் ஆண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்கள வரலாற்றில் ஒரு வருடத்துக்கு வசூலிக்கப்படும் அதிக வருமான இலக்கு தனக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அடுத்த மாதம் தேர்தல் நடைபெறவிருப்பதால், தனது துறை அதிகாரிகளுக்கு அதிக வேலையாக இருப்பதாகவும், எப்படியாவது வருவாய் இலக்கை அடைய முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஆசிரியர் தொழிலின் அபிமானத்தை உயர்த்தி வைப்பதே எமது நோக்கம்

## ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



ஆசிரியர்களின் எதிர்பார்ப்புக்களை முடிந்த வரையில் மறுமலர்ச்சி பெறச் செய்து ஆசிரியர் தொழிலின் அபிமானத்தை உயர்த்தி வைப்பதே எமது நோக்கமாகுமென ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தனது ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி விடுத்துள்ள ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, அண்மைக் காலத்தில் அபிவிருத்தி கண்ட அனைத்து நாடுகளிலும் முக்கிய அங்கம் வகிப்பது கல்வியாகும்.

அதன்படி நாட்டை முன்னோக்கி கொண்டுச் சென்று மறுமலர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய முக்கியமான காரணி கல்வி என்பதை அரசாங்கம் அறிந்துகொண்டுள்ளது.

அதன் முன்னோடிப் பணியானது ஆசிரியர்களான உங்களையே சார்ந்திருக்கிறது.

உங்கள் பாடசாலைக்கு வரும் பிள்ளையை உலகத்தில் வலுவான அறிவுடன் போராடக்கூடியவர்களாக மாற்றும் இயலுமை உங்கள் வசமுள்ளது.

தொழிலாலும், வேதனத்தினாலும் அளவிட முடியாத பெரும் அன்பு ஆசிரியர் தொழிலுடன் இணைந்துள்ளது. ஆசிரியத் தாய், ஆசிரியர் தந்தை என்று போற்றப்படுவதும் ஆசிரியர் தொழிலை மட்டுமேயாகும். ஆனால், ஆசிரியர்களுக்கும் எதிர்கால எதிர்பார்ப்புக்கள் உள்ளன. அந்த எதிர்பார்ப்புக்களை முடிந்த வரையில் மறுமலர்ச்சி பெறச் செய்து ஆசிரியர்கள் மீது கண்ணீர் புகைத் தாக்குதல் நடத்தப்படாமல், தாக்கப்படாமல் ஆசிரியர் தொழிலின் அபிமானத்தை உயர்த்தி வைப்பதே எமது நோக்கமாகும்.

வாழ்க்கைப் பயணத்தில் பிள்ளைகளின் அறிவு மேம்பாட்டுக்கு வழிகாட்ட தங்களை அர்ப்பணித்த ஆசிரிய தாய், தந்தையருக்கு உலக ஆசிரியர் தினம் உபகாரமாக அமையும் என்று நம்புகிறேன் என்றும் ஜனாதிபதி தனது ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# தேசிய மக்கள் சக்தியில் களமிறங்கும் புது முகங்கள்

பாராளுமன்றத் தேர்தலில் பொறியியலாளர்கள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள், வர்த்தகர்கள், கலைஞர்கள், மாணவர் தலைவர்கள், விவசாயத் தலைவர்கள் எனப் பல புதிய முகங்களை களமிறக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக, தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று உறுப்பினரும் முன்னாள் தென் மாகாண சபை உறுப்பினருமான நளின் ஹேவகே தெரிவித்துள்ளார்.

இவர்கள் நீண்டகாலமாக அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தாலும் பொது அரங்குக்கு வராதவர்களெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



1948ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையின் அரசியல் வரலாற்றில் தந்தை, மகன்கள் இல்லாத, செல்வந்த குடும்பம் மற்றும் கடத்தல்காரர்கள் இல்லாத மிகவும் புத்திசாலித்தனமான குழுவுக்கு போட்டியிட, தேசிய மக்கள் சக்தி வேட்புமனுக்களை வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் நளின் ஹேவகே சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்காளர்களுக்கு பாராளுமன்றத்தை சுத்தப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் விருப்பு வாக்குகளின்றி ஒரே குழுவாக தேர்தலில் போட்டியிடுவார்களெனவும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

# தொலைபேசி வாடிக்கையாளர்களுக்கு விசேட சேவைகள் விரைவில் அறிமுகம்

## தொலைத் தொடர்புகள் சீர்திருத்த ஆணைக்குழு தெரிவிப்பு

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

தொலைத்தொடர்புகள் சீர்திருத்த ஆணைக்குழுவானது கையடக்க தொலைபேசிகளுக்காக Number portability (NP) சேவையை நடைமுறைப்படுத்துவதற்கு, பொது மக்களிடமிருந்து கருத்துக்களை கோரியுள்ளது.

அதனையடுத்து நாட்டில் கையடக்க மற்றும் நிலையான தொலைபேசி சேவைகளை பெற்றுக் கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு, இந்த சேவையை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த சேவையை மக்களுக்கு விரைவாக பெற்றுக் கொடுக்கும் நோக்கில், நாட்டில் தொலைபேசி சேவைகளை வழங்கும் நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி அதனை நடைமுறைப்படுத்தும் விதம் தொடர்பில் திட்டம் ஒன்றையும் தயாரித்துள்ளதாகவும் அந்த ஆணைக் குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் இந்த சேவை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், எந்த ஒரு கையடக்க தொலைபேசி வலையமைப்பு, தொலைபேசி சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் ஊடாக பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் தொலைபேசி பாவனையாளர்கள், தாம், தற்போது உபயோகப்படுத்தும் தொலைபேசி இலக்கத்தில் எந்த ஒரு மாற்றத்தையும் மேற்கொள்ளாமல் எந்த தொலைபேசி வலையமைப்பு ஊடாகவும் தொடர்ச்சியாக சேவைகளை பெற்றுக் கொள்ளும் வசதிகள் இதன் மூலம் வழங்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கொழும்பின் பல பகுதிகளிலும் தகன நிலைய இடவசதியை அதிகரிக்கவும்

*(மத்திய கொழும்பு குறூப் நிருபர்)*

கொழும்பில் பொரளை, மாதம்பிட்டி, ஜாவத்தை மற்றும் கிருலப்பனை ஆகிய பகுதிகளில் இயங்கும் தகன நிலையங்களுக்கான இட வசதியை, அதிகரித்து தருமாறு முன்னாள் மாநகரசபை உறுப்பினர் எச் கே காயத்ரி விக்கிரமசிங்க கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்படி பொது மயானங்களுக்கு கொண்டு வரப்படும் இந்துக்களின் சடலங்களை தகனம் செய்வதற்கு ஒரே ஒரு பிணவறை வசதி மட்டுமே உள்ளன. இந்நிலையில் அங்கு மேலதிக இட வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அவ்வாறு இந்த பொது மயானங்களுக்கு நாளொன்றுக்கு இரண்டு அல்லது மூன்று சடலங்கள் கொண்டுவரப்படும் போது, தமது சமய கிரியைகளை நிறைவேற்றுவதற்கு உறவினர்கள் காத்திருக்க வேண்டியுள்ளது.

அதனைக் கவனத்திற் கொண்டு மயானத்தின் நுழைவாயிலின் முன் சமய அனுஷ்டானங்களை மேற்கொள்ளக் கூடியவாறு இட வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் மாநகர சுகாதாரத் துப்புரவுப் பிரிவு பணிப்பாளர் மற்றும் பிரதம மருத்துவ அதிகாரியுமான ருவன் எல்.டி.எஸ்.விஜய முனியிடமே இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.நகர மண்டபத்தில் நடைபெற்ற சுகாதாரம் மற்றும் துப்புரவு குறித்த குழுவின் கூட்டத்தில்,இது தொடர்பில் தெரிவித்துள்ள பிரதம சுகாதார மருத்துவ அதிகாரி பொரளை மயானத்தில் இந்துக்களை தகனம் செய்வதற்காக தனி இடம் அமைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும், அதற்கான சாத்தியக்கூறு அறிக்கையை அடுத்த குழு கூட்டத்திற்கு முன் டெண்டர் செய்வதற்கு முன்மொழியப்பட்டதுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். அதற்காக 23 மில்லியன் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் செயற்திட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் மாநகர சபை உறுப்பினர் டபிள்யூ.எம்.தர்ஷன் டி சில்வா, அது தொடர்பில் தெரிவித்த போது,

கொழும்பு மாநகர சபையின் கீழ் இயங்கும் மயானங்களில் எரிவாயு மூலம் தகனம் செய்யக்கூடிய வகையில், உயிர்வாயு உற்பத்தி செய்யக்கூடிய உயிரி வாயு ஆலைகளை (Bio gas plants ) நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருவதாகவும் தனியார் துறையின் நிதி பங்களிப்புடன் அதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

# ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன: வேட்பாளர்களுக்கு நேர்முக பரீட்சை

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவோரை தெரிவு செய்யும் வகையில், பொதுஜன பெரமுன கட்சி நேற்று நேர்முகப் பரீட்சை நடத்தியுள்ளது.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலின் போது, கட்சியின் கொள்கையை முன்னெடுத்துச் செல்வதற்காக கூட்டணி ஒன்றை உருவாக்குவதற்கு அந்தக் கட்சி தீர்மானித்துள்ளதாகவும் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

எந்த விதத்திலும் பாராளுமன்ற உறுப்பினர்களை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில், புதிய கூட்டணி உருவாக்கும் நோக்கம் கிடையாதென தெரிவித்துள்ள அவர், கட்சியின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு மாத்திரமே இந்தப் புதிய கூட்டணி உருவாக்கப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சி எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக வேட்பு மனு பட்டியலை தயாரிக்க ஆரம்பித்துள்ளதாகவும் எதிர்வரும் தினங்களில் அனைத்து மாவட்டங்களுக்குமான வேட்பு மனு தாக்கல் செய்யப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நிதி வழங்குவதாக போலிப் பிரசாரம்

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

அரசியல் கட்சியில் இணைந்து கொள்ளும் நபர்களுக்கு 50,000 ரூபா வீதம் வழங்குவதாக சமூக வலைத்தளங்கள் மூலம் பரப்பப்படும் செய்திகள், உண்மைக்குப் புறம்பானவை என்றும் எவரும் அதில் ஏமாறக்கூடாது எனவும் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் திருமதி மேனகா பத்திரன தெரிவித்துள்ளார்.

இவ்வாறான செய்திகள் சமூக வலைத்தளங்களில் தொடர்ந்தும் பரப்பப்பட்டு வருவதால், எந்த சூழ்நிலையிலும் எவரும் தமது தனிப்பட்ட தகவல்களை வழங்குவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

06

# தொழு நோய் குறித்து எச்சரிக்கை

*(பாலமுனை விசேட நிருபர்)*

தொழுநோய் மற்றும் இது தொடர்பான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக பரிசோதனைகளைச் செய்து சிகிச்கை பெற்றுக் கொள்வது, அவசியம் என, கல்முனை பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.சி.எம். பஸால் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில். தொழுநோயானது தோலிலும் நரம்பிலும் ஏற்படக்கூடிய ஒரு நோயாகும்.தோலில் உணர்ச்சியற்ற தேமல் மற்றும் நரம்புகள் தடித்து காணப்பட்டால் அவை தொழுநோய்க்குறிய அறிகுறிகளாகும். அவ்வாறானவர்கள் தொழுநோய் சிகிச்சை நிலையங்களுக்கு சென்று பரிசோதனை செய்துகொள்வது அவசியமாகும்.

சில நேரம் தொழுநோயை அடையாளம் காண்பது கடினமாக இருக்கும். அதனை அறிவதற்கு மேலும் சில அறிகுறிகளும் உள்ளன. நரம்புகள் புடைத்து அல்லது தடித்து காணப்படல், கால்களில் ஆறாத புண்கள், கைகளின் மணிக்கட்டு மற்றும் விரல்கள் மடிக்க அல்லது அசைக்க முடியாத நிலை காணப்பட்டால் சிலவேளை அதுவும் தொழுநோயாக இருக்கக் கூடும்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்
மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

விலைமனுக்கோரல் (IFB)

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் |
| --- | --- |
| 01 | வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் "மகநெகும மஹமெதுர" வளாகத்தில் துப்பரவு சேவையினை வழங்கல், குப்பைகளை அகற்றுதல், வடிவமைக்கப்பட்டுள்ள நிலப்பரப்பு பகுதியினை பராமரித்தல் மற்றும் கட்டத்தின் கீழ்த் தளம் முதல் 9வது மாடி வரை சுத்தம் செய்தல். ஒப்பந்த இலக்கம் : RDA/DPR/PRO/SE/NCB/ADMA/2024/114 |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்காக தேசிய போட்டி ஏல நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2024.10.07 ஆம் திகதி முதல் 2024.10.28 ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளத்தை www.rda.gov.lk பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தலைவர்,
வீ.அ.அ.ச கொள்முதல் குழு,
வீதி அபிவிவிருத்தி அதிகாரசபை.

SELACINE

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்
மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

விலைமனுக்கோரல் (IFB)

கேரகல, இங்கிரிய, கொத்மலை, மெதயாய, மெதவச்சிய, மற்றும் சூரியவெவ ஆகிய அஸ்போல்ட் ஆலைகளுக்கான போக்குவரத்து சேவையினை வழங்கல்.

| அஸ்போல்ட் ஆலை | ஒப்பந்த இலக்கம் | ஆலைக்கான டம்ப் டிரக்குகளின் சராசரி எண்ணிக்கை (டிப்பர்கள்) |
| --- | --- | --- |
| கேரகல | RDA/DPR/PRO/SE/NCB/ASPL/KER/2024/129 | 10 Nos (15 MT) |
| இங்கிரிய | RDA/DPR/PRO/SE/NCB/ASPL/ING/2024/130 | 10 Nos (15 MT) |
| கொத்மலை | RDA/DPR/PRO/SE/NCB/ASPL/KOT/2024/131 | 10 Nos (15 MT) |
| மெதயாய | RDA/DPR/PRO/SE/NCB/ASPL/MEY/2024/132 | 10 Nos (15 MT) |
| மெதவச்சிய | RDA/DPR/PRO/SE/NCB/ASPL/MEW/2024/133 | 10 Nos (15 MT) |
| சூரியவெவ | RDA/DPR/PRO/SE/NCB/ASPL/SOO/2024/134 | 10 Nos (15 MT) |

தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய மேல்குறிப்பிடப்பட்டுள்ள அஸ்போல்ட் ஆலைகளுக்கான அஸ்போல்ட் போக்குவரத்துச் சேவையினை வழங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2024.10.07 ஆம் திகதி முதல் 2024.10.29 ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையதளம் www.rda.gov.lk இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

SELACINE

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் புரட்டாதி மாதம் 21ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் ஆகிர் பிறை 03

## குறள் தரும் சிந்தனை



இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்

புலனடக்கம் வாய்ந்த தூயவர், வறுமையில் வாடும் நிலையிலே கூடப் பிறர் பொருளைக் கவர்ந்திட விரும்ப மாட்டார்.

# ஒரு வருட காலமாக முடிவின்றி தொடரும் பரிதாப உயிரிழப்புகள்!

பலஸ்தீனின் காஸா மீதான யுத்தம் ஆரம்பமாகி இன்று 07 ஆம் திகதியுடன் ஒரு வருடம் நிறைவடைகிறது. இக்காலப்பகுதியில் காஸாவில் 41 ஆயிரத்து 870 பேர் கொல்லப்பட்டுள்ளதோடு, 97 ஆயிரத்து 166 பேர் காயமடைந்துள்ளனர். அதேநேரம் இஸ்ரேலிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் ஒக்டோபர் 07 ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் தெற்கு இஸ்ரேல் பகுதி மீது திடீரென தாக்குதல் நடத்தினர். அதன் விளைவாக ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். 251 பேரை பணயக் கைதிகளாக ஹமாஸ் பிடித்துச் சென்றது.

ஹமாஸின் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுப்பதற்காகவும் அவர்களின் பிடியிலுள்ள பணயக் கைதிகளை மீட்பதற்காகவும் வான், கடல், தரை ஆகிய மூன்று வழிகளின் ஊடாகவும் இஸ்ரேல் காஸா மீதான முழு அளவிலான போரை ஆரம்பித்தது.

இப்போரின் விளைவாக 23 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட காஸாவில் 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் இருப்பிடங்களை இழந்து கூடாரங்களிலும் தற்காலிக முகாம்களிலும் தங்கியுள்ளனர். இம்மக்கள் அடிக்கடி இடம்பெயர வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கும் முகம்கொடுத்துள்ளனர். குறிப்பாக இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு சந்தப்பத்திலும் இடம்பெயர்ந்தேயாக வேண்டும்.

அந்த வகையில் நேற்றும் கூட வடக்கு காஸா பகுதி மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு இஸ்ரேல் இராணுவம் கூறியுள்ளது.

இப்போரினால் காஸா மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு மனிதப் பேரவலம் ஏற்பட்டிருக்கிறது. அதனை ஐ.நா உள்ளிட்ட சர்வதேச மனிதாபிமான நிவாரண நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. இப்போரினால் காஸாவின் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் அழிவடைந்தும் சேதமடைந்தும் காணப்படுவதோடு, காஸாவில் சேர்ந்துள்ள திண்மக் கழிவுகளை அகற்றவென சுமார் 15 வருடங்கள் செல்ல முடியுமென ஐ.நா நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன.

பொதுவாக யுத்தத்தின் முகமே கோரமானது. அதன் விளைவு அழிவுகளும் சேதங்களும் பாதிப்புகளும்தான். காஸா யுத்தத்தினாலும் சிறுவர்களும் பெண்களும்தான் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்போர் காஸாவில் ஏற்படுத்தியுள்ள அவலநிலையையிட்டு முழு உலகமுமே அதிர்ச்சியையும் கவலைகளையும் வெளிப்படுத்தியுள்ளது. யுத்தத்தை நிறுத்துமாறு உலகெங்கிலும் ஆர்ப்பாட்டங்களும் ஊர்லங்களும் நடத்தப்பட்டன.

காஸாவில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பல நாடுகளும் மனிதாபிமான உதவிகளை அனுப்பி வருகின்றன. இலங்கையும் காஸா பிள்ளைகளின் சுகாதார மருத்துவ வசதிகளுக்கு உதவும் வகையில் காஸா பிள்ளைகளுக்கான நிதியமொன்றை அமைத்து நிதி திரட்டி உதவியது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அதேநேரம் காஸாவுக்கென அனுப்பப்படும் மனிதாபிமான உதவிகளை இடையூறுகள் இன்றி மக்களுக்கு கொண்டு செல்வதற்கு யுத்தம் தொடர்வது பெரும் சவால் மிக்கதாக அமைந்துள்ளது.

இவை இவ்வாறிருக்க, யெமனின் ஹூதி கிளர்ச்சியாளர்களும், லெபனானின் ஹிஸ்புல்லா தீவிரவாதக்குழுவும், ஈராக்கின் சில போராளிக்குழுக்களும் காஸா மீதான யுத்தத்தை நிறுத்துமாறு கோரி இஸ்ரேல் மீது தாக்குதல்களை முன்னெடுக்கின்றன.

ஆனால் இஸ்ரேல், காஸா மீது மாத்திரமல்லாமல் பலஸ்தீனின் மேற்கு கரை, ஹிஸ்புல்லாஹ்வின் தெற்கு லெபனான் பிரதேசங்கள், சிரியா, யெமனின் ஹூதைதா துறைமுகம் என்பவற்றின் மீதும் தாக்குதல்களை முன்னெடுத்து வருகிறது.

அமெரிக்காவும் பிரித்தானியாவும் இப்போருக்குள் இழுத்து விடப்பட்டிருப்பது போன்று ஈரானும் இழுக்கப்பட்டிருக்கிறது. அதன் விளைவாக ஈரான் பிளாஸ்டிக் ஏவுகணைத் தாக்குதல்களை அண்மையில் இஸ்ரேல் மீது மேற்கொண்டது. அதற்கு பதில் தாக்குதல் நடத்துவதற்கான முஸ்தீபுகளை இஸ்ரேல் முன்னெடுத்துள்ளது. இதனால் மத்திய கிழக்கில் உச்சக்கட்ட பதற்றம் ஏற்பட்டுள்ளது.

காஸாவில் ஆரம்பமான யுத்தம் காஸாவுக்கு அப்பால் லெபனான், யெமன், சிரியா வரை விரிவடைந்துள்ளது. இந்த நாட்களில் லெபனான் மீது கடும் தாக்குதல்களை இஸ்ரேல் முன்னெடுத்துள்ளது. அதன் விளைவாக மரணங்களும் காயங்களும் அழிவுகளும் இடம்பெற்ற வண்ணமுள்ளன. அத்தோடு பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட லெபனானிய மக்களும் இடம்பெயர்ந்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இவ்வாறான பின்புலத்தில் அமைதி, சமாதானத்தை விரும்பும் அனைத்துத் தரப்பினரும் யுத்தத்தை உடனடியாக நிறுத்தி சமாதானத்திற்கான இராஜதந்திர முயற்சிகளில் ஈடுபடுமாறு வலியுறுத்தி வருகின்றனர். ஐ.நா. உள்ளிட்ட அமைதியை விரும்பும் அனைத்து நாடுகளது எதிர்ப்பார்ப்பும் அதுதான். அதனால் காஸா மீதான யுத்தம் நிறுத்தப்பட்டு விட்டால் அப்பிராந்தியத்தில் நிலவும் யுத்தநிலை முடிவுக்கு வந்துவிடும். இஸ்ரேல் மீது தாக்குதல்களை முன்னெடுக்கும் ஹிஸ்புல்லா, ஹூதிக்கள், ஈராக் குழுக்களின் கோரிக்கையும் அதுவேயாகும்.

ஆகவே காஸா மீதான யுத்தத்திற்கு ஒரு வருடம் நிறைவடையும் இன்றைய தினத்திலாவது இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர இஸ்ரேல் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வர வேண்டும். அதுவே அமைதி, சமாதமானத்தை விரும்பும் அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# காசா மீதான யுத்தத்தின் ஓராண்டு பூர்த்தி இன்று!



கடந்த ஓராண்டில், காசா மீதான யுத்தத்தின் அவலங்களை உலகம் கண்டுள்ளது. இஸ்ரேலின் தாக்குதலினால் காசாவில் எத்தகைய கொடூரங்கள் இடம்பெறுகின்றன என்பதை உலகம் தற்போது ஆதாரபூர்வமாகக் கண்டுள்ளது.

பன்னிரண்டு மாதங்களில் இருதரப்பிலும் 43,000 இற்கும் மேற்பட்ட அப்பாவி மக்களை பெரும்பாலும் பெண்கள் மற்றும் குழந்தைகளை இந்த யுத்தம் கொடூரமாக பலியெடுத்துள்ளது.

**ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதல்:**

2023 ஒக்டோபர் 7, காலை 6.29 மணிக்கு உலகத்தையே புரட்டிப்போட்ட சம்பவம் ஒன்று நடந்தது. அந்த நாளில்தான், காசாவில் இருந்து ஹமாஸ் படையினர் இஸ்ரேல் மீது ரொக்கெட் தாக்குதல் நடத்தினர். இருபது நிமிடங்களில் 5,000 ரொக்கெட்டுகள் சீறிப் பாய்ந்தன. இதில் 1,200 பேர் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதல் நடந்து இன்றுடன் ஓராண்டு ஆகிறது. மத்திய கிழக்கில் போர்மேகங்கள் கலைவதாக இல்லை. மாறாக, தீவிரமாகிக் கொண்டே போகிறது. தற்போது லெபனான் மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.



மத்திய கிழக்கு நாடுகளை கதிகலங்க வைத்த, இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதல் இஸ்ரேலின் ஆத்திரத்தைத் தூண்டியது. அந்தத் தாக்குதலின்போது கொல்லப்பட்டவர்கள் தவிர, சுமார் 250 இஸ்ரேலியர்களை பிணைக்கைதிகளாக ஹமாஸ் அமைப்பினர் பிடித்துச் சென்றனர். அதன் பின்னர் நவம்பரில் குறுகிய கால போர்நிறுத்தத்தின்போது அரைவாசிப்பேர் விடுவிக்கப்பட்டனர். மீதிப்பேர் பற்றிய தகவல் இல்லை. அவர்கள் இறந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

தற்போது மத்திய கிழக்கு நாடுகளில் அதிகரிக்கும் பதற்றத்தால் மூன்றாம் உலகப்போர் மூளுமா என்ற ஐயம் எழுந்துள்ளது. ஈரானின் பதிலடியால், இஸ்ரேல் வியூகம் அமைக்கின்றமை பாரிய அழிவுக்கான அறிகுறியாகும்.

## இருதரப்பிலும் 43 ஆயிரத்துக்கு மேற்பட்டோரை பலிகொண்ட பின்னரும், இன்னும் முடிவின்றி தொடரும் உக்கிரமான போர்!

மேற்குக் கரையையும் காசா நிலப்பகுதியையும் ஆக்கிரமிக்கும் இஸ்ரேலின் முயற்சிக்கு எதிரான முதல் பலஸ்தீன எழுச்சி தொடங்கிய பின், 1987 இல் ஹமாஸ் உருவானது.

2005 இல் காசாவில் இருந்து இஸ்ரேலியப் படைகள் விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகு ஹமாஸ் அரசியலில் இறங்கியது. அதன் பின்னர் இஸ்ரேலுடன் மூன்று பெரிய போர்களில் காசா ஈடுபட்டுள்ளது.

அடுத்தது என்ன நடக்கும் என்ற பதற்றம் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ளவர்களை கதிகலங்க வைத்திருக்கிறது. முதலில் காசா, அடுத்தது லெபனான், தற்போது எமன் என இஸ்ரேலின் தாக்குதல் தொடர்ந்து விரிவடைந்து வருகிறது.

அதாவது, காசாவில் இஸ்ரேலிய தாக்குதலைத் தொடர்ந்து, லெபனானில் ஹிஸ்புல்லா மற்றும் அதன் தலைவர்களுக்கு எதிரான இஸ்ரேலின் சமீபத்திய தாக்குதல்கள், இஸ்ரேல் மீது ஈரான் நடத்திய பெரிய ஏவுகணை ஆளில்லா விமானத் தாக்குதல்கள் போர் ஆபத்தை அதிகரித்துள்ளன.

தற்போது லெபனான் மீது இஸ்ரேலிய தரைவழி தாக்குதலும் தொடங்கி விட்டது. இதற்கு ஈரான் பதிலடி கொடுக்கத் தொடங்கி விட்டது. கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தி வருகிறது.

தலைநகர் டெல் அவிவ், ஜெருசலேம் உட்பட இஸ்ரேலின் அனைத்துப் பகுதிகளையும் குறிவைத்து இந்த ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. ஈரான் இதற்கு தகுந்த விலை கொடுக்க வேண்டி வரும் என இஸ்ரேல் எச்சரித்துள்ளது. ஈரானின் ஏவுகணைகளை இடைமறித்து தாக்க அமெரிக்கா உதவியுள்ளது. இஸ்ரேலின் முக்கிய நட்பு நாடான அமெரிக்கா, இஸ்ரேலுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்க உறுதி அளித்துள்ளதுடன் ஆயுதங்களையும் வழங்கியுள்ளது.

ஹிஸ்புல்லாவுக்கு பின்னணியில் இருந்த ஈரான் நேரடியாக களம் இறங்கிய நிலையில், ரஷ்யா ஈரானுக்கு உதவியாக களம் இறங்கலாம்.

போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்குப் பதிலாக நட்பு நாடுகள் இருதரப்பிலும் கைகோர்க்கத் தொடங்கினால், மூன்றாம் உலகப் போர்மூளும்ஆபத்து இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.



ஐங்கரன் விக்கினேஸ்வரா...

# வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் தரப்புகள் ஒன்றுசேரத் தயங்குவதால் மக்கள் ஆதங்கம்

அம்பாறை மாவட்டத்தில் 1994 மற்றும் 2020 தேர்தல்களில் ஒற்றுமை இன்மையால் தமிழர் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டமை போன்று மீண்டும் இம்முறையும் அதே போன்றதொரு துர்ப்பாக்கிய நிலை உருவாகக் கூடிய களநிலைவரம் தென்படுகிறது.

பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டு வருகின்றது. இந்த வேளையில் அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் ஒரு குடையின் கீழ் போட்டியிட வேண்டும், இன்றேல் வாக்குகள் சிதறடிக்கப்பட்டு பிரதிநிதித்தும் இழக்கப்படும் என்று பொதுக்கட்டமைப்பு மற்றும் சமூக ஆர்வலர்கள் உரத்த குரலில் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். அதற்கான முயற்சிகளிலும் பல நாட்களாக ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும் அவை இதுவரை பலன் தரவில்லை.





## பாராளுமன்றத் தேர்தலில் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் தமிழர் பிரதிநிதித்துவம் இழக்கப்படும் ஆபத்து!

இலங்கை தமிழரசுக் கட்சி உள்ளிட்ட ஆறு தமிழ்க் கட்சிகள் ஒன்றுசேர்ந்து ஓரணியில் போட்டியிடுவதென கடந்த வியாழக்கிழமை இரவு காரைதீவில் இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனினும் 24 மணிநேரத்துக்குள் இலங்கை தமிழரசுக் கட்சி தனிவழி போகத் தீர்மானித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தங்களது தலைமையில் ஓரணியில் ஒன்றுசேருமாறு கோரி, வேட்புமனு விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுள்ளது.

அதேபோன்று ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஈரோஸ் போன்ற கட்சிகளும் ஏனையவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளன.

இந்நிலையில் தமிழரசுக் கட்சியானது தேசியப் பட்டியல் ஆசனமொன்றுக்காக திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இரு பிரதிநிதிகளை இழக்கும் நிலையினை ஏற்படுத்தப் போவதாகவும், எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஊடாக சங்கு சின்னத்தில் போட்டியிடுவதற்கு தீர்மானித்திருப்பதாகவும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதியும், முன்னாள் எம்.பியுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.




"நாங்கள் பிரிந்து நிற்பதால் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களின் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இழந்துவிடும் நிலை இருக்கிறது. எனவே, அங்கு தமிழ்ப் பிரதிநித்துவத்தைக் காப்பாற்றுவதற்கான இரண்டு வழிமுறைகளை தமிழரசுக் கட்சிக்கு கூறியிருக்கின்றோம். இருதரப்பும் இணைந்து வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படும் போதே அந்த பிரதிநித்துவம் காப்பாற்றப்படும்.

திருகோணமலையில் வீடு சின்னத்திலும், அம்பாறையில் சங்கு சின்னத்திலும் தேர்தலில் போட்டியிடலாம் என நாம் முன்னர் பேசியிருந்தமை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. தற்போது அனைத்து இடங்களிலும் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவதாகக் கூறுகிறார்கள். அது நடந்தால் இந்த மாவட்டங்களின் ஆசனங்கள் இழக்கப்படும் நிலையே ஏற்படும். தங்களுக்கு தேசியப் பட்டியலை கூட்டிக்கொள்வதே அவர்களது நோக்கம்" என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

இது ஒருபுறமிருக்க, எதிர்வரும் தேர்தல் குறித்து அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் பலர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளனர்.

"எமது மாவட்டத் தமிழ் மக்களின் வாக்குகளை தேசியப் பட்டியலுக்கான வாக்குச் சேகரிக்கும் தளமாக மாத்திரம் கருதுவது வேதனை தருகிறது. எமது மாவட்ட மக்களின் நலன் பற்றிச் சிந்திக்காமல் அரசியல் நடத்துகிறார்கள். தமிழ்க் கட்சிகள் ஒன்றிணையாததால் எமது மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லாமல் போவது உறுதி.

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை தக்கவைத்துக் கொள்ள வேண்டிய தருணம் இதுவாகும். இங்கு யார் பெரிய கட்சி என்பது முக்கியமல்ல. எதிர்வரும் பொதுத்தேர்தலில் எப்படியாவது அம்பாறைமாவட்டத்தில் ஒரு ஆசனத்தையாவது பெற்றுக் கொள்ள வேண்டும். இதனை கவனத்தில் எடுக்காமல் சிறுபிள்ளைத்தனமாக பிடிவாதம் பிடித்தால் அம்பாறை மாவட்ட பிரதிநிதித்துவம் இழக்கப்படும் ஆபத்து உள்ளது". இவ்வாறு அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

வி.ரி.சகாதேவராஜா...
(காரைதீவு குறூப் நிருபர்)



# கிழக்கின் குரல்



## நைட்டா நிறுவன கற்கை நெறிகளை பூர்த்தி செய்த 200 பேருக்கு சான்றிதழ்



**கந்தளாய் தினகரன், கிண்ணியா தினகரன் நிருபர்கள்**

திருகோணமலையில் அமைந்துள்ள நைட்டா (NAITA ) நிறுவனத்தின் கற்கை நெறிகளை பூர்த்தி செய்த 200 பேருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு (04) திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி கலந்து கொண்டு சிறப்பித்தார். நீங்கள் பெற்றுள்ள பெறுமதிமிக்க சான்றிதழைப் பயன்படுத்தி உங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளுங்கள். நாட்டுக்கு பெறுமதியான சேவையை வழங்க உங்களை அர்ப்பணிக்கவும் என இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

## கிழக்கு பல்கலையின் 28ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா



**(ஏறாவூர் நிருபர் )**

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 28 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்கள் கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் ஒருங்கிணைப்பில் மட்டக்களப்பு வந்தாறுமூலை நல்லையா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

வரலாற்றில் முதல் தடவையாக அதிகூடிய எண்ணிக்கையிலான மாணவர்கள் இம்முறை பட்டம் பெற்றனர். ஏறத்தாழ 2340 உள்வாரி, வெளிவாரி, கலாநிதி மற்றும் பட்டப்பின் படிப்பு பட்டங்கள் இம்முறை பொதுப் பட்டமளிப்பு விழாவில் வழங்க உறுதிசெய்யப்பட்டுள்ளதாக கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி வ.கனகசிங்கம் தெரிவித்தார். பிரதி உப வேந்தர் பேராசிரியர் கலாநிதி ரீ.பிரபாகரன் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

## ஊடகவியலாளர் அஸ்ஹரின் ஜனாஸா நல்லடக்கம்



காலம் சென்ற சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஓய்வு பெற்ற ஆசிரியருமான எம்.ஐ.எம். அஸ்ஹரின் ஜனாஸா நேற்று முன்தினம் சனிக்கிழமை (05) இரவு 11.30 மணியளவில் சாய்ந்தமருதில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மஸ்ஜிதுல் சாலிஹின் ஜும்ஆப் பள்ளிவாசலில் ஜனாஸா தொழுகை நடாத்தப்பட்டு, தக்வா மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இதன்போது அன்னாருக்காக துஆப் பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டதுடன் இரங்கல் தெரிவித்து துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

நள்ளிரவு தாண்டிய நிலையிலும் ஜனாஸா நல்லடக்கத்தில் உலமாக்கள், கல்வியியலாளர்கள், ஊர்ப் பிரமுகர்கள், பழைய மாணவர்கள், இளைஞர்கள் உட்பட பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

## மட்டு. மாவட்டத்தில் பாராளுமன்ற தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பாராளுமன்ற தேர்தலுக்கான சகல பூர்வாங்க நடவடிக்கைகளும் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மட்டக்களப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகருமான ஜஸ்டினா முரளிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் இதன் போது மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மாவட்டத்தின் 3 தேர்தல் தொகுதிகளிலும் மொத்தமாக 442 வாக்கெடுப்பு நிலையங்களில் 449,686 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதியில் இருந்து ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி வரைக்கும் வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட இருக்கின்றன. இற்றைவரைக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 15 சுயேச்சை குழுக்கள் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதுடன், மேலும் ஒரு சுயேச்சை குழு தன்னுடைய வேட்பு மனுவை தாக்கல் செய்திருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டம் பூராகவும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கான வகுப்புகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களுக்கான வகுப்புகளும் எதிர்வரும் வாரங்களில் இடம்பெற உள்ளது என தெரிவித்தார்.

## மட்டு. தே.ம.ச வேட்பாளர் பட்டியலில் ஏறாவூர் புகாரி உள்வாங்கப்படவேண்டும்

### கட்சியின் ஆதரவாளர்கள் குழு கோரிக்கை



இம்முறை பாராளுமன்ற தேர்தலில் மட்டு மாவட்டத்தில் போட்டியிடுவதற்குப் பொருத்தமான வேட்பாளர்களில் ஒருவராக ஏறாவூர்ப் பிரதேசத்தைச் சேர்ந்த புஹாரி முகமட்டை நியமிக்குமாறு ஆதரவாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜேவிபி கட்சியின் நீண்டகால உறுப்பினரான இவர், கட்சியின் கொள்கையினை முழுமையாக ஏற்றுக்கொண்டு கடந்த 2 தசாப்தங்களாக துணிவுடன் செயற்பட்டுவருவதாகவும் சமூகத்தில் மதிப்பும் மரியாதையுமிக்கவராகவும் உள்ள அவரை புறந்தள்ளி சுய தேவைக்கு அரசியல் செய்பவர்கள் காற்றடிக்கும் போது தூற்றி கொள்ள முற்படக் கூடாது எனவும் ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கோடீஸ்வரராக , பெரும் பதவி பட்டங்கள் இல்லாத சாதாரண தொழிலாளியான புஹாரி முகமட், ஜேவிபி யின் கடந்தகால செயற்பாடுகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவராவார்.

நாட்டில் தேர்தல் காலத்தில் எவ்வாறான நிலைமை காணப்பட்ட போதிலும் கட்சியின் கொள்கைக்கு ஏற்ப செயற்பட்டவரென தெரிவிக்கப்படுகிறது.

மாவட்டத்தில் வெறும் நூற்று கணக்கில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஆதரவாளர்கள் இருந்த காலம் தொட்டு எவ்வித எதிர்பார்ப்புகளும் இல்லாது துணிவுடன் , கொள்கை உறுதியுடன் மக்கள் விடுதலை முன்னணியின் கொள்கைகளை சுமந்த ஒருவராக அன்று முதல் இன்று வரை புகாரி செயற்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏறாவூரைப் பொறுத்தவரை புஹாரி முகம்மட் மிகநீண்ட காலமாக கட்சியின் பயணத்தில் ஒட்டியிருப்பவர், அமைதியானவர், அரசியல் மற்றும் சமூக பயணத்தை கடந்த காலங்களில் ஒரு போதும் களங்கப்படுத்தாதவர். மேலும் அனைவருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகக்கூடியவர்.

குறிப்பாக கட்சியின் கொள்கையை திடமாக ஏற்றுக்கொண்டவர் என்பதுவே இங்கு கவனிக்கப்படுகிறது. ஏனையவர்கள் சந்தர்ப்பவசத்தால் கடந்த தேர்தலில் களமிறங்கியவர்கள் என்றே கூற வேண்டும்.

புஹாரி முகம்மட் கட்சியின் கொள்கையை ஏற்றுக்கொண்டதனால் வெற்றியை நோக்கி தேர்தல் பணியில் ஈடுபட்டவர். ஏனையவர்கள் மாற்றுக்கட்சிகளில் கொண்ட அதிருப்தியினால் , யாரும் கண்டு கொள்ளாத விரக்தியில் சுய தேவைகளுக்காக , தங்களின் பதவி இருப்பை தக்க வைக்கவும் கட்சியைத் தெரிவு செய்தார்கள் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

எனவே கட்சியின் கொள்கை கோட்பாட்டிற்கிணங்க கொள்கைவாதியான புஹாரி முகமட் வேட்பாளராக நிறுத்தப்படவேண்டும் என்பதுவே ஆதரவாளர்களின் கோரிக்கையாகும். அத்துடன் எதிர்வரும் தேர்தலில் கட்சிக்கு வாக்களித்து வெற்றியை உறுதிப்படுத்த வேண்டும் என்பதையே அக்கட்சியின் சகாக்களின் ஆதங்கமாகும்.

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நடமாடும் சேவை

**(ஒலுவில் விசேட நிருபர்)**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில திருக்கோவில் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சங்கமன் கிராமம் மற்றும் தாண்டியடி கிராம சேவைப் பிரிவுகளுக்கான கிராம மக்களின நலன் கருதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கிராமிய நடமாடும் சேவை எதிர்வரும் வியாழக்கிழமை (10) சங்கமன் பல்தேவைக் கட்டடத்தில் காலை 09.30 மணி தொடக்கம் பிற்பகல் 03.00 மணி வரை நடைபெறவுள்ளதாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.சி.அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.

நடமாடும் சேவையில் இலங்ககை மனித உரிமை தொடர்பான சேவைகள் பிரதேச செயலக பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் தொடர்பான விடயங்கள், பிரதேச சபையினால் வழங்கப்படும் சேவைகள், பிரதேச செயலக காணி மற்றும் ஆதனம் தொடர்பான விடயங்கள், பிரதேச செயலக சமூர்த்தி மற்றும் அஸ்வெசும தொடர்பான பிரச்சினைகள்.

பெண்கள், சிறுவர் தொடர்பான பிரச்சினைகள், சமூக சேவைகள் திணைக்களத்தினுடைய சேவைகள், சட்ட உதவி, ஆணைக்குழுவின் சட்ட ஆலோசனைகள், பிராந்திய சுகாதார சேவைகள் தொடர்பான சேவைகள், பெண்கள், சிறுவர்கள் தொடர்பான பொலிஸ் சேவைகள் வலயக் கல்வி அலுவலகத்தினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்த நடமாடும் சேவைகள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய அலுவலகத்தின் 0672229728ம் இலக்க தொலைபேசியினூடாக மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


### பண்டாரகம பிரதேச சபை

### பெறுகை அறிவித்தல்

### பண்டாரகம நகர மத்தியில் அமைந்துள்ள பேரங்காடித் தொகுதியின் தரைத் தளத்தின் 07 ஆம் இலக்கம் கொண்ட கடையை குத்தகை அடிப்படையில் 02 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடுதல்

பண்டாரகம பிரதேச சபைக்குச் சொந்தமான, பண்டாரகம நகர மத்தியில் அமைந்துள்ள பேரங்காடித் தொகுதியின் தரைத் தளத்தின் 07 ஆம் இலக்கம் கொண்ட கடையை குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு விடுவதற்கு என்னால் கேள்விமனுக்கள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| கடை இலக்கம் | சதுர மீற்றர் அளவு | மாதாந்த குறைந்தபட்ச மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா. சதம் | வைப்புத் தொகை ரூபா சதம் |
|---|---|---|---|
| கடை இலக்கம் - 07 | 11.25 | 16,000.00 | 384,000.00 |

II. விசேடமாக இந்தக் கடை இறைச்சி, மீன் விற்பது, பந்தய விளையாட்டுகள் மற்றும் பந்தயங்கள் பிடிக்கும் செயற்பாடுகள் அல்லாத மற்றும் மதுபானம் அல்லாத வர்த்தக நடவடிக்கை ஒன்றுக்காக பயன்படுத்துவதற்கு கேள்விமனு கோரப்படுகிறது.

III. கடையை குத்தகைக்கு பெறுவதற்கு எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர்கள் மீளளிக்கப்படும் 5,000.00 ரூபா கேள்விமனு வைப்புத் தொகையை மீளளிக்கப்படாத 2,000.00 ரூபா கேள்விமனுப் படிவ வைப்பு ஒன்றையும் 2024.10.28 ஆம் திகதி பி.ப. 3.00 க்கு முன்னர் அரச விடுமுறை நாள் தவிர நாட்களில் பண்டாரகம பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திற்கு செலுத்திய பின் கேள்விமனுப் படிவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

IV. நகல் பிரதி ஒன்றுடன் கேள்விமனுக்களை முத்திரை இடப்பட்ட உறை ஒன்றில் இட்டு கேள்விமனுக்களை இடுகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் "பண்டாரகம நகர மத்தியில் அமைந்துள்ள பேரங்காடித் தொகுதியின் தரைத் தளத்தின் 07 ஆம் இலக்கம் கொண்ட கடையை குத்தகைக்கு விடுதல்" என்று குறிப்பிட்டு 2024.10.29 ஆம் திகதி பி.ப. 2.00க்கு முன்னர் செயலாளர், "பண்டாரகம பிரதேச சபை, பேரங்காடித் தொகுதிக் கட்டிடம், களுத்துறை வீதி, பண்டாரகம" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுதல் வேண்டும்.

V. கேள்விமனுக்களை திறப்பது 2024.10.29 ஆம் திகதி பி.ப. 2.05 க்கு பண்டாரகம பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுவதோடு, அதற்காக விண்ணப்பதாரருக்கு அல்லது கேள்விமனுதாரர்களின் அதிகாரம் பெற்ற ஒரு பிரதிநிதிக்கு பங்கேற்க முடியும்.

VI. தேர்வு செய்யப்பட்ட குத்தகைதாரருக்கு அது பற்றி அறிவித்து 14 நாட்களுக்குள் தம்மால் சமர்ப்பிக்கின்ற பணத்தை பண்டாரகம பிரதேச சபைக்கு ஒரே தடவையில் செலுத்தி குத்தகை உரிமையை உறுதி செய்தல் வேண்டும். கேள்விமனுவை அங்கீகரித்ததாக அறிவித்த பின் பணத்தை செலுத்துவதை நிராகரித்தால் கேள்விமனுப் பிணைத் தொகை சபைக்கு உரித்தாக்கப்படும்.

VII. இந்தக் குத்தகை தொடர்பில் மேலும் விபரம் தேவையென்றால், அலுவலகத்திற்கு வந்து அல்லது 038-2290975 என்ற இலக்கத்திற்கு அழைத்துப் பெற்றுக்கொள்ள முடியும்.

VIII. கேள்விமனு படிவங்கள், கேள்விமனு நிபந்தனைகள் உள்ளடங்கிய அனைத்து ஆவணங்களும் இந்த அறிவித்தலின் பகுதியாக கருதுதல் வேண்டும்.

IX. கேள்விமனுக்களை ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை பண்டாரகம பிரதேச சபை வசமானதாகும்.

**2024.10.02**
**பண்டாரகம பிரதேச சபை,**
**பண்டாரகம.**
**038-2290975**

**டீ.எம்.கே.என். லக்மாலி,**
**செயலாளர்,**
**அதிகாரம் பணிகள் செயற்பாடுகளை செயற்படுத்தும் அதிகாரி,**
**பண்டாரகம பிரதேச சபை.**



## ஹோமாகம – மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலத்தில் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்களுக்கு பாராட்டு

ஸ்ரீமத் அனகாரிக தர்மபால அவர்களின் கல்விச் சிந்தனைகளை குருவாகக் கொண்டு அழகான கிராமமொன்றான பிடிபன கிராமத்தைத் தெரிவு செய்து, புது விதமாக என்னால் உருவாக்கப்பட்ட ஆசியாவில் விசாலமான முதன்மையான இரண்டாம் நிலை பாடசாலையான, ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தில் 2023ஆம் வருடத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு நாடு முழுவதிலும் உள்ள பாடசாலையில் அதிகூடிய எண்ணிக்கையாக 783 பரீட்சார்த்திகள் தோற்றியுள்ளனர் என்பதுடன் அவர்களின் 783 மாணவர்களும் க.பொ.த உயர்தரத்திற்கான தகைமையைப் பெற்று, நூற்றுக்கு நூறு வீத (100%) மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நேரம், முயற்சி மற்றும் அறிவுசார் இடத்தின் பெரும் செலவினத்துடன் நாட்டிற்கு உதாரணமாக விளங்கிய கௌரவ அதிபர், உப அதிபர், அனைத்து பிரிவுத் தலைவர்கள், அன்பான ஆசிரியர்கள் மற்றும் கல்வி / கல்விசாரா பணியாளர்கள் உட்பட இந்த உன்னத தகுதிக்கு பங்காற்றிய அனைத்து பிரமுகர்களுக்கும் எனது கௌரவமான மரியாதையைச் செலுத்துகின்றேன்.

(முன்னாள் கல்வி அமைச்சர்)

### 2023ஆம் வருட பெறுபேறுகளின் பகுப்பாய்வு

| | |
|---|---|
| 9A | 161 |
| 8A | 163 |
| 7A | 113 |
| 6A | 85 |
| 5A | 78 |
| up to 5A | 76.62 |

| | |
|---|---|
| சா/த பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் எண்ணிக்கை | 783 |
| உ/த தகைமை பெற்ற மாணவர்கள் | 783 |
| மொத்த பெறுபேறு | 100% |
| சா/த ஆங்கில மொழிமூல மாணவர் எண்ணிக்கை | 112 |
| உ/த தகைமை பெற்ற மாணவர்கள் | 112 |
| மொத்த பெறுபேறு | 100% |

### மொழிப் பாட பெறுபெறுகளின் பகுப்பாய்வு
### ஆங்கிலம் - தமிழ் - பிரஞ்சு - ஹிந்தி - ஜப்பான் - கொரியன்

| பாடம் | ஆங்கிலம் | தமிழ் | பிரஞ்சு | ஹிந்தி | ஜப்பான் | கொரியன் |
|---|---|---|---|---|---|---|
| Total | 783 | 55 | 05 | 02 | 14 | 72 |
| A | 382 | 21 | 03 | 02 | 12 | 36 |
| B | 207 | 18 | 02 | - | 01 | 08 |
| C | 169 | 15 | - | - | - | 13 |
| S | 23 | 01 | - | - | - | 13 |
| W | 01 | - | - | - | 01 | 02 |
| சித்தி | 781 | 55 | 05 | 02 | 13 | 70 |
| % | 99.7 | 100 | 100 | 100 | 92.8 | 97.2 |

*விளம்பர அனுசரணை: பல்கலைக்கழகங்களுக்கிடையிலான பொருளாதார நிபுணர்கள் பழைய மாணவர் சங்கம்*

# ஜனனம் அறக்கட்டளையின் ஸ்தாபகருக்கு விபுலானந்தர் வித்தியாலய அதிபர் பாராட்டு







ஜனனம் அறக்கட்டளையின் ஸ்தாபகரும் ஐடிஎம் நேஷனஸ் கெம்பஸின் தலைவருமான கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தியை கொழும்பு 09, தெமட்டகொடை விபுலானந்தர் தமிழ் மகா வித்தியாலய அதிபர் பாராட்டி நன்றி தெரிவித்துள்ளார்.

கொழும்பு 09, தெமட்டகொடை விபுலானந்தர் தமிழ் மகா வித்தியாலயத்தில் பாடசாலைக் கட்டிடமொன்று புனரமைத்து கடந்த சனிக்கிழமை பாடசாலையின் அதிபர் என். ரவிச்சந்திரனின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. கொழும்பு வலய பிரதி கல்விப் பணிப்பாளர் எச். ஏ. கே. ஐ. ஹெட்டியாராச்சி பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்நிகழ்வில், பொரளை கல்விப் பிரிவின் பணிப்பாளர் திருமதி என். புபுது ஹேவகே கௌரவ அதிதியாகவும் அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும் சர்வதேச இசைக் கல்லூரிக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவருமான அதிவணக்கத்துக்குரிய பிதா அருட்கலாநிதி எஸ். சந்துரு பெர்னாண்டோ சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டனர். இப்பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களும் பழைய மாணவர்களும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினரும் இதில் கலந்து கொண்டனர். இப்பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்களின் 93 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவ மாணவிகளின் முழுமையான நிதியுதவியுடன் இந்த கட்டிடம் புனரமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இங்கு உரையாற்றிய பாடசாலையின் அதிபர், இந்த முறை கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றிய 56 மாணவ மாணவிகளில் 25 பேர் உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். இங்கு நடத்தப்பட்ட கருத்தரங்குகளும் இலவச மேலதிக வகுப்புகளுமே இதற்குக் காரணமாகும். இந்த கருத்தரங்குகளையும் இலவச மேலதிக வகுப்புகளையும் நடத்துவதற்கு ஜனனம் அறக்கட்டளையின் ஸ்தாபகரும் ஐடிஎம் நேஷனஸ் கெம்பஸின் தலைவருமான கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி முழுமையான நிதியுதவியையும் பங்களிப்பையும் வழங்கியிருந்தார். எனவே அவருக்கு இந்த தருணத்திலே நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

(படங்கள் ஹேபட் பெரேரா)

## ஈஸ்டர் தின தாக்குதல்...

பின்னர் உயிர்த்த ஞாயிறு தாக்குலில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருடன் ஜனாதிபதி கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன்போது நேரடியாக ஜனாதிபதியிடம் அவர்கள் பிரச்சினைகளை எடுத்துக் கூறினர்.

நாட்டில் அண்மைய காலத்தில், மிக மோசமாக அழிவு 2019 ஏப்ரல் 21 லேயே நிகழ்ந்தது. அந்த விடயங்கள் மண்ணுக்குள் புதையுண்டு அழிவதற்கு, ஒருபோதும் தாம்,இடமளிக்கப்போவதில்லை என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி தேர்தலில் மக்கள் தனக்கு வாக்களித்ததன் பின்னணியில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான நீதியும் நியாயமும் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் இருந்ததென, நம்புவதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இந்நாட்டு மக்களின் நோக்கங்களும், எதிர்பார்ப்புக்களும் தனது, நோக்கங்கள் மற்றும் எதிர்பார்ப்புக்களுக்கு மாறுபட்டவை அல்லவெனவும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து மக்கள் எதிர்பார்க்கும் நீதியும் நியாயமும் நிலைநாட்டப்படும் என்பதுடன், அதற்கான முன்னெடுப்புக்கள் தற்போதும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பிலான முழுமையான முடிவொன்றுக்கு வந்து, அந்த முடிவை அடிப்படையாக கொண்டு சாட்சிகளை திரட்டுவதால் மாத்திரம் இந்த விசாரணைகளை நடத்த முடியாதெனவும், வெளிப்படைத் தன்மையுடன் இந்த விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசியல் மாற்றத்துக்காக இந்த தாக்குதல் நிகழ்த்தப்பட்டதா என்ற கேள்வி மக்கள் மத்தியில் இருக்கிறது. அரசியலுக்காக நூற்றுக் கணக்கில் அப்பாவி உயிர்களை பலியிடுவது பாரிய அழிவாகும். இவ்வாறான நிலைப்பாடு நாட்டின் அரசியலுக்குள் காணப்படுமாயின் அந்த நிலைமையை முழுமையாக துடைத்தெறிய வேண்டுனெவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இரண்டாவது விடயமாக அப்போதைய ஆட்சிப் பொறிமுறையும் இதனுடன் தொடர்பு பட்டிருந்ததா என்ற சந்தேகமும் மக்கள் மத்தியில் நிலவுகிறது.இவ்வாறான நிலை மிகவும் பாதுகாப்பற்றதும் ஆபத்தானதுமான நிலையாகும். இதன்படி இதற்குள் நடந்தது என்னவென்பதை கண்டறிய வேண்டியது மிக அவசியமானது என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அடுத்தபடியாக, 274 க்கும் மேற்பட்டவர்களின் உயிர்களை பறித்த மற்றும் பெருமளவானவர்களை காயத்துக்கு உள்ளாக்கிய அழிவினால், பாதிக்கப்பட்டவர்கள் தமது அன்புக்குரியவர்கள் மீது கொண்டிருக்கும் அன்புக்கான நீதியை நிலைநாட்ட வேண்டியது அவசியமாகும் என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அதேபோல் இவ்வாறான பிரச்சினையினால் ஏற்படக்கூடிய மிகப்பெரிய பாதிப்பிலிருந்து சமூகத்தை பாதுகாத்தமைக்காக, மத குருமார்களுக்கு மீண்டும் மீண்டும் நன்றி கூறுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சமூகத்துக்குள் காணப்பட்ட இணைவு,ஒருமைப்பாடு, நம்பிக்கை சிதைந்து போயிருப்பதாகவும் மற்றுமொரு சமூகத்தின் மீது குரோதத்துடன் பார்க்கும் நிலை உருவாவது சமூக நல்வாழ்வுக்கு மிகப்பெரிய ஆபத்தெனவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து நியாயமான விசாரணையொன்றை நடத்த வேண்டியது அவசியமாகும் என்பதையும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்துபோன 05 வருடங்களில் ஒவ்வொரு ஏப்ரல் 21 ஆம் திகதியும் வீதிகளிகளிலும் சந்திகளிலும் ஒன்றுகூடிய மக்கள் அவர்களின் மனதிலிருந்த நீதி தொடர்பிலான எதிர்பார்ப்புக்களையே வெளிப்படுத்தினர் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இங்கு கருத்து தெரிவித்த கொழும்பு பேராயர் கர்தினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை,

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்த போதும் அதற்கான நியாயம் கிடைக்கவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கங்களினால் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டாலும் பிரச்சினைக்கு காரணம் என்னவென்ற கேள்வி மக்கள் மத்தியில் உள்ளது. இந்நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மீது நம்பிக்கை உள்ளதெனவும், அவரின் நேர்மையை பாராட்டுவதாகவும் தெரிவித்த கார்தினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, அந்த நேர்மையை மக்கள் மத்தியில் வலுப்படுத்தும் வகையில் ஜனாதிபதி செயற்படுவார் என்று நம்பிக்கை கொண்டிருப்பதாகவும், அதன்படி உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவார் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மேலும் தெரிவித்தார். இந்நிகழ்வில் கட்டுவாப்பிட்டி தேவாலய பொறுப்பாளர் அருட்தந்தை மஞ்சுள நிரோஷன் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களும் பெருமளவில் கலந்துகொண்டிருந்தனர்.

## இலங்கை தொடர்பான...

எதிர்வரும் (11) வெள்ளிக்கிழமையுடன் முடிவுக்கு வருகிறது. அதன்படி கூட்டத்தொடரின் தொடக்க நாளான கடந்த மாதம் (09) இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க்கின் எழுத்துமூல அறிக்கை பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், உறுப்புநாடுகளின் பங்கேற்புடன் இலங்கை தொடர்பான விவாதமும் நடைபெற்றது. இந்நிலையில், 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' எனும் தலைப்பில் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானம், கடந்த 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற 51 ஆவது கூட்டத் தொடரின்போது மீண்டும் காலநீடிப்பு செய்யப்பட்டு தற்போது 51/1 தீர்மானம் எனும் பெயரில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

இத் தீர்மானம் செப்டெம்பர் மாதத்துடன் முடிவுக்கு வருகிறது. இதையடுத்து, பிரிட்டன் தலைமையில் அமெரிக்கா, கனடா, மாலாவி, வட மெசிடோனியா மற்றும் மொன்டெனிக்ரோ ஆகிய இணையனுசரணை நாடுகள் ஒன்றிணைந்து 51/1 தீர்மானத்தை மேலும் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்குக் செய்வது குறித்து ஆராய்ந்தன. அதற்கமைய 'இலங்கையில் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' எனும் தலைப்பில் இணை அனுசரணை நாடுகளால் தயாரிக்கப்பட்ட முதல் வரைபுக்கு சகல தரப்பினரதும் ஒப்புதல் பெறப்பட்டு, அதனைப் பெரும்பாலும் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

## யாழ், மட்டு. மாவட்டங்களில்...

வேட்பாளர் தெரிவு கூட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் நியமனக் குழுவின் கூட்டம் காலை முதல் மாலை வரை இரண்டாவது நாளாக நேற்று நடைபெற்றது. இதில் ஒவ்வொரு மாவட்டங்களின் வேட்பாளர்கள் நியமனம் தொடர்பாக ஆராய்ந்து இறுதி முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.

யாழ், மட்டு. மாவட்டங்களில்...

அதன்படி யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சிவஞானம் சிறிதரன் மற்றும் நானும் போட்டியிடுகிறோம். ஏனைய 07 பேரும் புதியவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். எஸ்.சி.சி.இளங்கோவன், சட்டத்தரணி கேசவன் சயந்தன், சந்திரலிங்கம் சுகிர்தன், சுரேக்கா சசீந்திரன், இமானுவல் ஆர்னோல்ட், கிருஸ்ணவேணி சிறிதரன், தியாகராஜா பிரகாஷ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் பெண் வேட்பாளர்கள். மிகவும் துடிப்பான இரு பெண்களையும் இம்முறை நிறுத்தியுள்ளோம். பெண் வேட்பாளர்கள் தேவை என நாம் ஊடகங்களில் தெரிவித்ததை பார்த்து இருவர் காலை விண்ணப்பித்தனர். அவர்கள் இருவருக்குமே வாய்ப்பை கொடுத்துள்ளோம். அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்திலும் வேட்பாளர் பட்டியல் இறுதி செய்யப்பட்டுள்ளது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், எமது கட்சியின் இளைஞர் அணித் தலைவர் கி.சேயோன், மட்டு. மாநகர முன்னாள் மேயர் தி.சரவணபவன், வைத்தியர் சிறிநாத் உள்ளிட்ட நால்வர் இறுதி செய்யப்பட்டுள்ளனர். ஏனைய இருவரும் மாவட்ட கிளையுடன் கதைத்து இறுதி செய்யப்படும்.

## கிழக்கு பல்கலைக்கழக...

ஓய்வு பெற்ற பேராசிரியர் மா.செல்வராஜா பட்டமளிப்பு விழாவுக்கு தலைமை தாங்கியதுடன் பட்டதாரிகளின் பட்டங்களையும் உறுதி செய்துள்ளார். அத்துடன், வரலாற்றில் முதல் தடவையாக அதிகூடிய எண்ணிக்கையிலான மாணவர்கள் இம்முறை பட்டம் பெற்றுள்ளனர்.

## இறக்குமதி தேங்காய் எண்ணெயில்...

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் RBD எண்ணெய், சாதாரண தேங்காய் எண்ணெயாக விற்பனை செய்யும் திறன் கொண்டது.

1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டம் தொடர்பில் தயாரிக்கப்பட்ட 1987 ஆம் ஆண்டு தரநிலை ஆணைகள் தொடர்பான தர நிலைகளை பூர்த்தி செய்யும் பட்சத்தில், நாட்டில் தேங்காய் எண்ணெய்யை விற்பனை செய்வதற்கு சட்டத் தடை ஏதும் இல்லை.

அத்தோடு, இலங்கைக்கு தேங்காய் எண்ணெய்யை கொண்டு வரும் போது உணவு பாதுகாப்பு பிரிவின் உணவு பரிசோதகர் மற்றும் இலங்கை தர நிர்ணய பணியகத்தின் அதிகாரிகள் இணைந்து இந்த தேங்காய் எண்ணெ யின் தரம் குறித்து முழுமையான ஆய்வுகளை மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஐ.தே.க தலைமையிலான...

மேற்கொண்டு வரும் நிலையில், எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே தீர்மானித்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி கலந்துரையாடிய போதிலும், எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்வைத்த நிபந்தனைகளால் பேச்சு வார்த்தை முறிவடைந்தது.

## 56 பாகிஸ்தான் கைதிகள்...

மொத்தம் 56 கைதிகள் ,இந்த ஒப்பந்தத்திற்கு அமைவாக நாட்டில் சிறைத்தண்டனை அனுபவித்தனர்.

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த 64 பாகிஸ்தான் இராஜதந்திரிகள், பாகிஸ்தான் ஏர்லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான A 320 விமானம் மூலம் இக்கைதிகளை அழைத்துச்சென்றதாகவும் அவர் கூறினார்.

நீதியமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை மற்றும் பாகிஸ்தான் தூதரகம் ஆகியவற்றின் தலையீட்டின் கீழ், இந்த கைதிகளை பரிமாறிக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## லண்டன் – கொழும்பு சேவை...

தெரிவித்துள்ளது. இதன்படி, கொழும்பிலிருந்து லண்டனுக்கான விமானங்கள் எகிப்து வான்வெளி ஊடாக பயணிக்க உள்ளதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தால் அந்த விமான பயணத்தின் நேரம் அண்ணளவாக 30 நிமிடங்கள் அதிகரிக்குமென ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் குறிப்பிட்டுள்ளது. அத்துடன், விமானத்துக்கான எரிபொருள் பாவனையும் அதிகரிக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்கள்

(07.10.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
சொந்தத் தொழிலில் லாபம் அதிகரிக்கும். அதிகமான மூலப்பொருட்களை வாங்கி இருப்பில் வைப்பது வியாபாரத்துக்கு வழிவகுக்கும்.

**ரிஷபம் :**
சிலருக்கு வெளியூர் மாற்றம் சம்பள உயர்வு கிடைக்கக் கூடும். சொந்தத் தொழிலில் பணம் சம்பந்தமான பொறுப்பில் உள்ளவர்கள் கவனமாக இருப்பது அவசியம்.

**மிதுனம்:**
சொந்தத் தொழிலில் வாடிக்கையாளர்களிடமிருந்து நிலுவைத் தொகை வசூல் ஆகும். கூட்டு தொழில் வியாபாரம் நன்கு நடைபெறும்.

**கடகம்:**
தொழில் ரீதியாக வெளியூர் பயணம் மேற்கொள்ள நேரலாம். சொந்த தொழில் செய்பவர்கள் பணிகளில் அக்கறை செலுத்தி லாபத்தை பெருக்குவர்.

**சிம்மம்:**
சகப் பணியாளர்களிடம் சுமூகமாக நடந்து கொள்ளுங்கள். சொந்தத் தொழிலில் அலைச்சலுக்கு பின் வருமானம் கிடைக்கும்.

**கன்னி:**
சக பணியாளர்கள் மற்றும் நண்பர்கள் விஷயத்தில் அனுசரித்து போவது பிரச்சனைகளை தவிர்க்கும்.

**துலாம்:**
சொந்தத் தொழிலில் அதிக அலைச்சலை சந்திக்க நேரிடும். கூட்டு தொழில் செய்பவர்கள் பணிகளில் அதிக கவனம் செலுத்தினால் லாபம் பெருகும்.

**விருச்சிகம்:**
வாடிக்கையாளர்களின் தேவையை பூர்த்தி செய்வீர்கள். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகளை சந்திக்க நேரலாம்.

**தனுசு:**
சிலருக்கு அலுவலகத்தின் மூலம் பெற வேண்டிய கடன் தொகை கைக்கு வந்து சேரும். சொந்தத் தொழில் செய்பவர்கள் மேன்மையான மாற்றத்தை அடைவார்.

**மகரம்:**
சொந்தத் தொழில் பணியாளர்களை ஊக்கப்படுத்தி வாடிக்கையாளர்களுக்கான தேவையை எளிதில் நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:**
கூட்டுத் தொழில் செய்பவர்கள் வியாபாரத்தில் கவனமாக இருங்கள். கூட்டாளிகளின் தலையீடு காரணமாக பணிகள் பாதிக்கும்.

**மீனம்:**
சொந்தத் தொழில் வியாபாரம் நன்கு நடைபெற்று எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கும். புதிய தொழில் முயற்சிகளில் கவனம் செலுத்துவீர்கள்.

## நிதி வழங்குவதாக... (03ஆம் பக்க தொடர்ச்சி)

இதுபோன்ற உண்மைக்குப் புறம்பான செய்திகள் தொடர்பில் தமது தனிப்பட்ட வங்கிக் கணக்கு இலக்கம் மற்றும் அணுகுவதற்குப் பயன்படுத்தப்படும் இரகசிய எண், கடவுச்சொல் மற்றும் OTP எண் போன்ற தகவல்களை வழங்குவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் விளக்கமளிக்கும்போத அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## அதிகளவு வினாக்கள்...

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் முன்கூட்டியே வெளியிடப்பட்டுள்ளதாக எழுந்துள்ள பிரச்சினையை கருத்திற் கொண்டு, விடைத்தாள் திருத்தும் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

அத்துடன், இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

## 80 வகையான மருந்துகளுக்கு...

இதன்படி, மருத்துவமனை மட்டத்தில் தட்டுபாடுள்ள மருந்துகளை வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக, மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மருந்து தட்டுப்பாடு குறித்து பிரதமர் ஹரிணி அமரசூரிய, கேட்டறிந்து, நோயாளிகளின் வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தாதிருக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளார்.

## கிழங்கு, பெ.வெங்காயம்...

நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கமைய உருளைக்கிழங்கு மீதான விசேட இறக்குமதி வரி 50 ரூபாவிலிருந்து 60 ரூபாவாகவும் பெரிய வெங்காயத்துக்கான வரி 10 ரூபாவிலிருந்து 30 ரூபாவாக அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால், இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயத்தின் விலைகள், அதிகரிக்கக்கூடுமென எதிர்பார்க்கப் படுகிறது.

## ஹிஸ்புல்லாவின் அடுத்த...

வருகிறது. இந்த தாக்குதலில் லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்பின் மூத்த தலைவர்கள் உட்பட 2,000 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் கடந்த 04 ஆம் திகதி அதிகாலை இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தியது. அடுக்குமாடி குடியிருப்பின் தரைத்தளத்தில் பாதாள அறையில் அமைந்திருந்த ஹிஸ்புல்லாவின் உளவுப்பிரிவு தலைமையகத்தை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

ஹிஸ்புல்லாவின் அடுத்த தலைவராக கருதப்பட்ட ஹசீம் சபிதீனை குறிவைத்து, இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் ஹசீம் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இஸ்ரேலின் வான்வழி தாக்குதலுக்குப் பின்ஹசீம்சபிதீன்இருப்பிடமோ அவரது நிலை குறித்தோ இதுவரை ஹிஸ்புல்லா எந்த தகவலும் வெளியிடவில்லை. இதன் மூலம் வான்வழி தாக்குதலில் ஹசீம் சபிதீன் கொல்லப்பட்டிருக்கலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

## அம்பாறையில் தனித்து...

கூட்டணியுடன் இணைந்து போட்டியிடவும் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன.

அதேநேரம் அம்பாறை மாவட்டத்தில் தனியாக போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளோம்.

எமது கட்சி,வன்னி, புத்தளம், குருநாகல், திருகோணமலை, மட்டக்களப்பு உள்ளிட்ட மாவட்டங்களில் கூட்டிணைந்து போட்டியிடுவதற்கும் பேச்சுகளை முன்னெடுக்கிறது. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இம்முறை புதியவர்களையும், துறை சார்ந்த அனுபவம் வாய்ந்தவர்களையும் களமிறக்குவதற்கு தீர்மானித்துள்ளது. அத்துடன் வேட்பாளர்களுக்கான நேர்காணல்கள் கொழும்பில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவித்தார்.

7 October 2024

# World Habitat Day

Engaging youth to create a better urban future



# சிறந்த நகருக்கான இளைஞர் சக்தி என்ற தொனிப்பொருளில் 38ஆவது உலக குடியிருப்பு தின கொண்டாட்டத்தில் நாமும் இணைவோம்

**எமது உலகம் வேகமாக நகரமயமாகி வருகிறது. எதிர்காலத்தில் இந்த சமூகத்தின் உரிமையாளர்களாகவுள்ள இளைஞர்களே இதனால் அதிகம் பாதிப்படைகின்றனர். அதனால் நகரமயமாதலுக்கு புதிய அர்த்தத்தை வழங்கும் வகையில் இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்து இம்முறை உலக குடியிருப்பு தினத்தைக் கொண்டாட நாம் முயற்சிக்க வேண்டும்.**



## ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் உலக குடியிருப்பு தினத்திற்கான ஆசிச் செய்தி

உலக வசிப்பிட தினம், தங்குமிட உரிமை மற்றும் நகர்ப்புற சூழலின் மாற்றத்தை பிரதிபலிப்பதை மீண்டும் உறுதி செய்வதாக உள்ளது.

இம்முறை தொனிப்பொருள் சிறந்த நகர்ப்புற எதிர்காலம் ஒன்றை உருவாக்குவதில் இளம் தலைமுறையின் பிரதான பங்கை காண்பிப்பதாக உள்ளது. 2030 இல் 60 வீதமான நகர குடியிருப்பாளர்கள் 18 வயதுக்கு உட்பட்டவர்களாக இருப்பார்கள். நகரங்கள் தொடர்ந்து வளர்ந்து வருவதால், நகர்ப்புற சவால்களை வாய்ப்புகளாக மாற்றுவதற்கு இளம் தலைமுறையினரின் சக்தியை தூண்டுவதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

எதிர்காலம் பற்றி தெளிவுபடுத்தும் கடந்த மாதத்தின் மாநாட்டில் குறிப்பிடப்பட்டதுபோன்று, அதிக சமநிலையான மற்றும் நிலையான எதிர்காலம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கு இளம் தலைமுறையினர் தீர்க்கமானவர்களாக உள்ளனர். அதனை சாத்தியமாக்குவதற்கு கல்வி, டிஜிட்டல் திறன்களை விரிவுபடுத்தல், தொழில்முயற்சியாளர்களை வளர்த்தல் மற்றும் காலநிலை நடவடிக்கைகளில் இளைஞர்கள் தலைமையிலான முயற்சிகளை ஊக்குவித்தல், பெற முடியுமான வீடமைப்பு மற்றும் நீடித்த செயற்பாடு ஆகியவை அவசியமாகும். இவை அனைத்துடனும் துடிப்புடனான, உள்ளடங்கலான மற்றும் மீள்தன்மையுடைய நகரங்கள் மற்றும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவது முக்கியமானதாகும்.

நாம் உலக வசிப்பிட தினத்தை கொண்டாடும் நிலையில் தீர்மானங்களை எடுப்பது மற்றும் அனைத்து வயதுடைய மக்களும் சுபீட்சமாக வாழ முடியுமான நகர் ஒன்றை கட்டியெழுப்புவதில் இளம் தலைமுறையினர் உட்பட எல்லா இடங்களிலும் இளைஞர்களுக்கு ஆதரவை வழங்குவோம்.

அன்டோனியோ குட்டரெஸ்
செயலாளர் நாயகம்
ஐக்கிய நாடுகள் சபை



## கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சின் செயலாளரின் ஆசிச் செய்தி

தமக்கு உரிய வீடு என்பது முழு மனித குலத்தினதும் பிரார்த்தனையாகும். எல்லா குடிமக்களுக்கும் பொருந்துகின்ற வீடு ஒன்றுக்கான வாய்ப்பை ஏற்படுத்துவது அரசு மற்றும் சமூகத்தினதும் பொறுப்பாகும். போதுமான வீடு மற்றும் இருப்பிடத்திற்காக அனைவருக்கும் வாய்ப்பை ஏற்படுத்துவது மற்றும் வீடு மற்றும் குடியிருப்புகள் தொடர்பிலான சிக்கல்கள், மாற்றுத் தீர்வுகள் மற்றும் நடவடிக்கை தொடர்பில் அனைத்துத் தரப்பினரதும் அவதானத்தை ஈர்ப்பதும், தேசிய அளவான உரையாடல் ஒன்றின் மூலம் மக்களை அது தொடர்பில் அறிவூட்டுவதும் இங்கு மிக முக்கியமாகும்.

அந்த இலக்கை வெல்லும் நோக்கை முன்னிறுத்தி, 1985 ஆம் ஆண்டில் அப்போதைய இலங்கையின் பிரதமரினால் ஐக்கிய நாடுளின் மனித குடியிருப்பு திட்டத்திற்கு முன்வைக்கப்பட்ட முன்மொழிவுக்கு அமைய ஐக்கிய நாடுகள் சபையினால் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் முதலாவது திங்கட்கிழமை உலக வசிப்பிட தினமாக அறிவிக்கப்பட்டது. "வீடு எனது உரிமையாகும்" என்ற தொனிப்பொருளில் கென்யாவின் நைரோபி நகரில் முதல் முறையாக கொண்டாடப்பட்ட உலக வசிப்பிட தினத்தின் 38 ஆவது நிறைவு 2024 ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி "சிறந்த நகருக்கான இளைஞர் சக்தி" என்ற தொனிப்பொருளின் கீழ் கொண்டாடுவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் தயார்படுத்தப்பட்டுள்ளன.

வருடாந்தம் ஒவ்வொரு தொனிப்பொருளில் கொண்டாடப்படும் உலக வசிப்பிட தினத்தின் இம்முறை தொனிப்பொருள் மையப்படுத்தப்பட்டிருப்பது குடியிருப்புகளின் நாளைய தினம் மிகவும் முழுமையானதாகவும் பாதுகாக்கப்படுவதற்கும் இளைஞர்களின் பங்களிப்பைப் பெறுவதாகும். மனிதனுக்கு கூட்டாகவன்றி தனியாக தமது இனத்தின் இருப்பு மற்றும் முன்னேற்றத்தை உறுதி செய்ய முடியாது. ஆனால் தற்போது இளம் சந்ததியினர் கூட்டாகச் செயற்படுவதற்கு பதில் தனிமையில் செயற்படுவதற்கு அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர். மறுபுறம் பயிற்சி பெற்ற மற்றும் பயிற்சி பெறாத தொழிலாளர்களான குறிப்பாக வீடமைப்பு மற்றும் குடியிருப்பு மேம்பாட்டு துறையில் இளம் தலைமுறையின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் குறைந்து வருகிறது. இவ்வாறான பின்னணியில் இம்முறை உலக வசிப்பட தினத்தின் தொனிப்பொருள் காலத்திற்கு பொருந்துவதாக உள்ளது.

கடந்த காலங்கள் போன்று இம்முறையும் உலக வசிப்பிட தினத்தை இலக்காகக் கொண்டு நாடு தழுவிய சிறுவர் சித்திர மற்றும் கட்டுரைப் போட்டிகள், சித்திர கண்காட்சிகளை நடத்துவதற்கும் குறிப்பாக நகர்ப்புற குறைந்த வசதியுடைய குடியிருப்புகளில் வசிக்கும் பிள்ளைகள் மற்றும் மக்களை இலக்காகக் கொண்டு பல்வேறு போட்டிகள் மற்றும் சுயதொழில் மேம்பாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் மக்களை அறிவூட்டும் நிகழ்ச்சிகள் என பல நிகழ்ச்சிகளையும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆண்டின் தொனிப்பொருளுக்கு அமைய இந்த நிகழ்ச்சிகளில் இளைஞர்கள் மற்றும் மற்ற இளம் சமூகத்தை நோக்கி முன்னுரிமை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பது மகிழ்ச்சிக்கு உரியதாகும்.

இம்முறை உலக வசிப்பிட தினத்தை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் அனைத்து நிகழ்ச்சிகளும் முழுமையாக வெற்றி பெற வேண்டும் என பிரார்த்திப்பதோடு அந்த நிகழ்ச்சிகளை வெற்றிபெறச் செய்வதற்கு அதிக அர்ப்பணிப்புடன் செயற்படும் கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு, அதனுடன் இணைந்த தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் பணிக் குழுக்களுக்கும், ஐக்கிய நாடுகளின் மனிதக் குடியிருப்பு திட்டத்தின் இலங்கை திட்ட முகாமையாளர் முதற்கொண்டு அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏ.எம்.பீ.எம்.பி. அத்தபத்து
செயலாளர்
கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு

**உலக குடியிருப்பு தினத்தையொட்டி கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சின் ஆலோசனைக்கு அமைய நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் பல நிகழ்ச்சிகளும் பல ஆண்டுகளாக நாடு முழுவதும் மேற்கொள்ளப்படுகின்றன. இம்முறை உலக வசிப்பிட தினத்தின் தொனிப்பொருளுக்கு அமைய சிறந்த நகருக்கான இளைஞர் சக்தி என முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சிகள் சில பின்வருமாறு.**









உலக வசிப்பிட தினத்தையொட்டி நகர அபிவிருத்தி அதிகாரசபையில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள்







உலக வசிப்பிட தினத்தையொட்டி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை நடத்திய சித்திரப் போட்டியில் வெற்றியீட்டிய சித்திரம்

**நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு**

## மானுடவியல்



184

இவர்கள் தீர்க்கப்புகின், அது முதிர்வதேயா கும்" என்றார். மாதேவியாரும் மந்திரியா ரும் அரசனை வணங்கி நின்று, "திரு ஞானசம்பந்த மூர்த்தி நாயனாருக்குச் சமணர்கள் செய்த தீங்கினாலேயே உமக்கு இந்த வெப்பு நோய் அடுத்தது. ஆதலால் இநதப் பாதகர்கள் செய்யும் மாயம் இந்நோயை வளர்ப்பதேயன றித் தீர்ப்பதில்லை. அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருவுளமிரங் கித் திருவருணோக்கஞ் செய்வாராயின் இந்த வெப்புநோய் மாத்திரமா எவர்களா லும் நீக்குதற்கரிய பிறவி நோயும் நீங்கிவி டும். இது சத்தியம்" என்றார்கள். பாண்டியன் தன் செவியிலே, மெய்யறிவினையுடைய அவ்விரு வருஞ் சொல்லிய "திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்" என்கின்ற திருமந்திரம் புகுந்தவுடனே அயர்வுநீங்க, "இந்தச் சமணர்கள் செய்யுஞ் செய் கைகளெல்லாம் இந்நோய்க்கு ஏதுவாயே யிருக்கின்றன" என்று நினைந்து அவ்விருவரையும் நோக்கி "அந்தத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரை இங்கே அழையுங்கள். என்னுடைய நோயை நீக்கி வென்றவர் எவரோ அவர் பக்கஞ்சேர்வேன்" என்றான்.

மங்கையர்க்கரசியார் அது கேட்டு, பெருங்களிப்புடையவராகி சிவிகையி லேறி, பெண்கள்சூழ, குலச்சிறைநாயனார் குதிரையிலேறிக் கொண்டு முன்னே செல்ல, சென்று திருமடத்தை அடைந்தார். குலச்சிறைநாயனார் குதிரையினின் றும் இறங்கி, பரிசனங்களை நோக்கி, "அடியேங்கள் வந்து நிற்றலைச் சுவா மிக்கு விண்ணப்பஞ் செய்ய வேண்டும்" என்றார். அவர்கள் உள்ளே புகுந்து திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரை வணங்கி நின்று, "சுவாமி! பாண்டிமா தேவியாரும் குலச்சிறைநாயனாரும் வந்து நின்கின்றனர்" என்று விண்ணப் பஞ் செய்ய; பிள்ளையார் "அவர்களை இங்கே அழையுங்கள்" என்று அருளிச் செய்தார். பரிசனங்கள் மீண்டு போய் அழைக்க; அவர்கள் இருவரும் உள்ளே பிரவேசித்து, திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரைக் கண்களிக்கக் கண்டு, சமணர்கள் செய்த கொடுந்தொழிலை நினைந்து. நெடிதுயிர்த்து, சோகபாஷ் பஞ்சொரிய, ஸ்ரீபாதங்களின் கீழே விழுந்தார்கள். உரைகுழற, சரீரம் நடுங்க, ஒன்றும் அறிந்திலராகி, நிலத்திலே புரண்டு அயர்ந்து, திருவடிகளைப் பற்றிக் கொண்டு கவலைக்கடற்கு ஓர் கரைப் பற்றினார் போன்று மெய்யன்பினாலே விடாது கிடந்தார்கள். பிள்ளையார் அதுகண்டு; அவ்விருவரையும் திருக்கரத்தினால் எடுத்தருளித் தேற்றவும், அவர்கள் தெளியாராக; அவர்களை நோக்கி, "அன்பர்களே! உங்களிடத்திலே யாதாயினும் தீங்கு உண்டா" என்று வினாவியருளினார். அதற்கு அவர்கள் "அடியேங்கள் சமணர்கள் முன்செய்த வஞ்சனைக்கு மிக அஞ்சி வருந்தினோம்.



**(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# நவராத்திரி வழிபாட்டின் மகிமைகளும் அதற்கான தத்துவங்களும்

நவராத்திரி, நவம் என்பது ஒன்பதையும் ராத்திரி என்பது இரவையும் குறிக்கின்றது. எனவே ஒன்பது இரவுகளை குறிப்பதே நவராத்திரி ஆகும். இவற்றில் மலைமகள் இவள் சிவபெருமானின் தேவி (சக்தி) மற்றும் அலைமகள் ஸ்ரீமத் நாராயணனின் மனைவி மற்றும் கலைமகள் பிரம்மதேவனின் (சக்தி) என வகைப்படுத்தப் படுகின்றது. இவை முறையே துர்க்கை, இலக்குமி, கலைமகள் (சரஸ்வதி) என சொல்லப்படுகின்றது.







துர்க்கை: வீரத்தின் தலைவி. இவள் நல்லோருக்கு இடர் விளைவிக்கும் துஷ்டர்களை சம்ஹாரம் செய்பவள். இவளை மெய்யன்போடு வழிபட்டு வீரம் பெற்று வெற்றிக் கொடியேற்றிய தமிழ் மன்னர்கள் பற்றிய வரலாறுகள் உண்டு. துர்க்கைக்கான வழிபாடுகள் மூன்று நாட்கள் நடைபெறும்.

இலக்குமி: செல்வத்தின் அதிபதி. (மூன்று நாள் நடைபெறும்).

கலைமகள்: சகல கலைகளுக்கும் அதிபதி. (மூன்று நாள் நடைபெறும்)

வட இந்தியாவில் நவராத்திரி திருவிழாவை 'தசரா' என்று அழைப்பர். நவராத்திரி பூசை புரட்டாதி மாதத்தில் வளர்பிறை பிரதமை முதல் நவமி வரை ஒன்பது நாளும் கைக்கொள்ளப்படுகின்றது. மகா சங்கார (பேரழிவு காலத்தின் முடிவில் இறைவன் உலகத்தை உண்டாக்க விரும்புகின்றான். அப்பொழுது இச்சை என்ற சக்தி தோன்றுகின்றது.

பின்னர் அதை எவ்வாறு என்று அறிகின்றாள். அப்போது ஞானா சக்தி தோன்றுகின்றது. பின் கிரியாசக்தியினால் உலகைப் படைக்கின்றான். இக்கருத்தே நவராத்திரி விழாவாக விளக்கப்படுகின்றது. இச்சை விருப்பம், ஞானம் அறிவு, கிரியா செய்தல், ஆக்கல் என சொல்லப்படுகின்றது. 10ஆம் நாள் விஜயதசமி என்றும் 'மானம்பூ' திருவிழா என்றும் அழைக்கப்படுகின்றது. தேவியால் மகிடாசுர சங்காரம் நடந்த விழாவை சித்தரிக்க அன்றைய தினம் வன்னிமரம் அல்லது வாழை மரத்தை ஆலய முன்றலில் நாட்டி அதனை மகிடாசுரனாகப் பாவனை செய்து மரத்தை அம்பால் வெட்டி வீழ்த்தும் முகமாக விழா எடுக்கப்படும்.

காட்டெருமை வடிவிலான மகிடாசுரன் தேவர்களைத் துன்புறுத்தியதோடு மனிதர்களுக்கும் இன்னல்கள் பல புரிந்தவன். அவனை தேவி அழித்தொழித்ததன் தத்துவம் ஒன்றுண்டு. ஆன்மாக்களை பீடித்துள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய துர்க்குணங்களையும் சக்தியை வழிபடுவதனால் நீக்கிக் கொள்ளலாம் என்பதே இதன் தத்துவமாகும். பாண்டவர்கள் அஞ்ஞானத்தின் போது யாருக்கும் தெரியாமல் வன்னி மரத்தின் பொந்துக்குள் தங்கள் ஆயுதங்களை ஒழித்து வைத்தார்கள். அவர்களின் அஞ்ஞான வாசம் முடிந்ததும் தசமி அன்று தேவியை வழிபட்டு மறைத்து வைத்திருந்த தங்கள் ஆயுதங்களை எடுத்துக் கொண்டார்கள். வெற்றி தரும் தசமி என்பதாகும். இராமன் வனவாசத்தின் போது அவன் மனைவி சீதா தேவியை இராவணன் கடத்திச் சென்றான். சீதையைப் பிரிந்த கோலத்திலிருந்த இராமனை நாரதர் சந்தித்து அவர் துயர் நீங்க நவராத்திரி விரதம் கடைப்பிடித்தால் ராவணனை எளிதில் வெல்லலாம் என்று யோசனை கூறினார். அந்த யோசனையின் படி மேற்கொண்டு இராவணனை வெற்றி கொண்ட திருநாள் விஜயதசமி நாளாகும். எனவே நாமும் அந்நாளில் நல்ல காரியங்களைச் செய்வதன் மூலம் வெற்றி அடையமுடியும்.

இலக்கிய வித்தகர், கலைச்சுடர்
**நாராயணபிள்ளை–நாகேந்திரன் (JP)**
ஓய்வுநிலை அதிபர், களுவாஞ்சிகுடி.






கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீ வெங்கடேஷ்வர மகா விஷ்ணு கோவிலில் நவராத்திரி பூஜையையொட்டி கொலு வைத்திருப்பதை படத்தில் காணலாம்.
*(படம்: வடகொழும்பு தினகரன் நிருபர்)*





சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதஸ்வாமி ஆலயத்தின் வருடாந்த சாரதா நவராத்திரி மிகவும் சிறப்பாக தற்போது நடைபெற்று வருகின்றது. ஆலய குருக்கள் பிரம்ம ச.பத்மநாபக்குருக்கள் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறுவதோடு, மானம்பூ வாழைவெட்டு நிகழ்வுகள் எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறும்.
*(படம்: உடப்பு குறூப் நிருபர்)*

# புத்தளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் நவராத்திரி

**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் மன்னார் வீதியில் அமைந்திருக்கின்ற மிகவும் பழைமை வாய்ந்த ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த நவராத்திரி திருவிழா நிகழ்வுகள் வியாழக்கிழமை (03) ஆரம்பிக்கப்பட்டன.

இந்தத் திருவிழாவையொட்டி தொன்று தொட்டு முதல் நாள் உபயத்தை வழங்கி வருகின்ற புத்தளம் நடராஜ தேவர் குடும்பத்தினர் அவர்களது புத்தளம் பிரதான வீதியில் அமைந்திருக்கும் வியாபார நிலையத்திலிருந்து ஸ்ரீ முத்து மாரியம்மனுக்கு பட்டு சாத்தும் பொருட்டு சீர் தட்டு கொண்டு செல்லும் நிகழ்வு வியாழக்கிழமை (03) காலை இடம்பெற்றது.

ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயத்துடைய நிர்வாகிகள் மற்றும் இந்து பக்தர்கள் இந்த சீர் தட்டினை கொண்டு செல்கின்ற ஊர்வல நிகழ்வில் பங்கேற்றனர்.

ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு செல்கின்ற வழியில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்துக்கும் சென்ற பக்தர்கள் அங்கு ஸ்ரீ சித்தி விநாயகரையும் வழிபட்டு விட்டு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தை சென்றடைந்தனர்.

ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் அதன் பிரதம குரு சிவஸ்ரீ வெங்கட சுந்தாராம குருக்கள் தலைமையில் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

இதனையடுத்து ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் அதன் பிரதம குரு அம்பலவாணன் குருக்கள் தலைமையில் நவராத்திரி திருவிழாவின் முதல் நாள் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.







# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 105



தவறான கண்ணோட்டம் கொண்ட ஒருவன், சாதாரண துன்பத்தைக் கூட, தன் தவறான மதிப்பீட்டால், மிகப் பெரிய துன்பமாகக் கருதி கவலைப்படுகிறான். கவலை வளர்த்துக் கொள்கிறான். சின்னக் குறைபாடு அல்லது சின்னளவில் உடல் நலமின்மை அல்லது சிறிய கடுகு அளவு பாதகமான சூழ்நிலை வந்தாலும் மலையளவு நினைத்து பயம் கொள்கிறான். தேவையின்றி கலங்குகிறான். மனவலிமையை பொறுத்தே சூழ்நிலைகளின் தாக்கம் அமையும். காய்ந்த விறகுக் கட்டையில் நெருப்பு எளிதில் பற்றிவிடும். ஆனால் ஈரமான விறகுக் கட்டையில் நெருப்பு அவ்வளவு எளிதாகப் பற்றாது.

பலவீனனை தாக்கும் அளவிற்கு நோய் பலமுள்ளவனை தாக்காது. வறண்ட நிலம் நீரை உறிஞ்சும் அளவிற்கு ஈரமான நிலம் உறிஞ்சுவதில்லை. மெல்லிய, வெள்ளை துணியில் சாயம் ஏறும் அளவிற்கு கடினமான அழுக்கு துணியில் ஏறுவதில்லை. அதே போல் பலவீனமானவன் பாதகமான சூழ்நிலையை கூட தாங்கிக்கொள்ளும்மனவலிமை இன்மையில் கவலைப் படுகிறான் அல்லது துன்பப்படுகிறான்.

உலகத்தில் வெற்றி, அழகு, சுகம், அமைதி பெற விரும்புவன் தனக்கு எதிரான பாதகமான சூழ்நிலையினை. சரியான கண்ணோட்டத்துடன் நோக்கி எதிர் கொண்டு, தமக்கு சாதகமான சூழ்நிலையாக மாற்றிக் கொள்ள முடியும். அதற்கு பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லை என்றால் உலகின் அனைத்து பொருட்களும். வாழ்வில் தான் சந்திக்கும் அனைத்து சூழ்நிலைகளையும் கண்டு கலங்கி பயந்து சுகத்தையும் அமைதியையும் இழந்துவிடுவான்.

உணர்வுகளை செயல் வடிவமாக மாற்றினால் தான் அந்த உணர்வுகள் நன்கு வளரும். மனதளவில் உதவி செய்திட நினைத்தால் மட்டும் போதாது. மனதில் நினைத்தப்படி தேவைப் படுவோருக்கு தக்க உதவி செய்யும் போது தான் அது சேவை என்ற பெயர் கொள்ளும். நோய்ப்பட்ட ஒருவனுக்கு சேவை செய்ய நினைப்பவர், அந்த நோயாளியை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல வேண்டும். மருந்து மாத்திரைகளை வாங்கி கொண்டு வந்து தர வேண்டும். தேவைப்பட்டால் நோயாளிக்கு மருந்து ஊட்டவும் செய்ய வேண்டும். இவ்வளவும் செயல் வடிவம் பெறும் போது தான் அது சேவையாகக் கருதப்படும். இவ்வித சேவையால் மட்டுமே நோயாளிக்கும் சேவை செய்தவருக்கும் நன்மை ஏற்படும்.

பசித்தவனுக்கு உணவு. நிர்வாணமாய் நிற்பவனுக்கு ஆடை, மூடனுக்கு கல்வி,முடவனுக்கு கைத்தடி, நோயாளிக்கு மருத்து கொடுக்க வேண்டும் என நினைத்தால் மட்டும் போதாது. நினைத்தப்படி கொடுத்தால் தான் சேவை எனப்படும். உணர்வு மட்டும் ஒருவனை இன்புறச் செய்யாது.உதவும் போது தான் அனைவருக்கும் இன்பம் பிறக்கும்.

பிறர் நலன், பொது நலன் கருதி எந்தளவு நாம் சுயநலத்தை தியாகம் செய்கிறோமோ அப்போது நாம் தெய்வத் நன்மையை அடைகிறோம். அதிகாரத்தை செலுத்தி பிறரை அடிமைப் படுத்தாமல், பதவி மூலம் அனைவருக்கும் உதவி செய்தல் தெய்வ தன்மையாக கருதப்படும். என்று நம் சுயநலம் பொது நலமாக மாறுகிறதோ, பதவி அதிகாரம் கடமையாக மாறுகிறதோ அன்று, நம்மிடமுள்ள அரக்கத்தனம் மாறி தெய்வத் தன்மையை நோக்கி முன்னேறுவோம். அதனை உடனே செய்திடுவோம்.

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**இந்துக்கள் பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்க்கையில் பின்பற்றவேண்டிய சடங்குகள், சம்பிரதாயங்கள், அற ஒழுக்க விதிமுறைகளை ஒழுங்குபடுத்திக் கூறும் நூல் எது?**
மனு தர்ம சாத்திரம்

**இதனை தொகுத்தவர் யார்?**
சுவாயம்பு (மனு) எனும் பண்டைய வேத கால முனிவர்.

**இது எத்தனை செய்யுட்களைக் கொண்டது?**
2685 செய்யுட்களை

**இது எத்தனை பகுதிகளை க் கொண்டது?**
3 பகுதிகளை

**இது எத்தனை அத்தியாயங்களை க் கொண்டது?**
12 அத்தியாயங்களை

**இந்நூலை முதலில் மொழிபெயர்த்தவர் யார்?**
கல்கத்தா உச்ச நீதிமன்றத்தின் நீதியரசர் சர். வில்லியம் ஜோன்ஸ்

**இந்நூலை இவர் எந்த ஆண்டில் மொழிபெயர்த்தார்?**
1794ல்

**இவர் எந்த மொழியில் இருந்து எந்த மொழிக்கு மொழிபெயர்த்தார்?**
சமஸ்கிருதத்தில் இருந்து ஆங்கிலத்திற்கு

**தமிழ்மொழிக்கு மொழிபெயர்த்தவர் யார்?**
திருலோக சீதாராம்

**தனி மனித மற்றும் சமுதாய வாழ்க்கையை நெறிப்படுத்திக் கூறும் ஒரு சட்டக்கோவையாக எது கருதப்படுகிறது.**
மனு தர்ம சாத்திரம்

**மனு தர்ம சாத்திரத்தை முழுமையாகப் பின்பற்றி ஆட்சி செய்து வந்தவர் யார்?**
மனுநீதிச் சோழன்

**இந்நூலுக்கு வேறு என்ன பெயர் உண்டு?**
மானவ தர்மம்

# மலைச்சாரல்

ஈரோஸ் ஜனநாயக முன்னணி

## வடக்கு, கிழக்கு, மலையகத்தில் தனித்தும், கூட்டாகவும் போட்டி



ஈரோஸ் ஜனநாயக முன்னணி, பாராளுமன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் போட்டியிடவுள்ளதாக முன்னணியின் செயலாளர் ஜீவன் இராஜேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இம்முறை தேர்தலில் ஈரோஸ் ஜனநாயக முன்னணி தனித்தும், கூட்டாகவும் போட்டியிட தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இது தொடர்பாக மேலும் தெரிவித்த ஜீவன் இராஜேந்திரன்,

வடக்கில் யாழ். மற்றும் வன்னி ஆகிய இடங்களிலும் கிழக்கில் மட்டக்களப்பிலும் மலையகத்தில் நுவரெலியா மாவட்டத்திலும் ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் தேர்தல் சின்னமான ஒலிபெருக்கி சின்னத்தில் போட்டியிடவுள்ளது. ஏனைய மாவட்டங்களில் பொது சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

(ஆ.ரமேஸ்)

## பதினொரு பிள்ளைகளின் தந்தை பொல்லால் தாக்கப்பட்டு கொலை

இறக்குவானையில் சம்பவம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)




11 பிள்ளைகளின் தந்தையொருவர் பொல்லால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ள சம்பவமொன்று இறக்குவானை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இறக்குவானை ரங்கவலதென்ன பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மிகவும் மோசமான குடி பழக்கத்துக்கு அடிமையாகியிருந்த இந்த நபர், தனது மனைவியுடன் ஏற்பட்ட சர்ச்சையில், மனைவியின் சகோதரரை தாக்க முயற்சித்துள்ளார். இதன்போது, மனைவியின் சகோதரர், தற்பாது காப்புக்காக அந்த நபரின் தலையை பொல்லால் தாக்கியுள்ளார். இதில் படுகாயமடைந்த அவர், இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று (6) உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில், உயிரிழந்தவர், இரண்டு திருமணங்களை செய்துள்ளதுடன், இவரின் முதல் மனைவிக்கு 7 பிள்ளைகளும் இரண்டாவது மனைவிக்கு 4 பிள்ளைகளும் இருப்பதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு கண்டியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரம்

1,191,399 பேர் வாக்களிக்க தகுதி

(அக்குறணை குறூப் நிருபர்)



பாராளுமன்ற தேர்தல் வேட்புமனுக்கள் தொடர்பாக, கண்டி மாவட்டத்தில் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவத்தாட்சி அதிகாரி சந்தன தென்னகோன் தெரிவித்தார்.

தேர்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய இதர பணிகளுக்கு போதிய பாதுகாப்பு வழங்க, மத்திய பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கண்டி மாவட்டத்தில் சுமார் 1,191,399 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதுடன், இவர்கள் 890 தேர்தல் நிலையங்களில் வாக்களிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கெட் விளையாடிய மாணவன் உயிரிழப்பு

(தலவாக்கலை குறூப் நிருபர்)



கொட்டகலை கேம்பிரிட்ஜ் பாடசாலையில் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்த மாணவனொருவர், வழுக்கி விழுந்ததில் உயிரிழந்துள்ளார். கொட்டக்கலை கேம்பிரிஜ் கல்லூரியில் தரம் 13 இல் கல்வி பயிலும், தலவாக்கலை, கிறேட்வெஸ்டன் ஸ்கல்பா தோட்டத்தைச் சேர்ந்த 18 வயதுடைய சிவகுமார் நதீஸன் என்ற மாணவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த 04 ஆம் திகதி பாடசாலை இடைவேளை நேரத்தில் சக மாணவர்களுடன் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்த இம் மாணவன், பிடி எடுப்பதற்காக ஓடியபோது, கால் தடுக்கி கீழே விழுந்ததில் பாடசாலை கட்டடத்தில் தலைப்பகுதி மோதி காயமடைந்துள்ளார். இதனையடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இம் மாணவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## மலையகத்தில் கடும் வெப்பம்; காடுகளுக்கு தீ வைப்பு

மஸ்கெலியா நிருபர்

மத்திய மலை நாட்டில் கடந்த சில நாட்களாக நிலவி வரும் கடுமையான வெப்பம் காரணமாக பிரதான நீர் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. காசல்ரீ, மவுசாகல மற்றும் கென்யோன் ஆகிய நீர் தேக்கங்களின் நீர் மட்டமே இவ்வாறு குறைவடைந்துள்ளதாக தெரியவருகிறது. மவுசாகலை நீர்தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட 22 அடி குறைந்துள்ளதாகவும் கென்யோன் நீர்தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட 28 அடி மட்டுமே நீர் உள்ளதுடன் காசல்ரீ நீர் தேக்கத்தின் நீர் மட்டமும் குறைவடைந்துள்ளது. இதனிடையே, நீர்தேக்க பகுதிகளிலுள்ள பற்றை காடுகளுக்கு தீ வைக்கும் சம்பவங்களும் பதிவாகிவருகின்றன. கடந்த வாரம் காசல்ரீ நீர்தேக்க பகுதியிலுள்ள பற்றைக்கு தீ வைக்கப்பட்டதில் சுமார் இரண்டு ஏக்கர் நிலப் பரப்பளவு எரிந்து நாசமாகியுள்ளது. இதனால், வன ஜீவராசிகள் மற்றும் பறவைகள் அழிந்து போகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் வன பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அம்பேகமுவ வன பகுதியில்

## கஞ்சா செடிகள்; இருவர் கைது



(ஊவா சுழற்சி நிருபர்)

வெல்லவாய தனமல்வில நகரங்களுக்கிடையேயுள்ள உனக்கந்த வனப் பிரதேசத்தில், பயிரிடப்பட்ட இரண்டு கஞ்சா சேனைகளை கண்டுபிடித்த குற்றவியல் பொலிஸார், இரு சந்தேகநபர்களையும் கைது செய்துள்ளனர்.

கடந்த 4 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, நன்கு பயிரிடப்பட்ட சோள சேனையின் நடுவே, இவ்வாறு 77 ஆயிரம் கஞ்சா செடிகள் பயிரிடப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மொனராகலை போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, வெல்லவாய மற்றும் தனமல்விலவுக்கிடையே அம்பேகமுவ வனப் பிரதேசத்தை, சுற்றி வளைத்தபோதே இந்த கஞ்சா செடிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## இரத்தினபுரி, கேகாலையில் மூத்த பிரஜைகள் கௌரவிப்பு

(காவத்தை தினகரன் விசேட நிருபர்)

இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களிலுள்ள மூத்த பிரஜைகளை கௌரவிக்கும் நிகழ்வு, இரத்தினபுரியில் அமைந்துள்ள, சப்ரகமுவ மாகாண சபை கேட்போர் கூடத்தில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை (04) இடம்பெற்றது.

சப்ரகமுவ மாகாண சமூக சேவைகள் அமைச்சும் மாகாண சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து மேற்படி நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

சப்ரகமுவ மாகாணத்திலுள்ள 29 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் முதியோர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.





இதன்போது முதியோர்களின் நடனம், பாடல், நாடகம், உள்ளிட்ட பல கலாசார நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

## தேசியப்பட்டியல் ஆசனமொன்றை பெறுவதற்காக அம்பாறை, திருமலை மாவட்டங்களை இழப்பதா?

தேர்தலில் ஒன்றிணைந்து போட்டியிட தமிழரசுக் கட்சியை அழைக்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

(வவுனியா விசேட நிருபர்)

தமிழரசுக் கட்சி தேசியப் பட்டியல் ஆசனமொன்றுக்காக திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இரு தமிழ்ப் பிரதிநிதிகளை இழக்கும் நிலையை ஏற்படுத்தப் போகின்றதென ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் செயற்குழு கூட்டம் நேற்றுமுன்தினம் (05) வவுனியாவில் நடைபெற்றது. அதன் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த சுரேஷ் பிரேமச்சந்திரன், "தமிழ் மக்களின் உரிமைகளுக்காக பொதுக் கட்டமைப்பானது தொடர்ந்தும் பணியாற்றும் என்பதை நாம் இரு தரப்பும் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பினூடாக சங்கு சின்னத்தில் போட்டியிடுவதற்கு தீர்மானித்திருக்கின்றோம். போட்டியிடும் வேட்பாளர்கள் தொடர்பான இறுதி முடிவுகள் விரைவில் அறிவிக்கப்படும்" எனக் குறிப்பிட்டார்.

"நாம் பிரிந்து நிற்பதால் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களின் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இழந்துவிடும் நிலை இருக்கிறது. கடந்த முறை அம்பாறையில் அந்த இடத்தை இழந்திருக்கின்றோம். எனவே அங்கு தமிழ்ப் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றுவதற்கான இரண்டு வழிமுறைகளை தமிழரசுக் கட்சிக்கு கூறியிருக்கின்றோம்.

இது தொடர்பாக, தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, செயலாளர் ப.சத்தியலிங்கம், சி.சிறிதரன் ஆகியோருடன் நானும், செல்வம் அடைக்கலநாதனும், சித்தார்த்தனும் பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டிருந்தோம்.

எனவே, இருதரப்பும் இணைந்து வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும் பட்சத்திலேயே அந்த பிரதிநிதித்துவம் காப்பாற்றப்படும். எனவே 07 ஆம் திகதிக்கு (இன்று) முன்னர் உத்தியோகபூர்வமான பதிலை அறிவுக்குமாறு நாம் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

திருகோணமலையில் வீடு சின்னத்திலும், அம்பாறையில் சங்கு சின்னத்திலும் தேர்தலை கேட்கலாம் என நாம் முன்னர் பேசியிருந்தோம். அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.



தற்போது அனைத்து இடங்களிலும் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவதாக கூறுகிறார்கள். அது நடந்தால் இந்த மாவட்டங்களின் ஆசனங்கள் இழக்கப்படும் நிலையே ஏற்படும். தங்களது தேசியப் பட்டியலை கூட்டிக்கொள்வதே அவர்களது நோக்கம். ஒரு தேசியப் பட்டியலுக்காக இரண்டு ஆசனங்களை இழக்கப் போகின்றார்கள். இதுபோல ஒரு முட்டாள் தனமான முடிவு எதுவும் இருக்காது" என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்

வன்னி தேர்தல் தொகுதியில்

## தபால் பெட்டி சின்னத்தில் சிறிரெலோ கட்சி தனித்துப் போட்டி

(கரவெட்டி தினகரன் நிருபர்)



தென்னிலங்கை மக்கள் ஜனாதிபதி தேர்தலில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி அரசியலில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும் அத்தகையதொரு அரசியல் புரட்சியை தமிழ் மக்களும் விரும்புவதாகவும் சிறிரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசா தெரிவித்துள்ளார். அதன் படி, வன்னித் தேர்தல் தொகுதியில் சிறிரெலோ கட்சி தனித்து போட்டியிடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த அவர், கடந்த காலங்களில் தாம் தெரிவு செய்த உறுப்பினர்களால் ஏமாந்துபோன தமிழ் மக்கள், இம்முறை அவர்களை புறக்கணித்து புதிய துடிப்புள்ளவர்களை பாராளுமன்றம் அனுப்புவதற்கு தயாராகி வருகின்றார்கள். அம் மக்களின் விருப்பதுக்கு ஏற்ப வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் துடிப்புள்ள இளம் மற்றும் திறைமை வாய்ந்த வேட்பாளர்களுடன் சிறிரெலோ கட்சி, ஜனநாயக தேசிய கூட்டணி கட்சியின் தபால் பெட்டி சின்னத்தில் போட்டியிடுகின்றது. எனவே, வன்னியை மாற்ற அனைவரும் ஒன்றிணையுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என அவர் தெரிவித்தார்.

## ஆசிரியர் தினத்தன்று ஆசிரியரின் வீடு, மோட்டார் சைக்கிள் தீக்கிரை

(ஓமந்தை விஷேட நிருபர்)





முள்ளியவளை பிரபல பாடசாலையொன்றில் ஆசிரியராக கடமையாற்றும் ஆசிரியர் ஒருவரின் வீடு மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன இனந்தெரியாத நபர்களால் நேற்று முன்தினம் இரவு (05) தீ வைக்கப்பட்டுள்ளது.

இதில் ஆசிரியரின் வீடு பகுதியளவில் எரிந்துள்ளதுடன், மோட்டார் சைக்கிள் முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளது. முல்லைத்தீவு முள்ளியவளை பகுதியில் ஆசிரியர் தங்கியிருந்த வீட்டுக்கு இவ்வாறு தீ வைக்கப்பட்டபோது, சக ஆசிரியர்களின் உதவியுடன் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஐஸ், ஹெரோயினுடன் இளம் குடும்பஸ்தர் கைது

(ஓமந்தை விஷேட நிருபர்)




தேராவில் பகுதியில் ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த நபரொருவரை புதுக்குடியிருப்பு பொலிஸார் நேற்று முன்தினம் (05) கைதுசெய்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேராவில் தேக்கங்காடு பகுதியில், சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய, திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையினை மேற்கொண்ட பொலிஸ் குழுவினர் இந்த கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்த நபரிடமிருந்து 3 கிராம் 10 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், 430 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவத்தில் தேராவில் பகுதியினை சேர்ந்த 38 வயதுடைய குடும்பஸ்த்தர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடம் மேற்கொள்ளப்பட்டுவரும் மேலதிக விசாரணைகளின் பின்னர், நேற்று (06) முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நீதிமன்ற நடவடிக்கையின் பின்னர் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## யாழ்ப்பாணத்தில் முன்னாள் போராளி விபத்தில் உயிரிழப்பு

(யாழ். விசேட நிருபர், கரவெட்டி தினகரன் நிருபர்)



யாழ்ப்பாணம், செம்பியன்பற்று வடக்கு பகுதியில், இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த முன்னாள் போராளி ஒருவர் உயிரிழந்துள்ளார். கடந்த 04ஆம் திகதி இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், படுகாயமடைந்த இந்த நபர், வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று (06) ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார். யாழ். வடமராட்சி கிழக்கு மாமுனை பகுதியை சேர்ந்த புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளியான புரட்சி என அழைக்கப்படும் நடேசு பரமேஸ்வரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வன்னி வேட்பாளர் விபரம்

(வவுனியா விசேட நிருபர்)

ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் (ஈபிடிபி) வன்னி மாவட்ட வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, வன்னி தேர்தல் மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் நியமிக்கப்பட்டுள்ளார். அவருடன் வவுனியாவை பிரதிநிதித்துவப்படுத்தி கிறிஸ்தோபர் டினேஸ் றொசின்ரன், மதுர பிரபோத் ஹேரத் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன், வன்னித் தேர்தல் மாவட்டத்தின் முல்லைத்தீவை பிரதிநிதித்துவப்படுத்தி அந்தோனிப்பிள்ளை ஜெயராஜ், வின்சன் டிபோல் அருள்நாதன், சின்னத்துரை கலாநிதி ஆகியோரும் மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி ஞானப்பிரகாசம் மரியசீலன், முருகேசு கதிர்காமநாதன், இந்திரகுமாரன் செல்வம் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# லண்டன் பிரேம் அறக்கட்டளையால் மாணவர்களுக்கு பேனாக்கள் அன்பளிப்பு







நுவரெலியா கல்வி பிராந்தியத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட சரஸ்வதி தமிழ் வித்தியாலயத்தில் 504 மாணவர்களுக்கும் சுமண சிங்கள மகா வித்தியாலயத்தில் 100 மாணவர்களுக்கும் சென். கூம்ஸ் தமிழ் வித்தியாலயத்தில் 392 மாணவர்களுக்கும் வட்டகொட தமிழ் வித்தியாலயத்தில் 282 மாணவர்களுக்கும் தலவாக்கலை பாரதி வித்தியாலயத்தின் 481 மாணவர்களுக்கும் தரமான பேனாக்கள் அதிபர், ஆசிரியர்களால் வழங்கப்பட்டன.

லண்டன் பிரேம் அறக்கட்டளை, கொழும்பு முன்னாள் மாநகர சபை உறுப்பினர் காயத்திரி விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிய தரமான பேனாக்கள் மேற்படி வித்தியாலயங்களில் கல்வி பயிலும் 9 முதல் 13 வரை வகுப்புளைச் சேர்ந்த மாணவர்களுக்கு சர்வதேச சிறுவர்கள் தினத்தை முன்னிட்டு இந்த பேனாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய ஸ்தாபக அறங்காவலர்களில் ஒருவரான சிவகுரு பிரேமசந்திரா தான் வாழ்ந்த காலத்தில், இந்த அறக்கட்டளையை அமைக்க எண்ணியிருந்தார்.

அவர் இறைவன் அடி சேர்ந்ததைத் தொடர்ந்து அவரது பாரியார் வசந்தா பிரேமச்சந்திரா மற்றும் உறவினர்களால் பிரேம் அறக்கட்டளை ஸ்தாபிக்கப்பட்டு பல்வேறு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# நூலக உத்தியோகத்தர் தங்கேஸ்வரியின் 30 வருடகால சேவைக்கு கௌரவம்



கல்முனை பொதுநூலகத்தில் நூலக உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி சுகிர்தன் தங்கேஸ்வரி அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுவதை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட பிரியாவிடை மற்றும் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

நூலகர் ஏ.எல்.எம். முஸ்தாக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை மாநகரசபையின் கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், ஆயுர்வேத வைத்திய அதிகாரி டொக்டர் திருமதி நந்தினி பவன், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வர வர்மன் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது அரச சேவையில் 30 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள நூலக உதவியாளர் திருமதி சுகிர்தன் தங்கேஸ்வரியின் உன்னத சேவைகள் குறித்து அதிதிகளின் உரைகளில் எடுத்துரைக்கப்பட்டதுடன், நூலக சமூகத்தினரின் சார்பில் அதிதிகளினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். அத்துடன் நூலக உத்தியோகத்தர்களினால் மாலைகள் அணிவித்தும் பாராட்டப்பட்டார்.

இந்நிகழ்வில் மருதமுனை நூலகர் ஹரீஷா சமீம், நற்பிட்டிமுனை நூலகர் எம். அமீனுல்லாஹ், அட்டாளைச்சேனை நூலகர் ஏ.சி. அன்வர் சதாத், அக்கரைப்பற்று நூலகர் ஐ.எல்.எம். ஹனிபா உட்பட நூலக உதவியாளர்கள் மற்றும் நூலகப் பணியாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**





கலேவெல பிரதேசசபை முன்னாள் உறுப்பினரும் சர்வதேச மனித உரிமை உலகளாவிய ரீதியில் பணிப்பாளருமான பி.எம்.மௌபீத்தின் ஏற்பாட்டில் கலேவல நமடகஹவத்த ஜும்ஆ பள்ளிவாசலுக்கு (04) சக்கர நாட்காலியும் ஊன்றுகோல்களும் இலவசமாக வழங்கப்பட்டன. பள்ளிவாயசல் நிர்வாக சபைத் தலைவர் சமீரிடம் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் மௌபீத் கையளிப்பதை படத்தில் காணலாம்.

(படம் மாத்தளை சுழற்சி நிருபர்)

# அக்கரைப்பற்று கல்வி வலய சிறுவர் விளையாட்டு விழா

**(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)**

ஆரம்பப் பிரிவுக்கான சிறுவர் மெய்வல்லுநர் விளையாட்டு விழா அக்கரைப்பற்று கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி எம்.எம்.சித்தி பாத்திமா தலைமையில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் ஆரம்பப் பிரிவிற்கான சிறுவர் மெய்வல்லுநர் விளையாட்டுக்கான இணைப்பாளரும், உதவிக்கல்விப் பணிப்பாளருமான ஏ.எல்.பாயிஸின் நெறிப்படுத்தலின் கீழ் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலை மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ் சேய்க் ஏ.எம். றஹ்மத்துல்லாஹ் பிரதம அதிதியாக் கலந்து கொண்டு விளையாட்டு நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

பொத்துவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை கல்விக் கோட்டப் பாடசாலைகளில்



இருந்து ஆரம்பப் பிரிவு மாணவர்கள் சிறுவர் மெய்வல்லுநர் விளையாட்டு விழாவில் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிக்காட்டினர்.

அக்கரைப்பற்று வலய மட்டத்தில் முதல் இடங்களை பெறும் பாடசாலையின் அணிகள் கிழக்கு மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளும்.

இந்நிகழ்வில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களான எம்.ஏ.சி.எம்.ஜுஹைஸ், ஏ.எல்.எம். இப்றாஹிம், ஏ.ஆர்.எம்.றிம்சான் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.


## கேள்வி கோரல் – 2025ம் ஆண்டு
## கொலொன்ன பிரதேச சபை

கொலொன்ன பிரதேச சபைக்குச் சொந்தமான கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்படும் சொத்துக்களை 2025.01.01 முதல் 2025.12.31 வரையான ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்வி கோரல்**

1. மாதிரிகள் விநியோகித்தல் - 2024.10.07 முதல் 2024.10.28 பி.ப. 3.00 வரை
2. ஏற்றுக்கொள்ளல் - 2024.10.29 மு.ப. 10.00 வரை
3. திறத்தல் - 2024.10.29 மு.ப. 10.15 இற்கு
4. கேள்வி கோரல் மாதிரிப் பத்திர கட்டணம் மற்றும் கேள்விக்கான பிணை வைப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை**

| வார சந்தையின் பெயர் | கேள்விப் பிணை (மீளளிக்கப்படும்) ரூ. | மாதிரிப் பத்திர கட்டணம் (மீளளிக்கப்படாத) ரூ. | குறைந்தபட்ச கேள்வி ரூ. |
|---|---|---|---|
| கொடவெல வார சந்தை | 6,000/- | 1,000/- | 520,000/- |
| சூரியகந்த வார சந்தை | 1,000/- | 500/- | 78,000/- |

கேள்வி பற்றிய இறுதித் தீர்மானம் கொலொன்ன பிரதேச சபைக்கு உரியது. மேலதிக விபரங்களை கொலொன்ன பிரதேச சபை அலுவலகத்தின் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களில் விசாரித்து அறிந்து கொள்ளலாம்.
(தொலைபேசி இலக்கம்: 045-2260275)

**செயலாளர் மற்றும் அதிகாரம்
செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,
கொலொன்ன பிரதேச சபை,
கொலொன்ன.**



## விலைமனுக்களுக்கான அழைப்பு

**பெண்கள், சிறுவர் மற்றும் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு**

**சிறு தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவு**

**கொழும்பு 07, சிறு தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவிற்கு மடிக் கணனிகளை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்**

**ஒப்பந்த இலக்கம்: SEDD/Proc/06/02/01(i)**

பின்வருமாறு விபரிக்கப்படும் கொழும்பு 07, சிறு தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவிற்கு மடிக் கணனிகளை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல் (ஒப்பந்த இலக்கம்: SEDD/Proc/06/02/01(i) எனும் வேலைக்கு தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை சிறு தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

1. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
2. விலைமனுதாரர் இலங்கையின் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் ஐந்து வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-7, இல. 420, பௌத்தாலோக்க மாவத்தை, சிறு தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவு, உதவிப் பணிப்பாளர் (பெறுகை, நிதி மற்றும் ஒத்துழைப்புச் சேவைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011-2665059 மற்றும் இதே முகவரியில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையான விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-10-07ஆம் திகதி முதல் 2024-10-28ஆம் திகதி மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ஐயாயிரம் (ரூபா 5,000.00) ரூபாவைச் செலுத்திய பின்னர் கொழும்பு-7, இல. 420, பௌத்தாலோக்க மாவத்தை, சிறு தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவு, உதவிப் பணிப்பாளர் (பெறுகை, நிதி மற்றும் ஒத்துழைப்புச் சேவைகள்) அவர்களுக்கு எழுத்துருவிலான விண்ணப்மொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
5. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளுடனான விலைமனுக்கள் 2024-10-29ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரியில் உள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தயவு செய்து கொழும்பு 07, சிறு தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவிற்கு மடிக் கணனிகளை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல் (ஒப்பந்த இலக்கம்: SEDD/Proc/06/02/01(i) எனக் குறிப்பிடவும்.
6. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் கொழும்பு-7, இல. 420, பௌத்தாலோக்க மாவத்தை, சிறு தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் உடன் திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 77 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களுடனும் பின்வரும் வகையில் விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - நான்கு இலட்சம் ரூபா தொகைக்கு (ரூபா 400,000.00)
   - விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல்105 நாட்களுக்குச் செல்லுபடியாகும் தன்மையில்
9. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024 ஒக்டோபர் 15ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு சிறு தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவில் இடம்பெறும்.

**தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
சிறு தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவு,
இல. 420, பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு-07.**



## 2025 ஆண்டிற்கான ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல்
## அகலவத்த பிரதேச சபை – அகலவத்த

2025 ஆண்டிற்கு கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் ஒப்பந்தக்காரர்கள்/ அனுமதிக்கப்பட்ட தொண்டர் அமைப்புகள்/ வழங்குநர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து 2024.12.31 பி.ப. 3.00 வரை என்னால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சுயமாகத் தயாரிக்கப்பட்டுப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பமொன்றின் மூலம் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

சகல விண்ணப்பங்களும் தமது நிறுவனம் (இருப்பின்) முகவரி மற்றும் ஏனைய விபரங்களுடன் குறித்த கட்டணத்தை காசாக அல்லது காசோலை மூலம் "தலைவர், பிரதேச சபை, அகலவத்த" விற்கு பதிவுத் தபாலில் அல்லது அகலவத்த பிரதேச சபைக்கு கையோடு கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். காசோலை மூலம் செலுத்துவதாயின் "தலைவர், பிரதேச சபை, அகலவத்த" என்ற பெயருக்கு காசோலைகளை எழுதுதல் வேண்டும்.

விண்ணப்பங்களை உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 2024 ஆண்டிற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல் என்று குறிப்பிடுதல் வேண்டும்.

சகல வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பதிவு செய்வதற்காக ரூ. 1000.00 தொகையை மற்றும் சகல ஒப்பந்தக்காரர்கள் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும். விண்ணப்பிக்கும் ஒப்பந்த பெறுமதிக்கு குறித்த சான்றிதழ் பத்திரங்களை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். வெற்றிகரமான ஒப்பந்தக்காரர்கள் என்பதை உறுதி செய்வதற்கு எழுத்து மூல சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும். ICTAD நிறுவனத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்கள் பெறுமதி சான்றிதழை சமர்ப்பிக்கத் தேவையில்லை என்றும் பதிவுச் சான்றிதழானது 2025.12.31 வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**வழங்கல்கள் மற்றும் சேவைகள்**

01. காகிதாதிகள்
02. மின்சாரப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் (வீதி விளக்கு உபரகரணங்கள்)
03. அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்
04. அச்சு விடயங்கள் (புத்தகம் கட்டுதல், புத்தகம் அச்சிடல், கையேடுகள்)
05. சுகாதார உபகரணங்கள் (தும்புத்தடி, விளக்குமாறு, ரேக்கை, மண்வெட்டி, சவல், வீல்பெரோ)
06. கட்டிடப் பொருட்கள் மற்றும் துணைப்பாகங்கள் (கல், மணல், செங்கல், அழுத்தப்பட்ட கொங்கிறீட் துண்டுக்கல், இரும்பு, சீமெந்து, பலகை பராலை, ரீப்பை, ஜீஐ பைப், தீந்தை வகை, எஸ்பெஸ்டஸ், நீர்க்குழாய் போன்ற ஹியூம் பைப் புல் வெட்டும் மெசின் நூல் போன்றன)
07. கிருமி நாசினி மற்றும் மருந்து வகைகள்
08. சீருடைத்துணி மற்றும் திரைச்சீலை
09. வாகன சேர்விஸ் நிலையங்களுக்கு தேவையான ஒயில், கிறீஸ்,
10. வாகன பழுதுபார்ப்பிற்கு தேவையான உதிரிப் பாகங்கள், டயர் டியூப்
11. பெயர்பலகை/ பெனர் தயாரித்தல்
12. கணனி மற்றும் துணைப்பாகங்கள் (ரோனியோ இயந்திரம், பெக்ஸ் இயந்திரம், போட்டோப் பிரதி இயந்திரம்)
13. சுகாதார பாதுகாப்பு உபகரணங்கள் (கையுறை, முகக்கவசம், மழை அங்கி, கம்பூட்ஸ், சப்பாத்து பூட்ஸ்)
14. தார், பிரீமிக்ஸ் மற்றும் கோலாஸ்
15. நாள் முத்திரை, றப்பர் முத்திரை
16. பொலித்தீன் பை, உரப்பை வழங்குதல்
17. தீயணைப்பு உபகரணங்கள்
18. காணி அளவை விடயங்கள் (நில அளவை சேவை)
19. தொழில்நுட்ப உபகரண சேவை மற்றும் பராமரிப்பு உபகரணங்கள்
20. சட்டத்தரணிகள் சேவை.
21. அலுமினியம் கதவு, யன்னல் பொருத்துதல், சிவிலின், கூரை வடிகான்
22. கொம்போஸ்ட் களஞ்சியத்தின் மீள் சுழற்சிப் பொருட்களைக் கொள்வனவு செய்தல். (பிளாஸ்டிக், சிரட்டை, பெட் போத்தல், கண்ணாடி, காட்போர்ட், டின்கள், பொலிதின், செய்தித்தாள்கள், பொக்ஸ் போர்ட்)
23. முன்பள்ளி உபகரணம் மற்றும் விளையாட்டுப் பொருட்கள்
24. சகல வகையான சிவில் நிர்மாணங்கள்

**அட்டவணை**

| ஒப்பந்த பெறுமதி | தொகை | | பதிவுக் கட்டணம் |
|---|---|---|---|
| I. ரூ. 50000/- | | வரை | ரூ. 1000/- |
| II. ரூ. 50000/- | முதல் | ரூ. 100,000/- | ரூ. 1500/- |
| III. ரூ. 100000/- | முதல் | ரூ. 500,000/- | ரூ. 2500/- |
| IV. ரூ. 500000/- | முதல் | ரூ. 1,000,000/- | ரூ. 3000/- |
| V. ரூ. 1000000/- | முதல் | ரூ. 2,000,000/- | ரூ. 4000/- |

மேலதிக விபரங்களிற்காக 034-2243236

**ஜீ.என். பட்டுவிட்ட,
பிரதேச சபை செயலாளர்,
மற்றும் அகலவத்த பிரதேச சபையின்
அதிகாரம் செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி**

2024.10.04
**அகலவத்த பிரதேச சபை**


# அரிசியில் செயற்கை தவிட்டு சாயத்தை பூசிய நபருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம்

அரிசியில் செயற்கை தவிட்டு சாயத்தை கலந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அரிசி ஆலை உரிமையாளருக்கு 20 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

சுதுமலை பகுதியிலுள்ள அரிசி ஆலையொன்றில், பொது சுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது, செயற்கை தவிட்டு சாயங்கள் கலந்த ஒரு தொகை அரிசி கடந்த ஒகஸ்ட் மாதம் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த அரிசி மாதிரிகளை மேலதிக பரிசோதனை நடவடிக்கைக்காக அநுராதபுரத்திலுள்ள அரச பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், பரிசோதனை முடிவில், அரிசியில் சாயம் கலக்கப்பட்டமை உறுதி செய்யப்பட்டது.

அதனையடுத்து, அரிசி ஆலை உரிமையாளருக்கு எதிராக கடந்த வெள்ளிக்கிழமை (4) மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கு விசாரணையில் உரிமையாளருக்கு 20 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தலசீமியா நோய்க்கான சிகிச்சை நிலையம் ஆரையம்பதியில் ஆரம்பம்

**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**

தலசீமியா நோய்க்கான சிகிச்சையை கிழக்கு மாகாணத்தில் விஸ்தரிக்கும் முதன்மை நடவடிக்கையாக, பிராந்திய தலசீமியா சிகிச்சை மையம் ஆரையம்பதி பிரதேச வைத்தியசாலையில் திறந்து வைக்கப்பட்டது.

தலசீமியா, ஒரு நபருக்கு அவரது பெற்றோரிடமிருந்து கடத்தப்படும் மரபணு நோய் ஆகும். ஹீமோகுளோபின் உற்பத்தியில் குறைபாடுகளை ஏற்படுத்தி குருதிச்சோகை உண்டாக்குதலே இந்நோய் ஆகும்.



மட்டக்களப்பு பிரதேசத்தில் 200 இற்கு மேற்பட்டவர்களுக்குக் காணப்படும் இந்நோயானது, நாடளாவிய ரீதியில் 2000 இற்கு அதிகமான குழந்தைகளை பாதித்துள்ளதாகக் கண்டறிப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் நோயாளர்களை அடையாளம் காணல், நோயாளர்களுக்கான இரத்தமாற்று, நோய்த்தடுப்பு ஆலோசனைகள், விழிப்புணர்வு நடவடிக்கைகள் உட்பட்ட பல்வேறு வகையான நோய்த் தடுப்பு சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான விசேட ஒருங்கிணைப்பின் தேவை கருதி அமைக்கப்பட்ட இந்நிலையத்திற்கான நிதிப்பங்களிப்பினை அயர்லாந்தைச் சேர்ந்த சோனியா லிஞ்ச் என்கின்ற குழந்தையின் நினைவாக, பெற்றோர்கள், நண்பர்கள் மற்றும் சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனத்தினர் ஆகியோர் வழங்கியிருந்தார்கள்.

# கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை

## 2025ம் வருடத்தில் இறைச்சி கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்வி கோரல்

கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை 2025ஆம் வருடத்திற்காக பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள கடை அறைகளில் இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| தொ. இல. | இடம் | கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்பு ரூபா | குறைந்த பட்ச கேள்வி ரூபா |
|---|---|---|---|---|
| 01 | கொத்தட்டுவ மாட்டிறைச்சிக் கடை | 3,000.00 | 5,000.00 | 11,000.00 |
| 02. | கொத்தட்டுவ கோழி இறைச்சிக் கடை | 3,000.00 | 5,000.00 | 228,000.00 |
| 03. | கொத்தட்டுவ பன்றியிறைச்சிக் இறைச்சிக் கடை | 3,000.00 | 5,000.00 | 140,000.00 |
| 04. | கொட்டிகாவத்த மாட்டிறைச்சிக் கடை | 3,000.00 | 20,000.00 | 1,075,000.00 |
| 05. | கொட்டிகாவத்த கோழியிறைச்சிக் கடை | 3,000.00 | 5,000.00 | 310,000.00 |
| 06. | கொட்டிகாவத்த புதிய கோழியிறைச்சிக் கடை | 3,000.00 | 5,000.00 | 310,000.00 |
| 07. | கொட்டிகாவத்த ஆட்டிறைச்சிக் கடை | 3,000.00 | 5,000.00 | 180,000.00 |
| 08. | கொட்டிகாவத்த பன்றியிறைச்சிக் கடை | 3,000.00 | 7,500.00 | 485,000.00 |
| 09. | அங்கொடை மாட்டிறைச்சிக் கடை | 3,000.00 | 5,000.00 | 105,000.00 |
| 10. | அங்கொடை கோழியிறைச்சிக் கடை | 3,000.00 | 5,000.00 | 130,000.00 |
| 11. | அங்கொடை பன்றியிறைச்சிக் கடை | 3,000.00 | 5,000.00 | 105,000.00 |

கேள்விகள் விண்ணப்பங்கள் வழங்குதல் 2024-10-07ஆம் திகதி முதல் 2024-11-04ஆம் திகதி பி. ப. 3.00 வரை இடம்பெறும். கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் 2024-11-05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அன்றைய தினமே மு.ப. 2.00 மணிக்கு விலை கேள்விப் படிவங்கள் திறக்கப்படும்.

**நிபந்தனைகள்:**

01. கேள்விகளை இரு பிரதிகளில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் மூலப் பிரதியை ஒரு உறையிலும், இரண்டாம் பிரதியை இன்னுமொரு உறையிலும் இட்டு அந்த இரண்டு உறைகளையும் ஒரே உறையில் இட்டு ‘செயலாளர், கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை’ எனும் பெயருக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது சபையின் செயலாளர் அவர்களின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
02. கேள்விப் படிவங்களை அனுப்பும் போது நீங்கள் குத்தகைக்குப் பெற்றுக் கொள்ள உத்தேசிக்கும் கடை அறை பற்றிய விபரங்களை கேள்விகளைச் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.
03. கேள்விப் படிவம் மற்றும் கேள்வி வைப்புகளுக்காக காசோலைகள், காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் அனைத்து கட்டணங்களும் ரொக்கப் பணமாக செலுத்தப்படுதல் வேண்டும். கேள்விப் படிவங்கள் சபையினால் வழங்கப்படும் என்பதுடன் படிவங்களைப் பெற்றுக் கொள்வதற்காக வரும் போது உங்களது தேசிய அடையாள அட்டையையும் கொண்டு வருதல் வேண்டும். மேற்கூறப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக முத்திரைக் கட்டணம் செலுத்துதல் வேண்டும்.
04. அபகீர்த்தியானோர் பட்டியலிடப்பட்ட கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது. ஆகக் குறைந்த கேள்விக்குக் குறைவாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும் என்பதுடன், விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொண்டு விண்ணப்பிக்காத கேள்விதாரர்களின் பிணைப்பணம் சபைக்குரித்தாக்கப்படும்.

கேள்விகள் தொடர்பான இறுதித் தீர்மானத்தை கொட்டிகாவத்த முல்லேரியா பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

இது பற்றிய மேலதிக விபரங்களை 2024-11-04ஆம் திகதி வரை அலுவலக நேரங்களில் பின்வரும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அல்லது அலுவலகத்திற்கு வருகை தந்து பெற்றுக்கொள்ள முடியும். தொ. பே. 011-2410288

**எச்.ஏ.ஏ.எஸ். சிறிவர்தன,**
**அதிகாரம் வாய்ந்த கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி / செயலாளர்,**
**கொட்டிகாவத்த முல்லேரியா பிரதேச சபை.**

# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## INVITATION FOR BIDS (IFB)

### Infrastructure Development of Agro Tech Park at Malwaththa, South Eastern University of Sri Lanka (Balance Work)

**(SEU/CWP/NCB/2024/01)**

1. The Chairman, Department Procurement Committee, on behalf of the South Eastern University of Sri Lanka invites sealed bids from eligible and qualified bidders for the above work.
2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) procedure.

| Name of Project | Estimated Cost | CIDA Valid Registration Required | Amount of Bid Security Required | Closing Date and Time for Bid Submission |
|---|---|---|---|---|
| Infrastructure Development of Agro Tech Park at Malwaththa, South Eastern University of Sri Lanka (Balance Work) | **Rs. 83,036,498.33 + VAT (approximately)** | **C 4 and above (Building)** | **Rs.1,250,000 (Refundable)** | **28.10.2024 before 03.00 p.m.** |

3. Interested bidders may obtain further information from the **Works Engineer, South Eastern University of Sri Lanka, Oluvil** and inspect the bidding documents free of charge at the same address on any working day **from 9.00 a.m. to 03.00 p.m.** on Tel. No. 067-2255356.
4. A complete set of Bidding Documents in English Language may be purchased by interested bidders on submission of a written application to the **Assistant Registrar/ Capital Works and Planning Division, South Eastern University of Sri Lanka, Oluvil from 07.10.2024 until 24.10.2024 from 09.00 a.m. to 03.00 p.m**. upon payment of a non-refundable fee of **Rupees Twenty Thousand** (Rs. 20,000/-) **at the Shroff Counter of SEUSL, Oluvil.**
5. Bids shall be valid for a period of **119 days** from the date fixed for closing of Bids or any extended period.
6. Bids shall be accompanied by a Bid Security to the value as mentioned against the work acceptable to the employer as mentioned in the Bidding Data in the Bidding Document shall be valid for a period of **147 days** from the date fixed for closing of Bids or any extended period.
7. Bids shall be dropped in the tender box kept in the **Office of the Registrar** or sent by registered post to the **Chairman, Department Procurement Committee of South Eastern University of Sri Lanka, Oluvil** to be received before **03.00 p.m. on 28.10.2024.** Bids will be opened immediately thereafter in the Board Room of the South Eastern University of Sri Lanka, Oluvil in the presence of the bidders' representatives who choose to attend.
8. A Pre-bid meeting for the above work will be held at Agro Tech Park at Malwaththa, Sammanthurai on **25.10.2024 at 10.00 a.m.**

**Chairman**
**Department Procurement Committee**
**South Eastern University of Sri Lanka**
**Oluvil**
05.10.2024


OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

Repeat Your ad For Better Offers


# நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
## கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை

## சேர்வர் மற்றும் Four Bay - NAS துணைப் பாகத்தை கொள்வனவு செய்வதற்கான பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரல்

### Procurement No - PR/R/07/2024

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபைக்கான சேர்வர் மற்றும் Four Bay - NAS துணைப்பாகங்களை கொள்வனவு செய்வதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
அவ்விலைமனுக்களைப் பெற்றுக் கொள்ளும்போது கடைபிடிக்க வேண்டிய நிபந்தனைகள் மற்றும் விதிகள் கீழ்க்காணுமாறு அமையும்.

1. விலைக்கோரல் அரச பெறுகை வழிகாட்டல் செயற்பாட்டின் பிரகாரம் இடம்பெறும்.
2. அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கு மேற்படி பொருட்களை வழங்குதல் சம்பந்தமாக குறைந்தபட்சம் 03 வருட அனுபவம் இருப்பதுடன் வழங்கப்படும் பொருட்களின் குழுநாமப் பெயரிற்காக உள்ளூர் முகவர் நிறுவனம் அல்லது அந்த குழுநாமம் சம்பந்தமாக அதிகாரமளிக்கப்பட்ட விநியோகத்தராக இருத்தல் வேண்டும்.
3. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் அதிகார சபையின் காசாளர் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபைக்கு 2024.10.07 முதல் 2024.10.11 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை அதிகார சபை காசாளரிடம் மீளளிக்கப்படாத ரூபா 1,000/- (+ VAT) கட்டணத்தை செலுத்துவதன் மூலம் கேள்வி ஆவணத் தொகுதியைப் பெற்றுக் கொள்ளலாம்.
4. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பொறியிடப்பட்ட கேள்வி ஆவணங்களை ‘பொது முகாமையாளர், கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை, 1ம் மாடி, தேசிய வீடமைப்புத் திணைக்கள கட்டிடம், சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த, கொழும்பு 02’ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதன் மூலம் மேற்கொள்ளலாம்.
5. கீழ்க்காணும் முகவரிக்கு 2024.10.24 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு விலைமனுக்களை சமர்ப்பிக்க வேண்டியதுடன் தாமதாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை திறத்தல் அன்றே பி.ப. 2.00 இற்கு ஆரம்பிக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் இவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

**பொது முகாமையாளர்,**
**கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை,**
**முதலாம் மாடி,**
**தேசிய வீடமைப்பு திணைக்கள கட்டிடம்,**
**சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு -02.**

# நாரம்மல பிரதேச சபை

## 2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2025ஆம் வருடத்தில் நாரம்மல பிரதேச சபைக்குத் தேவையான பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்துகொள்ள விரும்பும் தகுதிவாய்ந்த வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அவ்விண்ணப்பங்களை 2024-11-29ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னர் செயலாளர், நாரம்மல பிரதேச சபை, நாரம்மல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம். விண்ணப்பங்களைத் தாங்கிவரும் கடித உறையின் இடது பக்க மேல மூலையில், 2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள்/ ஒப்பந்ததாரர்களைப் பதிவுசெய்தல் என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

சகல விண்ணப்பங்கள் பொருட்டும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா பதிவுக் கட்டணம் அறவிடப்படும் என்பதோடு காசோலை மூலம் செலுத்துவதாயின், செயலாளர், நாரம்மல பிரதேச சபை என்ற பெயருக்கு எழுதப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அலுவலக நேரத்தினுள் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கும்போது ஒவ்வொரு வகைக்காகவும் வெவ்வேறான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இதன்பொருட்டு வெவ்வேறான வகையில் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.

**அட்டவணை 01**

**பொருட்கள் மற்றும் சேவை வழங்கல்கள்**

i. அலுவலக உபகரணங்கள்/மரத் தளபாடங்கள்/உருக்கு தளபாடங்கள் மற்றும் பிளாஸ்டிக் வீட்டுத் தளபாடங்கள் வழங்குதல்
ii. காகிதாதிகள்/ அச்சடிக்கப்பட்ட படிவங்கள் மற்றும் ஆவணங்கள்/ காகிதம் / அப்பியாசக் கொப்பிகள் / பாடாசாலை பை/ தண்ணீர் போத்தல் / கணித்தல் பொறி (கல்குலேட்டர்) உட்பட ஏனைய காகிதாதிகள்
iii. நூலக புத்தகங்கள் / சஞ்சிகைகள் / பத்திரிகை வழங்குதல்
iv. விளையாட்டு பொருட்கள் / முன்பள்ளி உபகரணங்கள் வழங்குதல்
v. சீருடைகள்/ சப்பாத்துகள் / திரைச் சீலை/ விளையாட்டு ஆடைகள் / கெனபி கூடாரங்கள் வழங்குதல்
vi. கணனி துணைப்பாகங்கள்/ இலத்திரனியல் தட்டச்சுப் பொறி/ புகைப்படப் பிரதி இயந்திரம்/ தொலைநகல் இயந்திரம் / ரோணியோ இயந்திரம் /டுப்ளோ இயந்திரம்/ கணனி/ டோனர் மற்றும் ஏனைய துணைப்பாகங்கள் வழங்குதல்/பணம் எண்ணும் இயந்திரம் வழங்குதல் / புரஜெக்டர் வழங்குதல்
vii. வீதி விளக்குகளுக்கான மின் உபகரணங்கள் மற்றும் ஏனைய அனைத்து மின் உபகரணங்கள் வழங்குதல்
viii. கட்டிடங்கள் மற்றும் வீதி நிர்மாண பொருட்கள் வழங்குதல் (கொங்றீற் கம்பி தூண்கள், ஹியும் குழாய்/ ஏனைய கொங்கிறீற் பொருட்கள் /கொங்கிறீற் கற்கள்/ சீமெந்து கற்கள் / பொறியியல் செங்கல் / ABC/ பிரீமிக்ஸ் / பொருட்கள் வழங்கல் (மணல், செங்கல், ஓடுகள் உட்பட)
ix. வாகன இயந்திர உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப்பாகங்கள் வழங்குதல் (டயர்,டியூப் மற்றும் மின்கலன்கள் வழங்கல்)
x. விளம்பரப் பலகை/ பதாகைகள்/ கட்அவுட்கள்/ஸ்டிக்கர்/டின்டட் செய்தல்/ ஞாபகச் சின்னங்கள் தயாரித்தல்
xi. சுகாதாரப் பிரிவிற்கான உபகரணங்கள் (விளக்குமாறு, தும்புத்தடி, தூரிகை, சிறிய கால்துடைப்பம், கிருமி நாசினிப் பொருட்கள், கம்பூட்ஸ், குப்பைத் தொட்டி, கையுறை, முகக் கவசம், பிரம்புக் கூடை மற்றும் மழை அங்கிகள், ஹாபிக், புல் வெட்டும் இயந்திரம், மரம் வெட்டும் இயந்திரம், தோட்ட அலங்காரத்திற்கு தேவையான பொருட்கள் மற்றும் பசளை வகைகள்)
xii. மலர்க் கன்று வகைகள் மற்றும் கன்றுகள் வழங்குதல்
xiii. தார் மற்றும் கோலாஸ் வழங்குதல்
xiv. அனைத்து வண்ணப் பூச்சு வகைகள் வழங்குதல்
xv. நாய் கழுத்துப் பட்டிகள் வழங்குதல்
xvi. பழைய பத்திரிகைகள், வெற்று போத்தல்கள், பழைய இரும்புகளைக் கொள்வனவு செய்தல்
xvii. ஆற்று மணல், கிரவல் உட்பட வீதிப் பராமரிப்புடன் தொடர்புடைய பொருட்கள் வழங்குதல்
xviii. எரிபொருள் வழங்குதல்
xix. குழாய் வேலைகளுக்கு தேவையான சகல உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் வழங்குதல்
xx. சீமெந்து, இரும்பு, பிணைச்சல், கம்பி, கூரைத் தகடு, ஆணி வகைகள், கொமட், தரை விரிப்பு வகைகள் உட்பட ஏனைய கனரகப் பொருட்களை வழங்குதல்
xxi. அரிந்த மரங்கள் வழங்குதல்
xxii. குடி நீர் வழங்குதல்

**1. சேவை வழங்கல்**

i. அச்சு சேவைகள் வழங்கல், இறப்பர் முத்திரை வெட்டுதல், விளம்பரங்கள் மற்றும் பதாகைகள் அச்சிடல்.
ii. மொழிபெயர்ப்பு சேவை வழங்கல் / சட்ட நடவடிக்கைகளுக்கான சட்ட ஆலோசனைகள்
iii. வாகன இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரித்தல் சேவை (மோட்டார் கிரேடர் இயந்திரம், ஜே.சீ.பி. இயந்திரங்கள் உட்பட அனைத்து கனரக வாகனங்கள் மற்றும் இலகு வாகனங்கள் அதிகார பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதிக்குள் அல்லது அதற்கு அருகாமையில் அமைந்திருத்தல் வேண்டும்)
iv. டயர்களை மீள் நிரப்புதல்
v. அனைத்துவிதமான உருக்கியொட்டுநர்கள், தச்சர்கள், மேசன்மார், குழாய் வேலைகள், தொலைபேசி திருத்தவேலைகள்
vi. புகைப்பட இயந்திரம், தொலைநகல் இயந்திரம், ரோணியோ இயந்திரம், டுப்ளோ இயந்திரம், கணனி இயந்திரம், அச்சுப்பொறிகள் உட்பட சகலவிதமான திருத்தவேலைகள்
vii. வீச்சுக்கத்தி, அரிவாள், மண்வெட்டி, கத்தி, மண்வாரி, ஒற்றைச் சக்கர வண்டி உட்பட விவசாய மற்றும் துப்புரவேற்பாட்டு உபகரணங்களின் திருத்தவேலைகள்
viii. ஆபத்தான மரங்களை வெட்டி அப்புறப்படுத்துவதற்காக மரம் வெட்டுபவர்களைப் பதிவு செய்தல்
ix. கிரவல் போக்குவரத்து (சபையின் அதிகார எல்லையின் கிளை பாதைகள் மற்றும் ஏனைய தேவைகளுக்காக)
x. வீதிகளைச் செப்பனிடும் பெக்கோ இயந்திரம், மோட்டார் கிரேடர் மற்றும் ஏனைய இயந்திர சாதனங்களை வழங்கல் மற்றும் டெலிவரி வேன், டேலருடன் இழுவை இயந்திரம், கை உழவு இயந்திரம், லொரி, டிப்பர் வாகனம் வாடகைக்கு வழங்குதல்.
xi. உற்சவங்களுக்கான மேடை, ஒலி பெருக்கி இயந்திரங்கள், மின் ஒளியூட்டல், பிளாஸ்டிக் கதிரை, கூடாரம் உட்பட ஏனைய உற்சவப் பொருட்கள் வழங்குதல்.
xii. உற்சவங்களுக்கான உணவு வழங்குதல்.
xiii. காணி அளத்தல் வேலைகளுக்காக நில அளவையாளர்களைப் பதிவு செய்தல்
xiv. வாடகை அடிப்படையில் போக்குவரத்து வசதிகளை வழங்குதல்
xv. பொலிசெக் பசளை உறைகளை வழங்குதல்
xvi. வளிச்சீராக்கி இயந்திரங்களை வழங்குதல்

**அட்டவணை - 02**

நிர்மாண ஒப்பந்ததாரர்கள்

1. வட மேல் மாகாணத்திற்குள் சீடா நிறுவனத்தில் ICTAD (CIDA) பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்ததாரர்கள் (கைத்தொழில் மதிப்பீடு மற்றும் பெறுமதிக்கு அமைய) | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01 | 500000.00 ரூபா வரை C9 ICTAD பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். | 2000.00 |
| 02 | 2000000.00 ரூபா வரை C9 ICTAD பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். | 3000.00 |
| 03 | 2000000.00 ரூபாவுக்கு மேற்பட்டது C8 ICTAD பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். | 5000.00 |

i. CIDA நிறுவனத்தின் செல்லுபடியான பதிவுச் சான்றிதழின் பிரதி
ii. வெட் (VAT) வரிக்காக பதிவுச் சான்றிதழின் பிரதி ஒன்று மற்றும் அண்மையில் பெற்றுக்கொண்ட வெட் தீர்வு வரி சான்றிதழின் பிரதி ஒன்று (பதிவு செய்யப்படவில்லையென்றால் பதிவு செய்யப்படவில்லை என்ற பிரகடனம்)

❖ பதிவு செய்துகொண்டவர்களிடம் விலைகளைக் கோரி இயைபுடைய வழங்கல் சேவைகள் மற்றும் வேலைகளை நிறைவேற்றிக்கொள்ளப்படும் என்பதுடன் தேவையேற்படும் போது இதற்குப் புறம்பாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரத்தை நாரம்மல பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

❖ அரசாங்கத்தினால் அவ்வப்போது விதிக்கப்படும் வரித் திருத்தங்களுக்கு உட்படும்.

**விசாரணைகள் - 037 – 2249275**
**தொலைநகல் - 037 – 2249681**
**மின்னஞ்சல் - narammalaps@gmail.com**

**ஜே.எம். நிமல் ஜயசிங்க,**
**செயலாளர்,**
**நாரம்மல பிரதேச சபை,நாரம்மல.**

# சிறு விளம்பரம்






118



**ஜீப்புகள், பிக்கப்புகள்**
விற்பனைக்கு

WP KK-6961 HYUNDAI SANTAFE SUV அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 067753

119



**பஸ்கள், லொறிகள்**
விற்பனைக்கு

NW PV-5133 MAHINDRA MAXXIMO TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 067769

WP DAC-8850 TATA SUPER ACE TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 067751

WP GY-9277 MAZDA BONGO TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 067774

WP LJ-1131 TATA LPK1615 DUMP TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 067776

122



**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

EP AAT-1847 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 067760

EP BIQ-4546 HONDA DIO BIKE அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 067778

NW BFL-7048 BAJAJ CT100 BIKE அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 067764

SP AAS-6604 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 067755

SP YK-3874 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 067756

WP BFI-2320 BAJAJ PULSAR 160 NS அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 067780

124



**டிராக்டர்கள், விவசாய உபகரணங்கள்**
விற்பனைக்கு

SP SP-6652 KUBOTA K8 HAND TRACTOR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 067770

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.


Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

# 'சிறந்த நகருக்கான இளைஞர் சக்தி' 38ஆவது உலக குடியிருப்பு தினம்

**இம்முறை உலக வசிப்பிட தினம் ஒக்டோபர் 07 திகதி நடைபெறுகிறது. அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு இணையாக அதிகரித்து வரும் வீட்டு உரிமை மனிதத் தேவையும் உரிமையுமாகும். குடியிருப்புகளுக்கு அப்பால் சென்று நகர்ப்புற வீடுகளை உருவாக்குவது வரையான வீடு மற்றும் குடியிருப்பு தொடர்பிலான பார்வை வரலாற்றில் பல மைல்கற்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படுகிறது. உலக வசிப்பிட தினமும் அவ்வாறான ஒன்றாகும். ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் முதலாவது திங்கட்கிழமை உலக வசிப்பிட தினம் கொண்டாடப்படுவதோடு 'சிறந்த நகருக்கான இளைஞர் சக்தி' என்ற தொனிப்பொருளில் இம்முறை நடைபெறுவது 38ஆவது கொண்டாட்டமாகும். இந்தப் பதிவு அது தொடர்பிலாகும்.**



உலக வசிப்பிட தினத்திற்கான வரலாறு அடித்தளம் 1985ஆம் ஆண்டு உருவானதோடு முதல் கொண்டாட்ட நிகழ்வு 1986 இல் ஏற்பாடானது. மேற்கத்திய நிலுவளில் ஒன்றான ஜமைக்கா நாட்டின் கிங்ஸ்டன் நகரில் கூடிய ஐக்கிய நாடுகள் மனித குடியிருப்பு ஆணைக்குழுவின் வருடாந்தக் கூட்டத்தில் பங்கேற்ற அப்போதைய இலங்கைப் பிரதமர் ரணசிங்க பிரேமதாச அவர் தமது இலங்கை தூதுக் குழுவுக்கு தலைமை வகித்து உலக வசிப்பிட தினம் தொடர்பில் ஆலோசனையை முன்வைத்தார். உலக வசிப்பிட தினத்தின் மூலம் உலகின் அனைத்து மக்களினதும் அவதானத்தை வீடு மற்றும் குடியிருப்பு தொடர்பில் செலுத்துவதற்கு இதன்மூலம் எதிர்பார்க்கப்பட்டது. அது உலக வீட்டுப் பிரச்சினையை அடையாளம் காண்பதற்கு, பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மற்றும் தீர்ப்பதற்கு முக்கிய சந்தர்ப்பமாக இருந்தது.

37 ஆண்டுகளாக ஏற்பாடு செய்யப்பட்ட உலக வசிப்பிட தினம் வீட்டுத் துறையில் தற்போதைய சிக்கல்கள் மற்றும் முன்னுரிமையை வெளிப்படுத்தும் குறிப்பிட்ட தொனிப்பொருள் தொடர்பில் உலகளாவிய அவதானத்தை செலுத்துகிறது. இந்தத் தொனிப்பொருள்கள் வகுக்கப்பட்டிருப்பது அரசு, சிவில் சமூகம் மற்றும் தனியார் துறையினால் ஆக்கபூர்வமான மாற்றத்தை ஏற்படுத்த முடியுமான விவாதங்கள் மற்றும் நடவடிக்கைகளைத் தூண்டும் வகையிலாகும்.

குடியிருப்பு, பேண்தகு அபிவிருத்தி மற்றும் இளம் தலைமுறை தொடர்பிலான தொனிப்பொருளின் ஊடாக குடியிருப்புத் தொடர்பில் புதிய விவாதம் ஒன்றை உருவாக்குவது காலத்திற்குப் பொருத்தமானதாகும். நகரமயமாதல் காரணமாக இளம் தலைமுறையினர் ஏற்படுத்தும் தாக்கம் சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் என்ற வகையில் முக்கியமானதாகும். செயற்பாடுகள் மற்றும் தலைமைத்துவம், குடிபெயர்தலின் மூலம் பேண்தகு நகரை உருவாக்குவதற்கு காரணமாகிறது. இளமை மற்றும் புதிய போக்கு மூலம் கட்டியெழுப்பப்படும் புதிய நகர் ஒன்றாக மாறும் சிந்தனையை செயற்பாட்டுக்கு கொண்டுவருவதற்காக இம்முறை தொனிப்பொருள் முக்கியமாகிறது. இளம் தலைமுறையின் புத்தாக்கம், ஆக்கத்திறன் மற்றும் சமூகத் தொடர்புகளை மேம்படுத்தல் ஆகிய பல விடயங்கள் ஊடாக வளர்க்கப்படுகிறது.

இளம் தலைமுறையின் புத்தாக்க சிந்தனைகள் பல பிரச்சினைகளை தீர்ப்பது மற்றும் புதிய முன்னோக்கு அடிப்படையை உருவாக்குகிறது. பேண்தகு நகர் தொடர்பான எதிர்பார்ப்புகளுக்கு காலோசிதமாக காலத்திற்கு பொருந்துகின்ற அதேபோன்று பூகோள ரீதியிலான சிந்தனைகள் உருவெடுக்கின்ற களம் உருவாக வேண்டியது இளம் தலைமுறையினருக்காகவாகும்.

மில்லியன் கணக்கானோருக்கு இன்னும் பாதுகாப்பான மற்றும் வசதி முடியுமான தங்குமிடத்திற்கான வாய்ப்பு ஒன்று இல்லாத உலகம் ஒன்றில், அதற்கான பதிலைத் தேடுவதற்கு இளம் தலைமுறைக்கு முன்னுரிமை அளிப்பது காலத்திற்குப் பொருத்தமானது. வருடாந்த தொனிப்பொருள்கள் ஊடாக பேச்சுவார்த்தைக்கு உட்படுகின்ற உலக வசிப்பிட தினம் உறைவிடம் மற்றும் மனித நட்புறவுடைய சுற்றுச்சூழல் அமைப்பு ஒன்றை எதிர்காலத்திற்கு வழங்குவதற்கான புகலிடமாகும். நகரமயமாதல், குடிபெயர்தலுடன் அதிகரித்து வரும் சிக்கல்களுக்கு தீர்வை வழங்கிடம் இருந்தே காணும் காலம் வந்துள்ளது. அது உயிர் வாழ்வதற்கு உரிமை பெற்ற அனைவரைச் சூழவும் பின்னைந்த பொறுப்பாகும். பொறுப்புக்கூறலாகும். எதிர்காலத்திற்கான பதிலை வழங்குவதாகும்.

உலக வசிப்பிட தினம் உலகெங்கும் நடைமுறைக்குக் கொண்டுவரும் ஐக்கிய நாடுகளின் மனித குடியிருப்பு திட்டத்தில் இலங்கை பிரதிநிதித்துவ நிறுவனமாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு உள்ளது. 2008 இன் 36 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட நகர வதிவிட அபிவிருத்தி அதிகாரசபையினால் நகரில் குறைந்த வசதி கொண்ட குடியிருப்புகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்புவதற்கு சமூகம், பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், சமயம் மற்றும் கலாசாரம் ஆகிய அனைத்துத் துறை சார்ந்து இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. 2010ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்ப காலத்தில் கொழும்பு மற்றும் சனநெரிசல் மிக்க பகுதிகளிலும் பிற்காலத்தில் நாடு முழுவதும் உள்ளடங்குகின்ற வகையில் குறைந்த வசதியுடைய மக்களை இலக்கு வைத்து உலக வசிப்பிட தினம் கொண்டாடப்படுகிறது.

38ஆவது உலக வசிப்பிடக் கொண்டாட்ட தினத்திற்காக துறைசார் அமைச்சு ஊடாக பல நிகழ்ச்சிகளும் செயற்படுத்தப்படுகின்றன. இதன் ஆரம்ப நிகழ்வு கடந்த செப்டெம்பர் 09ஆம் திகதி உடுகம்பொல சேனரத் பரணவிதான தேசிய பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. நகர வதிவிட அபிவிருத்தி அதிகாரசபை மூலம் இம்முறை உலக வசிப்பிட தின கொண்டாட்டத்திற்கு இணையாக சித்திர போட்டிகள், தொழில்முயற்சியாளர்களின் வர்த்தக ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள், சிறு குழுக்களுக்கான நிதி முகாமைத்துவம் தொடர்பில் பயிற்சிப் பட்டறைகள், பெற்றோர்களை இழந்த பிள்ளைகளுக்கான பாடசாலை உபகரணங்களை பெற்றுக்கொடுத்தல், குடியிருப்பு அலகில் பொதுச் சொத்துகளின் பயன்பாடு தொடர்பில் தொடர்மாடி வீடுகளின் உரிமையாளர்களை அறிவூட்டல், குடியிருப்பு சார்ந்த சிரமதான செயற்பாடுகள் மற்றும் மென்பந்து கிரிக்கெட் போட்டி போன்ற பல நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. இந்த சமூக அபிவிருத்தி நிகழ்ச்சிகள் செயற்படுவது நகர்ப்புற குறைந்த வசதிகள் கொண்ட குடியிருப்புகளில் வாழ்கின்ற பிள்ளைகள் மற்றும் இளம் தலைமுறையினரை இலக்காகக் கொண்டதாகும்.

2016 மே மாதத்தில் இடம்பெற்ற 7ஆவது உலகளாவிய வீட்டு நிதி முகாமைத்துவ மாநாட்டின் மூலம் வெளிக்கொண்டு வந்த அடிப்படை விடயங்கள் இடையே முதன்மையானது 2030ஆம் ஆண்டில் மூன்று பில்லியன் பேருக்கு புதிய வீட்டுத் தேவை ஏற்படும் என்பதாகும்.



அதற்கு தீர்வு தேடும் நோக்கையும் கொண்டதாக தேசிய வதிவிட அபிவிருத்தி அதிகாரசபை இம்முறையும் 38ஆவது உலக வசிப்பிட தினத்தை கொண்டாடுவது குடியிருப்பு தொடர்பில் தமது பொறுப்பை நிறைவேற்றும் வகையிலாகும்.

இந்த அதிகாரசபையினால் இம்முறை வசிப்பிட தினத்திற்காக பாடசாலை பிள்ளைகளுக்கு அறிவூட்டும் நோக்குடன் சித்திர மற்றும் கட்டுரைப் போட்டிகள் ஏற்பாடு செய்தல், சித்திர கண்காட்சியினை நடத்துதல் இதில் முதன்மையானதாகும். சமகால விவாதத்திற்கு உட்படுகின்ற தொனிப்பொருள் ஒன்று போட்டியில் பரிந்துரைக்கப்பட்டது. மாவட்ட மட்டத்தில் உலக வசிப்பிட தினம் தொடர்பில் மக்களை அறிவூட்டும் பணிகளும் இதற்கு இணையாக இந்த அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகிறது.

வீடு தொடர்பில் பாடசாலை பிள்ளைகளின் சிந்தனையை மேம்படுத்துவது இந்தப் போட்டிகள் நடத்தப்படுவதன் நோக்கமாகும். உலகில் வீடுகளை நிர்மாணிப்பதன் தேவை மற்றும் பேண்தகு கோட்பாட்டுக்கு ஆக்கபூர்வமான மற்றும் அறிவுபூர்வமான சந்ததி ஒன்றை உருவாக்குவது எதிர்கால வேலைத்திட்டமாகும்.




கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சினால் ஏற்பாடு செய்யப்படும் 2024 உலக வசிப்பிட தின தேசிய கொண்டாட்ட நிகழ்வு ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10.00 க்கு, அந்த அமைச்சின் செயலாளர் [illegible] அவர்களின் தலைமையில் செத்சிறிபாய அமைச்சின் கேட்போர்கூடத்தில் நடைபெறுவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

**அஷ்ரா மு. சமத்**
**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை**


**மகளிர் விவகாரம், புனருத்தாபணம், சமூக சேவைகள், கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல் மற்றும் விநியோகம், கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி மேம்பாடு மற்றும் வர்த்தக மற்றும் வாணிப அமைச்சு - வட மாகாண சபை**
**வட மாகாணம்**

## பெறுகை அறிவித்தல்

### 2024/2025ஆம் வருடங்களுக்கான பாதுகாப்புச் சேவைகளுக்கான விலைமனு கோரல்

2024 டிசம்பர் 01ஆம் திகதி முதல் 2025-11-30ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு வட மாகாணத்தில் உள்ள அனைத்து ஐந்து மாவட்டங்களிலும் மகளிர் விவகார அமைச்சின் கீழ் செயற்படும் அலுவலகங்களுக்கான பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மாகாண அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

| தொ. இல. | மாவட்டம் | மாவட்டங்களுக்குத் தேவையான முறைமாற்றுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | 22 |
| 02 | கிளிநொச்சி | 03 |
| 03 | முல்லைத்தீவு | 02 |
| 04 | வவுனியா | 04 |
| 05 | மன்னார் | 03 |
| மொத்தம் | | 34 |

1. விலைமனுதாரர்கள் தனிப்பட்ட அல்லது நிறுவன ரீதியாக பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக செல்லுபடியாகும் வியாபார பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கூறப்பட்ட வியாபாரத்தில் மூன்று வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் விலைமனுதாரர்கள் பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சிலிருந்து ஒப்புதலைப் பெற்றிருத்தல் வேண்டும்.
2. ஒன்றில் கூறப்பட்ட விலைமனுதாரரின் பதிவு செய்யப்பட்ட தலைமை அலுவலகம் அல்லது பதிவு செய்யப்பட்ட கிளை அலுவலகம் வட மாகாணத்தினுள் அமைந்திருந்தல் வேண்டும் மற்றும் மேற்கூறிய சேவையை வட மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களுக்கும் வழங்க வேண்டும்.
3. விலைமனுக்களுக்கு மீளளிக்கப்படாத 1,000.00 ரூபா கட்டணத்தை செலுத்துவதன் பேரில் 2024-10-07ஆம் திகதி முதல் 2024-10-28ஆம் திகதி வரையான வேலை நாட்களில் 0900 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம் வரையில் ஆங்கில மொழியில் மட்டும் விலைமனுக்கள் வழங்கப்படும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும்.
5. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தலைவர், மாகாண அமைச்சு பெறுகைக் குழு, மகளிர் விவகார அமைச்சு, வட மாகாணம், இல. 04, புருதி ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 2024-10-29ஆம் திகதி மு.ப. 11.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மேற்கூறிய செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
6. கூறப்பட்ட விலைமனுக்களின் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடனடியாகத் திறக்கப்படும். ஒன்றில் விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்வதற்கு அனுமதிக்கப்படுவர்.
7. சகல விலைமனுக்களுடனும் 150,000.00 ரூபாவிற்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. ஒன்றில் முழுமையான விலைமனு அல்லது அதன் ஒரு பகுதியை நிராகரிக்க மற்றும் புதிய விலைமனுக்களை கோருவதற்கான உரிமையை பெறுகைக் குழுவின் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**பீ. வாகீசன்,**
**மாகாண அமைச்சுப் பெறுகைக் குழுவின் தலைவர்,**
**மகளிர் விவகார அமைச்சு, வட மாகாணம்,**
**04, புருதி ஒழுங்கை, அரியாலை,**
**யாழ்ப்பாணம்.** **திகதி: 2024-10-07.**



**இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம்**
**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

| ஒப்பந்த இல. | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| RDA/RM&M/NP/RMTF/2024-09 | காரைநகர் சுற்றுவட்ட வீதிக்காக Dense Graded Aggregate Base Course (DGABC) வழங்கல் [B 197] (2.000 – 4.000 km) |
| RDA/RM&M/NP/RMTF/2024-10 | காரைநகர் சுற்றுவட்ட வீதிக்காக நிலக்கீழ் கொங்கிறீற் (Wearing Course) வழங்கல் [B 197] (2.000 – 4.000 km) |

தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறையின் கீழ் மேலுள்ள பணிக்காக விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் 2024 ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் 2024 ஒக்டோபர் 18 ஆம் திகதி வரை www.rda.gov.lk மற்றும் www.mohsl.gov.lk என்ற வீ.அ.அ. மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு இணையதளங்களை பார்ப்பதற்கு கோரப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு (வட மாகாணம்)**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**
**கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்**



## மக்கள் வங்கி

### பிராந்திய தலைமை அலுவலகம், கம்பஹா
### மீட்கப்படாத அடகு நகைகளை ஏலத்தில் விற்றல்.

கம்பஹா பிராந்தியத்தில் மக்கள் வங்கியின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் என்பவற்றில் 2023.08.31ஆம் திகதி வரை (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) அடகு வைக்கப்பட்டு 2024.11.08ஆம் திகதி கொடுக்கல் வாங்கல் முடிவடையும் வரை மீட்கப்படாத, தங்க நகைகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மற்றும் இடங்களில் மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

**ஏலவிற்பனை நடத்தப்படும் திகதி 2024.11.09 மற்றும் 2024.11.10**

| ஏலவிற்பனை நடைபெறும் இடம் | தெல்கொட - 118 | நீர்கொழும்பு - 034 | ஜா - எல - 239 | கம்பஹா - 026 | கிரிபத்கொட - 237 |
|---|---|---|---|---|---|
| கிளை | தெல்கொட<br>பூகொட<br>யக்கல<br>மல்வான<br>கிரிந்திவெல | நீர்கொழும்பு<br>மரந்தகஹமுல<br>கொச்சிகடை<br>சீதுவ<br>கட்டுநாயக்க | ஜா-எல<br>வத்தளை<br>கந்தான<br>பமுணுகம<br>றாகம | கம்பஹா<br>மீறிகம<br>வெயன்கொட<br>நிட்டம்புவ<br>மினுவன்கொட | கிரிபத்கொட<br>கடவத்த<br>மஹர<br>களனி<br>கனேமுல்ல |
| சேவை நிலையம் | வெலிவேரிய<br>தொம்பே<br>முதுன்கொட,<br>ஊராபொல | கட்டான<br>பிட்டிபன<br>நீர்கொழும்பு<br>பிரதான வீதி<br>திவுலபிட்டிய<br>தெமங்ஹந்திய<br>ரத்தொழுகம<br>எவரிவத்த | ஏகல<br>வெலிகம்பிட்டிய<br>தெஹியகாத<br>எலகந்த<br>வெலிசர<br>மகபாகே<br>பட்டுவத்த | ஜா-எல வீதி<br>உடுகம்பொல<br>கொடதெனியாய<br>பல்லேவெல<br>நைவல<br>வத்துபிட்டிவல<br>திஹாரிய<br>பஸ்யால<br>ஆண்டிஅம்பலம | மாவரமண்டிய<br>கிரில்லவல<br>கடவத்த<br>நகரம்<br>என்டேரமுல்ல<br>பேலியகொட<br>சிங்ஹாரமுல்ல<br>வெலிபில்லேவ |

மேற் குறிப்பிடப்பட்டுள்ளபடி நடத்தப்படவிருக்கும் இந்த ஏலவிற்பனையை மீண்டும் அறிவித்தல் வழங்காமல் வங்கியின் தற்றுணிவின்படி இரத்துச் செய்வதற்கு, ஒத்திவைப்பதற்கு அல்லது ஒருங்கிணைத்து நடத்துவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், இலக்கம் 131, கண்டி வீதி, முதுன்கொட, பெலும்மஹர
தொலைபேசி இலக்கம் : 033-2223880

PEOPLE'S BANK
Pride of the Nation


Daily News Classifieds, the Housewives' companion

THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

MINISTRY OF IRRIGATION

# INVITATION FOR BIDS (IFB)

**Climate Resilience Multi-Phase Programmatic Approach**
**(L.N.:8996-LK)**

## NATIONAL COMPETITIVE BIDDING

**IMPROVEMENTS TO THE EXISTING OFFICE BUILDING OF CRESMPA-PCT AND REHABILITATION WORKS AT MINISTRY OF IRRIGATION**

Contract No: SLMOI/CRES/PCT/W/NCB/37

# Extension Notice

**Bid Submission Deadline of Procurement of Improvements to The Existing Office Building of CResMPA-PCT and Rehabilitation Works at Ministry of Irrigation SLMOI/CRES/PCT/W/NCB/37 will be Extended till 14th October 2024, at or before 11.00 a.m.**

**Chairman,**
**Project Procurement Committee**
**Climate Resilience Multi-Phase Programmatic Approach**
**No. 11, Jawatta Road,**
**Colombo 05.**

07th October 2024

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 85,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள்**
**2024 ஒக்டோபர் 09ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09125A103 | LKA18225D112 | LKA36425J105 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 40,000 | 35,000 | 10,000 | 185,000 |

| | |
|---|---|
| ஏலவிற்பனைத் திகதி | : 2024 ஒக்டோபர் 09 |
| தீர்ப்பனவுத் திகதி | : 2024 ஒக்டோபர் 11 |
| வழங்கப்படும் திகதி | : 2024 ஒக்டோபர் 11 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2024 ஒக்டோபர் 09 புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) மற்றும் அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்க;டாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாமென்ற அதேவேளை மேலே குறிப்பிட்டவாறு குறைந்தபட்ச விலைக்குறிப்பீட்டுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 2332319 |
| பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

✳ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**கே.எம்.எஸ்.சி.குலதுங்க**
**பதில் பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

## கொட்டிகாவத்த முல்லேரியா பிரதேச சபை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், கொலன்னாவ பிரதேச செயலாளர் பிரிவில், 502 சீ ராஜசிங்ககம புதிய கிராம சேவையாளர் பிரிவில் உடுமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள கொட்டிகாவத்த முல்லேரியா பிரதேச சபைக்குரித்தான உடுமுல்ல பொது மயானத்தில் அமைந்துள்ள நினைவுச் சின்னங்களில் புதைக்கப்பட்டுள்ள சடலங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள தேவையாகவுள்ளது.

இந்த நினைவுச் சின்னங்களில் புதைக்கப்பட்டுள்ள நபர்களின் உறவினர்கள் இருந்தால் இந்தத் தகவல்களை 2024-10-25ஆம் திகதிக்கு முன் வழங்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை 0112-410288 மற்றும் 0112-410770 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தின் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவிலிருந்து மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**2024-10-07**
**செயலாளர்,**
**அதிகாரபூர்வமான கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி,**
**கொட்டிகாவத்த முல்லேரியா பிரதேச சபை.**

## 2025 ஆம் ஆண்டுக்காக வழங்குநர்கள்/ ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல்

**பாதுகாப்பு அமைச்சு**

01. பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த கீழ் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களுக்காக 2025 ஆம் ஆண்டுக்கு பதிவு செய்வதற்கு நிர்மாணம், பழுதுபார்த்தல் மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு வெளிநாட்டு உற்பத்தியாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள், உள்நாட்டு உற்பத்தியாளர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஆலோசனை நிறுவனங்களிடம் இருந்து பாதுகாப்பு அமைச்சு செயலாளரினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ➢ பாதுகாப்பு அமைச்சு
- ➢ பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரி அலுவலகம்
- ➢ இலங்கை இராணுவப் படை
- ➢ இலங்கை கடற்படை
- ➢ இலங்கை விமானப் படை
- ➢ அரச புலனாய்வு சேவை
- ➢ சிவில் பாதுகாப்புத் திணைக்களம்
- ➢ தேசிய மாணவ சிப்பாய்கள் படையணி
- ➢ சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
- ➢ பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரி
- ➢ பாதுகாப்பு சேவைகள் கல்லூரி
- ➢ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்
- ➢ ரக்னா ஆரக்ஷக லங்கா நிறுவனம்
- ➢ இலங்கை கடற்கரை பாதுகாப்புத் திணைக்களம்
- ➢ ரணவிரு சேவா அதிகாரசபை
- ➢ வளிமண்டலவியல் திணைக்களம்
- ➢ பேரிடர் முகாமைத்துவத்திற்கான தேசிய சபை
- ➢ அனர்த்த முகாமைத்துவ நிலையம்
- ➢ தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையம்
- ➢ தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு

02. விண்ணப்பங்களை பெறுவது:

a. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விண்ணப்பதாரர்களுக்கு 2024.10.07 ஆம் திகதி தொடக்கம் 2024.11.08 ஆம் திகதி வரை கீழ் குறிப்பிடப்பட்ட இணையத்திற்கு பிரவேசித்து விண்ணப்பப் படிவங்களை தரவிறக்கம் (Download) செய்ய முடியும். பாதுகாப்பு அமைச்சு - www.defence.lk

b. பதிவு செய்வது தொடர்பிலான விண்ணப்பப் படிவத்தின் தொகுதி கீழ் தரப்பட்டுள்ள பாகங்களைக் கொண்டுள்ளது.

1. வழங்குநர்களை பதிவு செய்தல் தொடர்பான விண்ணப்பப் படிவம்
2. ஆலோசனை மற்றும் நிபந்தனைகள் அடங்கிய ஆவணம்
3. 46 பக்கங்கள் அளவு கொண்ட விரிவான பிரிவுகளின் பட்டியல்

03. பிரிவுக் கட்டணத்தை செலுத்துதல்:

a. உள்நாட்டு வழங்குநர் ஒருவரிடம் இருந்து ஒரு பிரிவுக்காக அறவிடப்படும் கட்டணம் ரூபா 1825/=.

b. வெளிநாட்டு விண்ணப்பதாரர் ஒருவரிடம் இருந்து ஒரு பிரிவுக்காக அறவிடப்படும் கட்டணம் 18 அமெரிக்க டொலர்கள். உள்நாட்டு பிரதிநிதிகள் மூலம் கொடுப்பனவை மேற்கொள்ளும்போது ஒரு பிரிவுக்காக அறவிடப்படும் கட்டணம் ரூபா 5750/=.

c. 2025 ஆம் ஆண்டுக்கு வழங்குநர்களை பதிவு செய்வதற்கு பிரிவுக் கட்டணத்தை செலுத்துவது இலங்கை வங்கியின் தப்ரோபேன் கிளையின் 7040119 ஆம் இலக்கம் கொண்ட கணக்கிற்கு வரவு வைக்கும் வகையில் இலங்கை வங்கியின் எந்த ஒரு கிளையிலும் வைப்பை மேற்கொள்ள முடியும். பணத்தை வைப்பிடும்போது நன்மை பெறுபவர் பெயர் பாதுகாப்புச் செயலாளர் என குறிப்பிட்டு வைப்புச் சீட்டில் "Suppliers Registration Category fee – 2025" என்று குறிப்பிடுவது அவசியமாகும். (தானியக்க பண வைப்பு இயந்திரம் மூலம் பணம் செலுத்துவதன் காரணமாக "Suppliers Registration Category fee – 2025" என்பதை குறிப்பிட முடியாது என்பதோடு அந்த வைப்பை அடையாளம் காண்பது கடினம் என்பதால் விண்ணப்பதாரர்கள் தானியக்க பண வைப்பு இயந்திரங்கள் மூலம் பண வைப்புச் செய்வதை தவிர்த்தல் வேண்டும்)

d. வெளிநாட்டு வழங்குநர்கள் (உள்நாட்டு பிரதிநிதி ஒருவர் இல்லாத பட்சத்தில்) 2025 ஆம் ஆண்டுக்கு பதிவு செய்தல் பிரிவு கட்டணத்தை Swift Code பயன்பாட்டின் மூலம் வங்கிக்கு பணம் செலுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| Swift No | - | BCEYLKLX |
| Branch Code | - | 747 |
| Account No | - | 7040119 |

e. பிரிவுக்காக கட்டணம் செலுத்தும்போது பண வைப்பு காகிதத்தின் மூலப் பிரதியை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

f. உள்நாட்டு வழங்குநர்கள் மற்றும் வெளிநாட்டு வழங்குநர்கள் பிரிவு கட்டணத்தை 2024.10.07 ஆம் திகதி தொடக்கம் 2024.11.08 ஆம் திகதி வரையான காலத்தில் செலுத்தி முடித்தல் வேண்டும். 2024.11.08 ஆம் திகதிக்கு பின்னர் செலுத்தப்படும் பிரிவு கட்டணம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு பொறுப்பேற்காது.

04. ஒரு விண்ணப்பதாரரினால் செலுத்தப்பட்ட பிரிவு கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரரினால் விடுபடல் அல்லது கவனயீனத்தால் ஏதேனும் விபரம் முன்வைக்கப்படாதிருத்தல், பிழையான பிரிவை அடையாளம் இட்டிருத்தல் போன்ற காரணங்களினால் விண்ணப்பம் நிராகரிக்கப்படக் கூடும் என்பதோடு, அவ்வாறான சந்தர்ப்பங்களில் கூட பிரிவு கட்டணம் மீளளிக்கப்படாது என்பதை அறியத்தருகிறோம்.

05. முறையாக பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் குறித்த ஆவணங்களுடன் 2024 நவம்பர் மாதம் 08 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கொண்டுவந்து பாதுகாப்பு அமைச்சின் நுழைவாயிலில் கடிதங்களை ஏற்கும் அதிகாரிக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

**கணக்காளர் (வழங்கல்கள்)**
**பாதுகாப்பு அமைச்சு**
**பாதுகாப்பு தலைமையக வளாகம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**

06. 2025 ஆம் ஆண்டுக்கு வழங்குநர்களை பதிவு செய்தல் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கும் உரிமை பாதுகாப்பு அமைச்சு செயலாளர் வசமானதாகும்.

**செயலாளர்**
**பாதுகாப்பு அமைச்சு**


## செலான் வங்கி பிஎல்சி

### பெறுமதியான சொத்துக்கள் விற்பனைக்கு

| மாவட்டம் | இல. | நிலத்தின் வகை / சொத்தின் முகவரி | வகை | A: | R: | :P |
|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 1 | இல.133, எலகந்த வீதி, வெளிகன்ன, வாக GPS Coordinates: 6.890070, 80.148035 | விடுமுறை விடுதியாக [illegible] | 4 | 1 | 15.45 |
| | 2 | இல.59/4, கொழும்பதந்திரி மாவத்தை, எதுல் கோட்டை, GPS Coordinates: 6.894667, 79.908150 | வெற்று நிலம் | 0 | 0 | 22.00 |
| | 3 | இல. 545/3, இரத்ன மாவத்தை, அரவ்வல்ல, பன்னிப்பிடிய. GPS Coordinates: 6.823625, 79.932442 | வணிகக் கட்டிடம் | 0 | 3 | 15.00 |
| | 4 | இல. 5/2, மெத மாவத்தை, சிந்தமுல்ல, பிலியந்தல. GPS Coordinates: 6.816381, 79.957069 | குடியிருப்பு வீடு | 0 | 0 | 11.10 |
| | 5 | இல. 66/1, 66/2, 66/3, 66/4, சான்சி ஆராச்சி கார்டன்ஸ், கொழும்பு 12. GPS Coordinates: 6.934092, 79.860917 | வணிகச் சொத்து | 0 | 0 | 32.40 |
| | 6 | இல. 17, சமகி மாவத்தை, பொருபனை, GPS Coordinates: 6.812781, 79.890827 | வணிகச் சொத்து | 0 | 0 | 29.31 |
| | 7 | இல. 07, ஜயந்தி மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்ல. | குடியிருப்பு வீடு | 0 | 0 | 20.25 |
| | 8 | இல. 08, 4வது ஒழுங்கை, பமுனுவ வீதி, மஹரகம, | வணிகக் கட்டிடம் | 0 | 0 | 12.00 |
| | 9 | 300/2, 7ஆவது ஒழுங்கை, வெலிசஹேன எஸ்டேட், மீகொட. GPS Coordinates: 6.863776, 80.048639 | குடியிருப்பு வீடு | 0 | 0 | 20.00 |
| காலி | 10 | ஸ்ரீ புஸ்பராம மாவத்தை, மீடியகொட, அம்பலங்கொட GPS Coordinates: 6.193556, 80.092750 | தொழிற்சாலை மற்றும் குடியிருப்பு வீடு | 0 | 1 | 20.39 |
| | 11 | அருத்வள வீதி, ரொன்னதுவ, அம்பலாங்கொட | வெற்று நிலம் | 0 | 0 | 27.80 |
| | 12 | இல. 62/23, தர்மராஜ மாவத்தை, படவலமுல்ல, காலி | வெற்று நிலம் | 0 | 0 | 23.00 |
| | 13 | இல. 342/10, கொக்ஹா ஒவிட, பத்தேகம வீதி, மீபாவல, காலி | வெற்று நிலம் | 1 | 1 | 5.64 |
| | 14 | ரூமஸ்ஸல வீதி, போனவிஸ்தவ வீதி, உனவட்டுன | வெற்று நிலம் | 0 | 2 | 6.82 |
| | 15 | ரூமஸ்ஸல வீதி, போனவிஸ்தவ வீதி, உனவட்டுன | வெற்று நிலம் | 0 | 2 | 3.10 |
| | 16 | அம்பேகம, வெளிவிட்டிய. C3B & C3C துண்டுகள் | வெற்று நிலம் | 0 | 2 | 0 |
| கம்பஹா | 17 | கொழும்பு - கண்டி வீதி, கஜுகம, பஸ்யால (16 துண்டுகள்) GPS Coordinates: 7.187882,80.140253 | வெற்று நிலம் | 1 | 1 | 2.70 |
| | 18 | இல.434, ஹெனவத்த வீதி, கோனவல, களனி | வெற்று நிலம் | 0 | 0 | 20.00 |
| | 19 | சமகி பிளேஸ், வல்பொல, அத்தனகல | குடியிருப்பு வீடு | 0 | 0 | 22.56 |
| | 20 | இல. 341/20, போருதொட வீதி, பலங்கதுரே, நீர்கொழும்பு | வெற்று நிலம் | 0 | 1 | 21.10 |
| | 21 | இல. 146/3, நத்துடுவ, களனி | குடியிருப்பு வீடு | 0 | 0 | 12.93 |
| | 22 | பாடசாலை ஒழுங்கை, கந்தானை | வெற்று நிலம் | 0 | 1 | 26.30 |
| | 23 | கொடிகமுவ வீதி, மாதகஹமுல | வெற்று நிலம் | 0 | 0 | 36.53 |
| ஹம்பாந்தொட | 24 | கங்கசிரிபுர, திஸ்ஸமஹாராம | வெற்று நிலம் | 0 | 0 | 19.96 |
| | 25 | கங்கசிரிபுர, திஸ்ஸமஹாராம | வெற்று நிலம் | 0 | 0 | 13.05 |
| | 26 | இல.128, மனஜ்ஜாவ, அம்பலன்தொட GPS Cordinates: 6.128232, 81.058507 | குடியிருப்பு வீடு | 0 | 1 | 38.50 |
| கண்டி | 27 | மதியாவத்தை எஸ்டேட், தெம்பிலிகம, உடகம, கம்பொல. GPS Coordinates: 7.137920, 80.564690 | வெற்று நிலம் | 0 | 2 | 37.40 |
